# ஞானச்சுடர்

பங்குனி

207 ஆவது மலர்

2015




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.**

**பொருள் :** நிலையான இன்பத்தை விரும்புகின்றவர்கள் நிலையில்லாத இன்பத்தை விரும்பித் தருமமல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள். (173)

**இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்.**

**பொருள் :** ஐம்புலன்களையும் வென்ற அறிவுடையோர் தாம் வறியர் என்று நினைத்து அதனைத் தீர்த்தற்குப் பிறர் பொருளை விரும்பார். (174)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை
## முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



உள்ளத்தி னுள்ளே யுலாவு மொருவனை
எள்ளத் தனையும் மறவா தேத்தினால்
பள்ளத்தில் வீழ்ந்து பரிதவி யோமே
உள்ளத்தைச் சொன்னோ முயிர்த்துணை யிதுவே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 23

உற்றார் பெற்றா ருடன்பிறந் தாரினும்
நற்றவத் தோரே நந்துணை யாகுங்
குற்றங் கடிந்து குணத்தை மேற்கொண்டு
செத்தவர் போலத் திரிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 24

உறுதியுண் டாகு முண்மையொன் றுளது
சிறுமதி சூடிய சிவபெரு மானை
இறுதியுள் ளளவும் மறவா தேத்திப்
பொறுதியா யிருந்து பூரண மாகுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்



வெளியீடு - 02 207ஆவது மலர்

2015 பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| திருநீறு | கு. சோமசுந்தரம் | 01 -02 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 03 -07 |
| அறம் செய்ய விரும்பு | கு. சிவபாலராஜா | 08 -11 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 12 -14 |
| வாழ்வில் சமயம் | S. குணாகரன் | 15 -16 |
| சைவநெறி | பூ. சோதிநாதன் | 17 -19 |
| வேத சிவாகமப் பணி... | தி. மயூரகிரிசர்மா | 20 -24 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 25 -28 |
| கண்ணீரும் தண்ணீரும் | முருகவே பரமநாதன் | 29 -33 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 34 -35 |
| சிறுவனின் சந்தேகம் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 36 -39 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 40 -41 |
| ஆலயம் தொழுவது... | பு. கதிரித்தம்பி | 42 -43 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 44 -46 |
| தவத்திரு யோகர் சுவாமி... | கே.எஸ். சிவஞானராஜா | 47 -50 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 51 -56 |
| இருபதாம் நூற்றாண்டின்... | சந்நிதியான் ஆச்சிரமம் | 57 -58 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 59 -62 |
| அப்பரும் ஆளுடைய... | அ. சுப்பிரமணியம் | 63 -65 |
| ஸ்ரீ பாலாஜி கோவில் | வல்வையூர் அப்பாண்ணா | 66 -68 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

மாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் (இளை. ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் யாவும் மக்களை நன்நெறிப்படுத்துவதாக அமைந்துள்ளது. பசித்துவரும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்குவதற்காக தினமும் அன்னதானப் பணியை வழங்கி வருகின்றது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில், சந்நிதியான் ஆச்சிரமமானது வாராந்த நிகழ்வின்மூலம் பல்வேறு மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றது என்பது மிகவும் பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

மேலும் அவர், தனது உரையில், ஞானச்சுடர் மலரானது பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வருகின்றது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

206ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி நாச்சியார் செல்வநாயகம் (முதுநிலை விரிவுரையாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். நாம் இறைவனை எப்படி வழிபடவேண்டும், எவ்வாறு வழிபட்டால் முத்தியின்பம் பெறலாம் ஆகிய கருத்துக்களை மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் ஞானச்சுடர் மலர் உணர்த்தி வருகின்றது.

மேலும் அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரிலே காணப்படும் விபூதியானது அடியார்களின் நோய்ப்பிணியைத் தீர்க்கும் தன்மையைப் பெற்றுள்ளது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார். இச்சுடரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள், பொன்மொழிகள் இன்னும் பல விடயங்களையும் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெளிவாகக் கூறினார்.

மேலும் இச்சுடரின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமமானது மேற்கொண்டுவரும் சமய, சமூகப் பணிகளை புகைப்படங்களுடன் அறியமுடிகின்றது. தொடர்ந்து இச்சஞ்சிகையானது பிரகாசிக்கவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆற்றங்கரை வேலவனின் அருளைப்பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்ற அருளாளர் வரிசையில் வைத்து மதிப்பிடக்கூடிய நடமாடும் தெய்வமாக விளங்கியவர்தான் முருகேசு சுவாமிகள். இவர் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்ம வாழ்க்கையில் நெறிப்படுத்தக்கூடிய செயற்பாடுகளே அவசியமானது எனக் கருதி பாமர மக்கள், இளம் சமுதாயத்தினர் போன்றோரை வழிப்படுத்தி ஆற்றிய தொண்டை அவரது ஆளுகைக்குட்பட்டவர்கள் இன்றும் கூறுவதைக் கேட்கக்கூடியதாக உள்ளது.



முருகேசு சுவாமிகளின் பெருமுயற்சியினால் 05.05.1995ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் எந்தக் குறைவுமின்றி மேலோங்கிச் செல்கின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்த 63 நாயன்மார்களை நினைவு கூரும் முகமாக "அறுபத்துமுவர் பூசையை" முதன்முதலாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தோற்று வித்த பெருமைக்குரியவர். சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு மட்டுமன்றி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகளுக்கு உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக சன்னிதி ஆலய புனரமைப்பு வேலைகளும், அங்கே நடைபெறும் பூசைகளும் சிறப்பான முறையில் நடைபெற முன்னின்று உழைத்தவர். 1920.05.23இல் அவதரித்த சுவாமிகள் இறுதிக் காலத்தில் செல்லச்சன்னிதியில் இருந்து முருகன் திருப்பாதங்களை அடைவதற்கு திருவுளம் கொண்டு 16.03.1997 ஞாயிற்றுக்கிழமை அமைதியான முறையில் இறைவனடி சேர்ந்தார். சுவாமிகளின் 18ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு 27.03.2015 வெள்ளிக்கிழமை மிகவும் பக்திபூர்வமான நிலையில் ஸ்ரீ செல்லச்சன்னிதி முருகன் ஆலயத்திலும் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் கொண்டாடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

சரவணப் பொய்கையில் தாழ்ந்து தோய்ந் தாடி
சார்ந்தறுவ ராயெழுந்து தனி யுலாவி
அரவணைத்து கார்த்திகையார் முலைப் பாலுண்டே
அவர் மடியில் தவழ்ந்தாட அம்மை கண்டே
சரவணா வா, கந்தா வா, வென்றே அன்பாய்
தன் கையா லணைத்திடவே வதன மாறாய்
கரமெல்லாம் ஈராறாய் மலர்த் தாளிரண்டாய்
காசினிபோல சன்னிதியில் கலந்த பெருமாளே

கந்தனென்று வந்தவனே வா வா வா
கார்த்திகேயா முத்துக் குமரா வா வா வா
கலியுகத்தில் அவதரித்தாய் வா வா வா
கடிவேலைத் தாங்கியவா வா வா வா
ஐங்கரனின் சோதரனே வா வா வா
அற்புதங்கள் செய்பவனே வா வா வா
அயன் தலையைக் குட்டியவா வா வா வா
அன்புடையார் நெஞ்சத்தாய் வா வா வா
ஆறுபடை வீடுடையாய் வா வா வா
அம்பலவன் நன்மகனே வா வா வா
அருள் ஞானச்சுடர் வடிவே வா வா வா
அன்னக் கந்தா அருட் கந்தா வா வா வா
வெள்ளி சட்டி கார்த்திகையாய் வா வா வா
வேடர் வள்ளி குஞ்சரியுடன் வா வா வா
விரும்புஞ் செல்லச் சன்னிதியார் வா வா வா
விளங்கும் ஆச்சிரமச் சபையில் வடிவேலவா

ஒரு போதும் மறவாத அன்பும் பாடி
ஓயாது நினைக் குஞ்சிந் தனையும்
சிறுபோதும் எனை நீ மறவாத - உயர்ந்த
சிந்தனை வரமும் வேண்டி னேனே
அருவாகி உருவாகி உலகில் - எல்லா
அன்பருமே கூவி அழைக்கச்- செல்லும்
திருவாளா தொண்டை மானாற் றூராய்
சிறந்த செல்லச் சன்னிதியிற் பெருமாளே.

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

R. கிருஸ்ணசிவம்
(அவுஸ்திரேலியா)

இ. சங்கரலிங்கம்
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

இராமசாமி திருச்செல்வம்
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

அ. வரதராசா
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

வே. நடராசா
(தும்பளை மேற்கு)

சி. கிருஷ்ணபிள்ளை J.P.
(ஆவரங்கால்)

பொதுமுகாமையாளர்
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

பொதுமுகாமையாளர்
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

சி. குமாரலிங்கம்
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

செ.க. செல்வநாயகம்
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

சோமசுந்தரம் செல்வக்குமார்
(சண்சில்க் றைக்கிளின் சென்ரர், G.P.S. றோட், க்ல்வியங்காடு)

கி. இராஜதுரை அதிபர்
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

ஜீ. ஜெயப்பிரகாஸ்
(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

யோ. சிவஉமாகரன்
(உயர் பட்டபடிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. கணபதிப்பிள்ளை (தலைவர்)

(பிரதேச உறுப்பினர், கரவெட்டி)

கு. செல்வரெத்தினம்

(நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி)

வ. துரைராசா

(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)

S. விமல்ராசா

(தேவாலயவீதி, சங்கானை)

M.B. முருகதாஸ் (கல்யாணி)

(வல்வெட்டித்துறை)

சி. வல்லிபுரம்

(தும்பளை, பருத்தித்துறை)

சபா இரத்தினசிங்கம் J.P.

(சபா றேடர்ஸ், அச்சுவேலி)

V. பரமானந்தம்

(கொள்வனவு உத்தியோகத்தர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்)

K. கேதீஸ்வரநாதன்

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

சு. மகேஸ்வரன்

(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)

தம்பிப்பிள்ளை குணரட்ணம்

(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)

S. திருவாஞ்சீஸ்வரன்

(V.S.K. மானிப்பாய்)

த. விவேகானந்தராசா

(டச்றோட், சித்தங்கேணி)

இ. புஸ்பநாதன்

(S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை)

அ. கோணேஸ்கரன்

(தில்லையம்பதி, கோண்டாவில்)

இ. சந்திரசேகரன்

(மாசியப்புலம் வீதி, ஏழாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. அழகேசன்
(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)
க. தர்மநாயகம்
(மஞ்சத்தடி, இணுவில்)
பொ. ஞானப்பிரகாசம்
(கரணவாய் தெற்கு)
உரிமையாளர்
(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)
இ. வீரசிங்கக்குருக்கள்
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
அதிபர்
(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)
அதிபர்
(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)
திருமதி சி. தருமலிங்கம்
(இமையாணன், உடுப்பிட்டி)
ஆனந்தராசா சீதா
(ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)
கி. அருள்நாதர்
(பாலாவி தெரு, பொலிகண்டி)
சறோஜினிதேவி மாணிக்கராசா
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)
கந்தையா காசிராசா
(குப்பிளான் தெற்கு)
மார்க்கண்டு முத்துப்பிள்ளை
(அத்தியடி, யாழ்ப்பாணம்)
திருமதி V. கௌரி
(கோயில் வீதி, நல்லூர்)
லலிதா சண்முகலிங்கம்
(திருமகள் வீதி, அரியாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. காளிங்கநடனம்
(கொக்குவில்)
பா. சிவதர்ஷினி
(கலையகம், அல்வாய்)
க. ஜெயபாலகணேசன்
(சிறுப்பிட்டி தெற்கு)
Dr. அ. செந்தில்குமரன்
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)
இ. பாஸ்கரன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
த. சிவானந்தன்
(சண்டிலிப்பாய் வடக்கு)
சி. பத்மகுமார்
(இணுவில் தெற்கு)
அதிபர்
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
பா. சுதாகரன்
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உரும்பராய்)
வ. கெங்கநாதன்
(நீர்வேலி)
P. நடராசா
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)
சி. சிவகுமார்
(ஆவரங்கால்)
S. முரளிதரன்
(அச்சுவேலி)
V. கருணாகரன்
(சங்கானை)
வி. யோகேஸ்வரி
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
சண்முகம் தனலட்சுமி
(கரணவாய்)
வ. இரத்தினசிங்கம்
(கம்பர்மலை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருநீறு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சைவசமயிகள் நெற்றியிலும் மற்றும் குறிப்பிட்ட அவயவங்களிலும் அவசியமாகத் தரிக்கவேண்டியது விபூதி. விபூதி என்பதன் பொருள் மேலான செல்வம் என்பதாகும். விபூதி தவறாமல் அணிந்து வருபவர்களுக்கு ஒரு பொல்லாப்பும் நேராது. சகல செல்வங்களும் கிட்டும், முத்தியும் கைகூடும். மந்திரம், தந்திரம், மருந்து என மூன்றுமாக விளங்கித் தீரா நோய் தீரத்தருளும் வல்லமை விபூதிக்கு உண்டு. சிவசின்னமாக விளங்குகின்ற விபூதிக்குத் திருநீறு என்ற பெயரும் உள்ளது. சமய குரவர்களால் போற்றித் துதிக்கப்பட்டது திருநீறு.

பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுவதால் பெறப்படுவது திருநீறு. அக்கினிக்குச் சுத்தி செய்யும் தன்மை உண்டு. மலங்களை எரித்து, உயிரை அவற்றின் பிடியில் இருந்து விடுவித்துச் சிவத்தோடு சேர்க்கின்ற நிகழ்வினைக் குறிப்பதாக இது அமைகின்றது. வெண்மையான திருநீறு தூய்மையின் குறியீடு ஆகவும் திகழ்கின்றது. திருநீற்றை வழிபடல், சிவத்தை வழிபடுதலுக்குச் சமம் ஆகும்.

நித்திரை விட்டெழுந்த உடனும், ஸ்நானஞ் செய்த பின்னரும், கடவுள் வழிபாட்டின் போதும், உணவு உண்பதற்கு முன்பும், உண்ட பின்பும், நித்திரை செய்யப் புகும்போதும் அவசியமாக விபூதி தரித்துக் கொள்ளல் வேண்டும்.

விபூதியை, பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும் அல்லது சுத்தமான வெள்ளிக் கிண்ணத்திலேனும், தட்டிலேனும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். சிவத்தின் சின்னம் அல்லவா திருநீறு. ஆகையால் திருநீற்றைப் பயபக்தியோடு பேணிப் போற்றிவர வேண்டும். விபூதியை நிலத்திலே சிந்தக்கூடாது; காற்றிலே ஊதிவிடக் கூடாது; தூண்களிலோ, சுவர்களிலோ கொட்டிவிடக் கூடாது; கண்ட கண்ட இடங்களிலே போடுதல் ஆகாது. இவ்வாறு செய்தல் திருநீற்றை அவமதித்தல் ஆகும். திருநீற்றை அவமதித்தல் என்பது சிவபெருமானை நிந்தித்தலாகும். சிவநிந்தை மிகப் பாரிய பாவகாரியம் என்பதை நினைவிற் கொள்ளுதல் அவசியம். திருநீற்றைச் சிவமாகக் கருதுபவர்கள் சைவர்கள்.

விபூதி தரிக்கும்போது, வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும். நடந்து கொண்டாயினும், கிடந்து கொண்டாயினும் விபூதி பூசுதல் ஆகாது.

விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்? இது பலருக்குத் தெரியாது. விபூதியை நிலத்திலே சிந்தாவண்ணம் மிக்க அவதானமாக எடுத்து, அண்ணாந்து கொண்டு, "சிவ சிவ" என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும். இடது கையினால் விபூதி தரித்தல் ஆகாது. தற்செயலாக விபூதி நிலத்திலே கொட்டுண்டு விட்டால், இறைவனிடம் மன்னிப்புக்கேட்டுக் கொட்டிய விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.

விபூதி தாரணம் இரண்டு வகைப்படும். ஒன்று உத்தூளனம்; மற்றையது திரிபுண்டரம். சமய தீட்சை பெற்றவர்களே, அநுட்டானம் பார்க்கும்போது நெற்றியிலும் மற்றும் குறிப்பிட்ட

*ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஆனால் ஒரே ஒருமுறை முடிவு எடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயவங்களிலும் திருநீற்றினால் திரிபுண்டர மாகப் பூசுவர். திரிபுண்டரம் என்பது மூன்று குறியாக விபூதி தரித்தல். மற்றெல்லோரும் விபூதியை உத்தூளனமாக பூசுவர். நெற்றி யிலும் மற்றைய இடங்களிலும் மூன்று குறி களாக அன்றி பரக்க விபூதியைப் பூசுதல் உத்தூளனம் எனப்படுகிறது. தீட்சை பெற்ற வர்களும், அநுட்டானம் செய்யும் வேளை யைத் தவிர்ந்த ஏனைய நேரங்களில் விபூதியை உத்தூளனமாகவே அணிவர். தீட்சை பெறாத வர் விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்தல் ஆகாது. சிலர் நெற்றியில் அழகுக்காக ஒரு கீறாகவோ, அல்லது மூன்று குறுகிய குறி களாகவோ விபூதியைத் தரிக்கின்றனர். அது விதிமுறைக்குப் புறம்பானது. விதியை மீறு தல் பாவகாரியமாகும். நாடகங்களிலும், சினி மாக்களிலும் வில்லன் வேடத்தில் நடிப் போரின் நெற்றியில் விபூதியைத் தரிக்கச் செய்து, அதனைக் கொச்சைப்படுத்துவது, சைவ சமயிகளின் மனங்களைப் புண்படுத்தும் செயலாகும். அவ்வாறு செய்பவர்கள் பாவ காரியஞ் செய்பவர்களும் ஆகின்றனர். விபூதி யைத் துர்ப்பிரயோகஞ் செய்வோர் துன்பத்தை அனுபவிப்பர்.

சிரம், நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப் புறங்கள் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் உடலின் பதினாறு இடங்களில், தீட்சை பெற்றவர்கள், அனுட்டானம் பார்க்கும்போது விபூதியை திரிபுண்டரமாக முறைப்படி அணி வர். மதுபானமும், மாமிச போசனமும் இல் லாதவராய், ஆசாரம் உடையவராய், சிவ தீட்சை பெற்றவராய் இருப்பவரே ஸ்ரீ பஞ் சாட்சர செபம் செய்வதற்கும், திரிபுண்டரமாய் விபூதி அணிந்து அனுட்டானம் செய்வதற்கும் அருகதையுடையவர். ஏனையோர் இவற்றைச் செய்தால், குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்ட வரின் நிலைக்கு ஒப்பாவர்.

ஆலய சிவாச்சாரியார், சிவனடியார் போன்றோர் விபூதி தரும்போது, அவர்களைத் தாழ்ந்து வணங்கி, இரு கரங்களையும் நீட்டி பயபக்தியோடு விபூதியைப் பெற்று நெற்றியி லும் மார்பிலும் அணிய வேண்டும். மிகுதி யைத் தூவி விடாது பத்திரப்படுத்தி வைத் துக்கொள்ள வேண்டும். விபூதி, சிவப்பிரசாதம்; அதனைப் பேணி முறைப்படி பயன்படுத்த வேண்டியது சைவர்களின் கடமையாகும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

# குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 06 | பங்குனி | 23 | செவ்வாய் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 20 | சித்திரை | 07 | திங்கள் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 22 | சித்திரை | 09 | புதன் | மங்கையற்கரசியார் |
| மே | 12 | சித்திரை | 29 | செவ்வாய் | திருநாவுக்கரசர் |
| மே | 23 | வைகாசி | 09 | சனி | நமிநந்தியடிகள், சேக்கிழார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்தினுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்

(யாழ்ப்பாணம் - காரைநகர்)

கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட வருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி



**பதவுரை:-**

கோகழி மேவிய கோவே போற்றி- திருவாவடு துறையில் விரும்பி எழுந்தருளிய அரசனே நினக்கு வணக்கம்; ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி- திருவீங்கோய்மலையில் எழுந்தருளியிருக்கும் எம் எந்தையே வணக்கம்; பாங்கு ஆர் பழனத்து அழகா போற்றி- அழகு நிறைந்த திருப்பழனத்தில் வீற்றிருக்கும் அழகனே நினக்கு வணக்கம்; கடம்பூர் மேவிய விடங்கா போற்றி- திருக்கடம்பூரில் விரும்பி எழுந்தருளியிருக்கும் இயல்பாகத் தோன்றியவரே நினக்கு வணக்கம்.

கோகழி- திருவாவடுதுறை. திருப்பெருந்துறை என்னாமோ வெனின், என்னாம். என்னை? திருப்பெருந்துறையும் கோகழியும் வேறு வேறு தலங்களாதல்,

"நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி யெழுகோகழிக் கரசை" (பண்டாய 5)

என அடிகள் திருவாக்காற் பெறுதுமாகலின்,

ஈங்கோய்மலை- திருவீங்கோய்மலை. இம்மலையைப் பற்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனத்திரள்வந்திழியுஞ் சார லீங்கோய் மலை" ஞான 70:1.

"ஏலத்தொடு நல்லில வங்கமழு மீங்கோய் மலை" ஞான 70:2.

"எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய்மலை ஞான 70:11.

எனத் தேவாரம் கூறும். எந்தை என்றது இறைவனை, "ஈங்கோய் நீங்கா இறைவனை" ஈங்கோய் நீங்கா துறையும் இறைவன்" (நாவு 268:7, 273:10) எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

பாங்கு- அழகு. "ஏரும் வனப்பு மெழிலு.... பாங்கு மம்முஞ் சொக்கும்..... அழகின் பெயர்" எனப் பிங்கலந்தையில் (7:183) வருதல் காண்க.

பழனம்- திருப்பழனம். "படுமாலை வண்டறையும் பழனம்" "பண்ணிலவு பைம்பொழில் சூழ் பழனம்" (நாவு 227:1; 232:2) என வருதல் காண்க.

கடம்பூர்- திருக்கடம்பூர். "பறையொடு சங்க மியம்பப் பல்கொடிசேர் நெடுமாடம், கறையுடைவேல் வரிக்கண்ணார் கலையொலிசேர் கடம்பூரில்" "பலிகெழு செம்மலர்சாரப் பாடலொ டாடலறாத, கலிகெழு வீதிகலந்த கார்வயல்சூழ் கடம்பூரில்" (ஞான 204:4; 204:7) என வருவன காண்க. விடங்கன்= வி+டங்கன்; டங்கம்- உளி. விடங்கன் உளியினாற் செதுக்கப்படாதவன்; என்றதுதானே யுண்டானவன்; சுயம்பு லிங்கம் என்பது கருத்து. "கையார் கழலார் விடங்கா போற்றி" என அப்பரடிகள் (தே 271:3) அருளியமையுங் காண்க.

அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி- தன்னைச் சார்ந்தவருக்கு அருள்செய்யும் தந்தையே நினக்கு வணக்கம்; இத்தி தன்னின் கீழ் இரு மூவர்க்கு அத்திக்கு அருளிய அரசே போற்றி- இத்தி மரத்தின் நீழற்கீழிருந்து இயக்கியர் அறுவர்க்கும் கடம்பவனத்தில் ஐராவத யானைக்கும் அருள் செய்த அரசனே நினக்கு வணக்கம்; தென் நாடு உடைய சிவனே போற்றி- தெற்கின்கணுள்ள பாண்டி நாட்டினைப் பழமையான பதியாகவுடையவனே நினக்கு வணக்கம்; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி- தென்னாட்டையுடையையாயினும் எந்நாட்டவர்க்கும் தலைவனே நினக்கு வணக்கம்; ஏனக் குருளைக்கு அருளினை போற்றி- பன்றிக் குட்டிக்குத் தாய்ப்பன்றியாய்க் கிடந்து அருள் செய்தவனே நினக்கு வணக்கம்; மான கயிலை மலையாய் போற்றி- பெருமை பொருந்திய கயிலைமலையை உறைவிடமாகக் கொண்டவனே நினக்கு வணக்கம்; அருளிட வேண்டும் அம்மான் போற்றி- அருள் செய்ய வேண்டும் அம்மானே நினக்கு வணக்கம்; இருள்கெட அருளும் இறைவா போற்றி- ஆணவ இருள் கெடும்படி அருள்புரியும் தலைவனே நினக்கு வணக்கம்; அடியேன் தமியேன் தளர்ந்தேன் போற்றி- நினக்கு அடியவனாகிய தனியேன் தளர்ச்சியடைந்தேன்; அத்தளர்ச்சியை நீக்கிக் காத்தருள வேண்டும் நினக்கு வணக்கம்.

இறைவன் எல்லாவுயிர்களையும் சார்ந்திருப்பினும் நமக்குச் சார்பாவான் இறைவனன்றிப் பிறரில்லையென வுணர்ந்து தன்னை வந்தடைந்தவர்களுக்கு அருள் செய்பவனாதலின் 'அடைந்தவர்க்கருளுமப்பா' என்றார்.

இத்தி தன்னின்கீழ் இருமூவர்க்கு அருளிய என்றது இறைவன் பட்ட மங்கையென்னும் தலத்தில் இத்திமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்து இயக்கியர் அறுவர்க்கு அட்டமாசித்திகளை உபதேசித்தருளிய திருவிளையாடலைக் குறித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய அதுவும்" 62-3

எனக் கீர்த்தித்திருவகவலில் வந்தமை காண்க.

### *அத்திக்கருளிய வரலாறு:*

முன்னொரு காலத்திலே துருவாச முனிவர் காசியிலே ஒரு சிவலிங்கந் தாபித்து பூசை செய்து தோத்திரம் பண்ணும்பொழுது சிவபிரான் திருமுடியினின்றும் ஒரு தாமரைப் பூ விழ அதனைத் தம்முடைய இரண்டு கைகளாலும் ஏந்திக் கண்ணிலும் சிரசிலும் ஒற்றிக்கொண்டு மகிழ்ச்சி மிகச் சுவர்க்கலோகத்துக்குப் போனார். போகும்பொழுது இந்திரன் அசுரர்களைக் கொன்று அமராவதிக்கு மீள்வானாகி வெள்ளையானை மேற்கொண்டு பவனி வந்தான்; அப்பொழுது தேவர்கள் அருகுவந்து ஒவ்வொரு கையுறைகளைக் கொடுத்து வணங்கினார்கள். துருவாச முனிவரும் தம் கையிலிருந்த தாமரைப்பூவை நீட்ட இந்திரன் அதனை வாங்கி வெள்ளை யானையின்மேல் வைத்தான். வெள்ளையானை தாமரைப் பூவைக் கீழே தள்ளிக் காலினால் மிதித்துச் சிந்தியது. துருவாச முனிவர் அதனைக்கண்டு கோபங்கொண்டு சிவபெருமான் திருமுடியின்மேற் சாத்தப்பட்ட தாமரைப்பூவை வாங்கி யானை மிதித்துச் சிந்தும்படி அதன்மேல் வைத்தாய். இச்சிவத்துரோகத்தினாலே நின் சிரசு பாண்டியன் வளையினாற் சிதறக்கடவது, இவ்வியானை காட்டு யானையாகக் கடவது என்று சபித்தனர். உடனே தேவர்கள் நடுநடுங்கித் துருவாச முனிவருடைய திருவடிகளிலே விழுந்து வணங்கி இந்தச் சாபத்தைத் தீர்த்தருளுமாறு இரந்து நிற்ப முனிவருந் திருவுளமிரங்கி இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகக்கடவது என்றும், வெள்ளை யானை காட்டானையாகி நூறுவருடஞ் சென்றபின் முன்போலாகக் கடவது என்று சாபவிடுதி சொன்னார். வெள்ளையானை காட்டானையாகி நூறு வருடமுஞ் செல்லக் கடம்ப வனத்தையடைந்து பொற்றாமரை வாவியில் முழுகிச் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு காட்டு யானை வடிவம் நீங்கி வெள்ளை யானையாயிற்று. இதனைத் திருவிளையாடற் புராணம் வெள்ளை யானை சாபந்தீர்த்த படலத்துட் காண்க.

உமையம்மையார் மலையத்துவச பாண்டியனுக்கு மகளாகத் தடாதகைப் பிராட்டியார் என்னும் திருநாமத்தோடு தோன்றி அரசாண்ட பாண்டி நாட்டிலே இறைவன் சோமசுந்தர பாண்டியனாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ் செய்து அரசாண்டமை யாலும், குமரக்கடவுள் உக்கிர பாண்டியராக அவர்கள்பாற்றோன்றி அரசாண்டமையாலும், தெற்கின்கணுள்ள பாண்டி நாட்டிலே சிவவழிபாடு மிகுதியாக இருந்தமையாலும் "முளைத்தானே யெல்லார்க்கு முன்னே தோன்றி... தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப்பெற்றே னானே" (233:1) என அப்பரடிகள் அருளிச் செய்தவாறு சிவலிங்கத் திருமேனிகளுள் மதுரைச் சொக்கநாத திருமேனி மிகப் பழமையுடைமையாலும் 'தென்னாடுடைய சிவனே" என்றார். "தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை" (அம் 10) "மருவித் திகழ்தென்னன்" (தெள் 15) "என்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்" (பூவல்லி 2) வானந்தொழுந் தென்னன்" (தோணோ 8) பாண்டிநன் னாடரா லன்னே யென்னும்" (அனைப் 5) என்பவற்றில் இறைவன் சுந்தரபாண்டியராக வீற்றிருந்தமை கூறப்படுதல் காண்க.

இறைவன் தென்னாடுடையனாயினும், மற்றெந்நாட்டவர் எத்தெய்வப் பெயரான் வழிபடினும் அத்தெய்வமாய் நின்று அருள் செய்பவன் அவ்விறைவனே யாதலின்

*நீ நலமாக இருக்கும்போது உழைக்காமல் இருந்துவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்நாட்டவர்க்கும் இறைவா" என்றார். இதனை;

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும் (செய்-25)

ஆதலான் இவையி லாதான் அறிந்தருள் செய்வனன்றே"

சூத் 2.

என்னும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தானுமறிக.

ஏனம்- பன்றி, திவாகரம். (விலங்கின்) குருளை என்பது விலங்கின் பிள்ளைப் பெயர். "குருளையுங் குட்டியும் பறழும் பார்ப்பும் பிள்ளையுமறியும் கன்றுங் குழவியும் பெறுமே விலங்கின் பிள்ளைப் பெயரே" எனத் திவாகரத்து வருதல் காண்க. பன்றிக் குட்டிகளுக்குக் குருளை என்னும் பெயர் உரித்தாதல், "நாயே பன்றி புலிமுயல் நான்கும், ஆயுங் காலை குருளை என்ப" என்னுல் தொல்காப்பியத்தால் (மரபு 8) அறிக.

## *ஏனக்குருளைக்கு அருளிய வரலாறு:*

வைகையாற்றுக்குத் தெற்கே குருவிருந்துறை என்னும் ஊரிலே பிருகற்பதி இருந்து தவஞ் செய்தார். அவ்வூரில் சுகலன் என்னும் பெயரையுடைய வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுகலை. அவள் பன்னிரண்டு புதல்வர்களைப் பெற்றாள். அப்புதல்வர்கள் தாய் தந்தையர்கள் இறந்தபின் வேடரோடு கூடிக் காட்டிலே வேட்டையாடித் திரிந்தார்கள். ஒருநாள் அக்காட்டிலே தவஞ்செய்து கொண்டிருந்த பிருகற்பதியைக் கண்டு அவர் தவத்திற்கு இடையூறு செய்தார்கள். பிருகற்பதி அப்பிள்ளைகளைக் கோபித்து நீங்கள் பன்றிக் குட்டிகளாகப் பிறந்து தாய் தந்தையர்களை இழந்து வருந்தக் கடவீர்கள் என்று சபித்தார். உடனே அவர்கள் பயந்து இச்சாபம் எப்போது நீங்கும் என்றார்கள். பிருகற்பதி கோபந்தணிந்து சோமசுந்தரக் கடவுள் உங்களுக்குத் தாயாய் முலைதந்து உங்களைக் காத்துப் பாண்டியனுக்கு மந்திரிகளாக்கிப் பின் முத்தி தந்தருளுவார் என்றார். பின்பு பிருகற்பதியின் சாபவழியே அப்பன்னிரு மைந்தரும் ஒரு பன்றி வயிற்றிற் குருளைகளாகப் பிறந்திருக்குநாளில் தாய்ப்பன்றி பாண்டியன் வேட்டையில் அகப்பட்டு இறக்க பன்றிக்குட்டிகள் பசியால் வருத்தமுற்றன. இறைவன் அப்பன்றிக் குட்டிகளின் மீது திருவுளமிரங்கித் தாய்ப்பன்றியின் வடிவிற் சென்று முலைப் பால் கொடுத்து அருள் புரிந்தனன் எனத் திருவிளையாடற் புராணம் கூறும். இறைவன் ஏனக்குருளைக்கருள் செய்தமை,

"கோல மேனி வராகமே" (திருக்கமுக் 5)

"காட்டில், ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீசன் எந்தை பெருந்துறை
யாதி அன்று, கேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த கிடப்பறி
வாரெம் பிரானாவாரே"

(திருவார்த் 6)

"தாயாய் முலையைத் தருவானே" (ஆனந்த 5

என வருவனவற்றாலும் அறியப்படும்.

மானம்- பெருமை. "புகழும் மானமு மெடுத்து வற்புறுத்தலும்" (தொல் அகத் 41:14) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் கையிலைமலையை உறைவிடமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டமையின் "கயிலை மலையாய்" என்றார். "ஒலிதரு கயிலை யுயர்கிழ வோனே" (கீர்த் 146) "கயிலைப் பரம்பரனே" (நீத் 34) "கயிலை மாமலை மேவிய கடலே" (செத் 10) என வருவன காண்க.

அருளிட வேண்டும்- அருள் செய்ய வேண்டும் "எங்கள் வாழ்வே வாவென் றருளாயே" (கோயில் மூத் 7) என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க.

இருள்கெட அருளும் இறைவா என்றது அநாதிபந்தமாகிய ஆணவ மலவிருள் கெடும்படி அருள்புரியும் தலைவனே என்றவாறு. "பந்த மாகிய மலவிரு ளகற்றும் பரிதி யாயுள பல்லுயிர்க் குயிராய்" எனத் திருவாதவூரடிகள் புராணத்து (திருப்பெருந் 68) வருதல் காண்க. அடியேன் தமியேன் தளர்ந்தேன் எனக் கூட்டிப் பொருளுரைக்க.

(தொடரும்...

## நிறைவான வரலாற்றை

சொல்லும் பொருளும் சுவையுடன் தமிழும்
இரண்டறக் கலந்த வாழ்வும் வழிபாடுகளும்
தொல்லியல்ச் சான்றாய்த் தொடர் வரலாற்றைச்
சொல்லிவிட முன்னோடியாகத் தொண்டை மானாறு
செல்லச்சன்னிதியான் அற்புத வழிபாடும் மருதர்கதிர்
காமர்வழி மீண்டும் புதுப்பித்த தொன்மைப் பரிணாமமும்
எல்லாமே தெரிந்தவையாக இருந்திருந்தாலும் சுயதேடல்
களின் தூண்டலும் தேவைகளுமிருந்திருக்க முடியாது
அல்லாமல் எவையுமே தெரிந்தவையாக இல்லாது
இருந்திருந்தாலும் சுயதேடல்களின் ஆரம்பமுமிருக்காது
நில்லாமல் தேடினால் நிறைவான வரலாற்றைத் தரும்
அவன் வழிபாடுகளும் மரபுகளும் சம்பிரதாயங்களும்!

அந்நியர் படையெடுப்புக்களும் அழிவுகளும் மீண்டும்
மீண்டும் இடம் மாறிய ஆலைகளும் காரணங்களும்
சன்னிதியான் வழிபாடுகளுக்குள்ளும் மரபுகளுக் குள்ளும்
முருக வழிபாடுகள் எங்கிலும் இன்றும் வேறு விழுமியங்களும்
இந்திய இலங்கைகளில் இருவேறு தன்மைகளும்
இணைந்த விழுமியங்களும் மேலும் பல இங்கு
வந்த படை யெடுப்புக்களும் அழிவுகளும் சான்றாய்
எல்லாமாய்க் கலந்த விழுமியங்களும் அற்புதமாம்
சன்னிதியான் அருளால் காப்பாற்றப்பட்ட தொன்மைப்
பரிணாமத்துக்கிடையே சான்றுகளாய்க் கலந்து
இந்தக் கவிதைகூட அறிவின் வளர்ச்சிப்படியே
ஆவணமாகும் ஞானச்சுடரிற் தொடர்ந்து!

-இராம ஜெயபாலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் செய்ய விரும்பு

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

அறம் என்பது என்ன? வடமொழியில் அறத்தினை "தர்மம்" என்பர். நீதி, ஒழுக்கம், விழுமியம் முதலிய சொற்களும் அறம் என்பதற்கு ஒத்த கருத்துக்களையே தருகின்றன. இவை பண்டுதொட்டு வழங்கி வரும் கருத்துக்களாகக் காணப்படுவதால், பல சோதனைகளை யும், சாதனைகளையும் நிகழ்த்தியபின், இன்றும் நம் மத்தியில் தேவையான புகழ்மிக்கவை யாகவே மிளிர்கின்றன. மரபு, பாரம்பரியம், முதலியவற்றோடு அறம் தொடர்புபட்டுள்ளமை இதன் சிறப்பான இயல்பாகும். அறம், தர்மம் என்பவை, மனிதர்களையோ ஏனைய உயிரினங் களையோ ஆதரித்தல் என்னும் கருத்தையே தருகின்றன. மறம் என்பது இவற்றின் எதிர்க் கருத்தினைத் தரும். மறம் என்பது போர் நிலையைக் குறிக்கும். மேலும் தர்மம் என்பது, நற்செயல், விதி, கடமை, தர்மநூல் ஒழுக்கம், நீதி, தானம், அறம், இயற்கை முதலிய பல கருத்துக்களில் வழங்கப்படுகின்றது. அறம், என்பது கையறம், தர்மம், நீர்மை, புண்ணியம், தகுதி, சமயம், ஞானம், நோன்பு, புனிதம், கற்பு, இன்சொல், இல்லறம், துறவறம் எனப்பலவாறு பொருள் கொள்ளும். எனவே தர்மம், அறம் இரண்டும் ஒற்றுமையுடையவை போலவே இருப் பினும், இவற்றில் சிறிது கருத்து வேற்றுமைகளுமுண்டு. ஆயினும், இவை இரண்டில் எதை யாவது ஒன்றினைப் பின்பற்றி நடத்தலால் நாம் மிக்க பலன்களை இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் அனுபவிக்க முடியும்.

இந்து மதம் அறத்தை அத்திவாரமாகக் கொண்டது. இதனால் அதற்கு "வைதிக தர்மம்" என்னும் சிறப்புப் பெயர் உண்டு. இன்று "இந்து தர்மம்" என வழங்கப்படுகிறது. அறம் செய்ய விரும்பின் திரிகரண சுத்தியோடு (மனம், வாக்கு, காயம்) அதைச் செய்தல் வேண்டும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்பது வள்ளுவர் வாக்கு.

மனத்தின்கண் யாதொரு மாசும் (குற்றம்) இல்லாமல் இருப்பின் அதுவே பேரறம். (பெரிய அறம்) ஆகும். வேறு தர்மச் செயல்கள் செய்ய வேண்டிய தேவை ஏற்படாது என்றார். அறத்தின் அடிப்படையில் அன்பு அமையவேண்டும். அதாவது பிறரிடம் அன்பு காட்டும்போது, அது அறத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். "பாசம்" என்பது தன்னலமற்ற அன்பு. ஒரு தாய் தன் பிள்ளைமீது காட்டும் அன்பினை பாசம் என்பர். இங்கு, தாய் காட்டும் பாசமானது ஓர் அறச்செயலாகும். எனவே, குழந்தை வளர்ப்பானது ஒரு அறச் செயல் என உணரப்பட்டுள்ளது. இறைவன்மீது பக்தி கொள்ளுதல் ஓர் அறச்செய லாகும். (அதாவது - புண்ணியம்) சமுதாயத்தில் நாம் சமத்துவமாய் நடத்தல் ஓர் அறச் செயலாகும். உண்மை பேசுதல் ஓர் அறச் செயலாகும். ஈகையும், இரக்கமும் அறச் செயல்களே. அற நூலார் வள்ளுவப் பெருந்தகை அறம் பற்றிய பல விளக்கங்களை தமது திருக்குறள்மூலம் தந்துள்ளார். அவர் "இல்லறம்" பற்றிக் குறிப்பிடும்போது;

"இல்லறமே நல்லறம்" என்றார்.

"அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை - அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறளின்மூலம் இல் வாழ்க்கையின் மகத்துவம் கூறப்பட்டது. பிறர் பழிக்கும்படியாக ஒருவர் இல்வாழ்க்கை நடாத்துவராயின் அது சிறந்த அறமாகாது. பிறர் ஏன் பழிக்க வேண்டும்? இல் வாழ்க்கையின் நியதிகளின்படி அவன் நடப்பானாகில் பிறர்பழி வராது. இல்வாழ்வு ஒரு அறம். அவ்வறத்தை ஒழுங்காகச் செய்தல் வேண்டும்.

ஈகை எனப்படுவது யாது? "வறியார்க்கென்று ஈவதே ஈகை" என்பது வள்ளுவர் கருத்து. பொருள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதே ஈகை. செல்வர்க்குக் கொடுப்பது ஈகை அல்ல. "ஏழைக்கு இரங்கு" என்பதும் அறிக.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அ்.தொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்னும் குறள் வரிகள் இதைத் தெளிவாக விளக்கும். ஏதும் இல்லாதவர்களின் பசி போக்கினால், அதுவே நாம்தேடி வைத்த புண்ணியச் சேமிப்புகளாகும். பணத்தினை உழைத்து கண்ட கண்ட செலவுகள் செய்யாது, அப்பணத்தைக் கொண்டு இத் தொண்டினைச் செய்து மறுபிறவிக்குத் தேவையான புண்ணியச் சேமிப்புக்களை சேர்த்து வைக்குமாறு வள்ளுவர் வழிகாட்டியுள்ளார்.

பொதுவான ஓர் அறச்செயலாக "சாமான்ய தர்மம்" என்பது விளங்குகிறது. இது "இந்து அறிவியல்" முறையாகும். இத் தர்மத்தை எந்த வர்ணத்தாரும் செய்யலாம். அதுவே மேற்சொன்ன அறங்களாகும். கீழைத் தேசத்து அறம் என்பது, மேலைத் தேசத்து அறம் என்பதனை விட உயர்ந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. இங்கு கீழைத் தேசத்து அறமானது, ஒருங்கிணைந்த உயர் தன்மை கொண்ட சமூக விழுமியமாகும். இங்கு அறம் சமயமாகின்றமை யைக் காணலாம். இயற்கையை வழிபடுவது இந்து அறிவியலாகும். ஆனால், இன்று அந்த நிலைமை இல்லை. இயற்கைக்கு மாறானதொரு அற வாழ்க்கைதான் இன்று பின்பற்றப்படுகிறது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது சான்றோர் வாக்கு. இதுவும் அறமேதான். தனது தாய் தந்தையரை முறைப்படி பேணுபவன் அல்லது தொழுபவன் அறம் செய்கின்ற பேறு பெறுகின்றான். இக்காலத்தில் இது "சிதைவுற்ற அறமாகவே" காணப்படுகிறது. பெற்றோரைத் தொழுதல் நடைமுறையில் அரிதாகக் காணப்படுகின்றமை கவலை தரும் விடயம். பிரதான அறச் செயல்களில் ஒன்றுதான் "இறைவனை வணங்குதல்". இதை "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்கின்றார்கள். பிறருக்கு எம்மால் இயுன்றதைக் கொடுத்து உதவுதல்தானே தர்மம். ஆகவே, "இயல்வது கரவேல்" என்று நீதிநூல் போதிக்கின்றது.

திருமூலர் திருமந்திரத்தில் "பசுவுக்கு ஒரு வாயுறை" என்பதால் அதன் சிறப்பு சிந்திக்கற்பாலது. ஒருவருக்கு இம்மையிலும், மறுமையிலும் பரிசுத்த இன்பம் கிடைக்க வேண்டுமெனில் தர்மம் செய்தல் வேண்டும். முற்பிறப்பில் செய்த பூர்வ புண்ணிய பலன்களாலும், இப்பிறவியில் நாம் செய்யும் தவ விரதங்களினால் கற்றறிந்தோரின் நெருக்கமான உறவு சிநேகிதங்களினால் எமக்கு இப் பரிசுத்த இன்பம் கிடைக்கும் என்று கந்தபுராணம் குறிப்பிடு கின்றது.

"தருமம் என்றொரு பொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
அருமையின் வரும் பொருள் ஆகு மன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற்கொண்ணுமோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் செய்ய எண்ணுவதும் அறமே யாகும். இதன் அடுத்த நிலையில் அறச் "சொல்" என்பது அமைகின்றது. இது அறத் தின் "இயக்க நிலை" என்பதாகும். மூன்றா வது நிலையில் அச்செயல் அமைகிறது. செயல் என்பது, அது இயங்கும் நிலையையே குறிக்கும். அறம் வெளித் தெரியவேண்டு மாயின் அதனைச் செயற்படுத்தல் வேண்டும். இவ்வாறு செய்தலைத்தான் உலக மக்கள் சிறந்த ஒழுக்கம் என போற்றுகிறார்கள். தனக்கும் பிறருக்கும் நன்மைதரும், ஆனந்தம் தரும் செயல்களையே ஒழுக்கம் எனப்படும்.

நமது நாட்டில் "பிடியரிசி போட்டு" சேர்க்கும் வழமை முன்பு இருந்தது. தற்போது அவ் வழமை மிகக் குறைந்து விட்டது. இவ்வாறு சேர்க்கும் "கைப்பிடியளவு" அரிசி நாளடைவில் ஓர் அளவில் சேர்ந்துவிடும். பின்னர், அதை எடுத்துச் சமைத்து ஏழை மக்களுக்கு அன்னதானமாக வழங்குவது அறம் என்பர். பிறரோடு "இன்னுரை" பேசு வதும் அறம் என்பார் திருமூலர். வார்த்தை களால் வைதுகொண்டு, ஒருவருக்கு உணவு அளிப்பது பாவம். அவ்வாறு செய்வதைவிட அவ்வுணவை வழங்காது விடுதல் நன்று. "ஏசியிடலின் இடாமையே நன்று" எனவும் ஔவையார் குறிப்பிடுகிறார். இல்லற தர்மத் திற்கு உதாரண புருஷர்களாக விளங்கும் மூன்று பெண்கள் திகழ்கின்றனர். அவர்களே, காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகியோர். எப்போதும் மற்றை யவர்களுடன் இனிய வார்த்தையே பேசுதல் வேண்டும்.

இந்து மதத்தின் மேலான முதல் நூலாகிய அறநூல் எனப்படுவது "வேதங்கள்" ஆகும். வேதங்களுக்கு அடுத்த நிலையில் "ஸ்மிருதிகள்" விளங்குகின்றன. அறத்தின் ஆரம்ப வடிவம் நல்ல ஒழுக்கங்களே. இதில் இருந்துதான் அறம் என்பது தொடங்கப்படு கிறது. ஸ்மிருதிகள் இந்து மதத்தின் "சட்ட நூல்கள்" எனப்படுகின்றன. சமூக நன்மை களின் கருவிகளே ஆசாரங்கள். இந்த ஆசாரங் களே தர்மத்தின் பிறப்பிடமாகவும் அதன் விதிகளாகவும் அறநூல்களில் உருவெடுத்தன.

"மனச்சாட்சி" என்பது நீதி, நியாயம் வேரூன்றிய அறம் என்பதில் தவறில்லை. இதுவும் மனுநீதி அல்லது தர்ம உணர்வுகள் தோன்றுவதற்கு ஓர் அத்திவார உணர்வு என்பதில் தவறில்லை. இதன்படி நடப்பவன் ஒழுக்கம் நிறைந்த உணர்வினால் உந்தப் படுவான். வைதீக தர்ம சாஸ்திரங்களில் காலத் தால் முற்பட்டது "மானவ தர்ம சாஸ்திரமாகும்" இது கி.மு. 4-2 நூற்றாண்டுக் காலப்பகுதியில் "மனுரிஷி" என்பவரால் தொகுக்கப்பட்டது. இது மனிதனுக்குரிய விதிகள் பற்றிக் கூறி உள்ளது. இந்நூல் "வர்ணத் தோற்றம்" பற்றி கூறுகிறது. அத்துடன், ஒவ்வொரு வர்ணத்தார் செய்யவேண்டிய கடமைகள் பற்றியும் விளக்கு கின்றது. பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் ஆகிய வர்ணத்தார் நால் வகுப்பினர் களுக்குமுரிய கடமைகளைப் பற்றியும் கூறு கின்றது. இவ்வகை வர்ணத்தார் ஒழுக்கம் தவறாமல் வாழுதல் பற்றிக் கூறிய இந்நூல், ஒழுக்கம் தவறுமிடத்து அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றியும் கூறியுள்ளது.

முற்கால மன்னர்களும் அற ஒழுக்கத் தினால் கட்டுப்படுத்தப்பட்டனர். கொடுங்கோல் அரசன் அறத்தினால் தண்டிக்கப்படுவான் என்பது நியதிக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிலப் பதிகாரக் கதையில் வரும் பாண்டிய மன்னன், அறநெறி பிழைத்து அநியாயமாகக் கோவல னைக் கொலை செய்து, பின்னர் கண்ணகி யின் கற்பு - அறம் மன்னனைத் தண்டிக்கின் றது. இறுதியில் மதுரையை எரிக்கின்றது. உலகிற்கே "அறநெறி பிழைத்தோர்க்கு அறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாகும்'' எனும் சிலப்பதிகாரப் படிப் பினையே ஊட்டுகின்றது. அடுத்தது மனுநீதி கண்ட சோழனின் கதையை நோக்கலாம். தேர்ச்சில்லில் அகப்பட்டு உயிரிழந்த பசுக் கன்றின் தாய்ப்பசு நீதி கேட்டபோது, உரிய உயர் நீதியாக, தனது மகனையும் அவ்வாறே தேரின் சில்லினால் நெரித்துக் கொன்றமை யானது பல அறநெறிச் சிந்தனைகளை மக்கள் மனங்களில் வேரூன்ற வைத்துள்ளது. குற்றம் செய்தால் தண்டனை கொடுக்க வேண்டுமென்பது கட்டாயம் என்பதனை இது உணர்த்தியுள்ளது. இதனால் தண்டனைக்குப் பயந்து மக்கள் குற்றம் செய்யாமல் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மனுஸ்மிருதி கூறுவது யாதெனில், இல்லறத்தில் கணவனும் மனைவியும் இறுதி வரை ஒருவருக்கொருவர் பரஸ்பரம் துணையாகவிருத்தல் மற்றும் அன்புடையவர்களாக இருத்தல் முதலியவற்றின் அவசியத்தை உணர்த்துகின்றது. "ஒருவனுக்கு ஒருத்தி" என்னும் கோட்பாட்டினை இது அறிவுறுத்துகின்றது. மனுதர்ம சாஸ்திரம் மறுமணம் செய்தல், விவாகரத்து செய்தல் ஆகியவற்றையும் அங்கீகரித்துள்ளது. "கைம்மாறு" கருதாத சேவை செய்தலை அறிவுறுத்துகின்றது. எனவே இல்லற தர்மத்தைப் பற்றிக் கூறி உள்ளது.

"தனது கணவனைப் போற்றி வாழு தலே ஒரு பெண்ணுக்குரிய அறமாகும்'' என்பதை மனுதர்ம சாஸ்திரம் போதிக்கின்றது. தனது கற்பினைக் காப்பாற்றுவது ஒரு பெண்ணின் கடமை என்கின்றது. பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

"சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை"

என்பது வள்ளுவர் கருத்து.

மேலும், நால்வகை ஆச்சிரமத்தார் என்று கூறப்படும் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய வர்ணத்தார்களின் கடமைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பிரமச்சரியத்தை நிறைவு செய்தவன், கிருகஸ்தம் நிலைக்கு வந்த பின்னர், அதில் இருந்து கொண்டு, ஏனைய மூவகை வர்ணத்தார்களின் தேவைகளை நிறைவேற்றுவது கடமையும், அறமும் ஆகின்றது.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்கிறார் வள்ளுவர்.

திருமணத்திற்கு சட்டரீதியான அங்கீகாரம் அளிக்கப்பட்டமையால், பெண்கள் பாதுகாக்கப்பட்டார்கள். பெண்கள் மதிக்கப்பட்டார்கள். அத்துடன் பெண்கள் ஆண்கள் ஆகியோரின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது. சுதந்திரமாகப் பொருளீட்டுதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து சமூகக் கட்டுப்பாடுகள், மற்றும் இறைமை பற்றிய உண்மைகள், ஒரு மதமானது அதைப் பின்பற்றி நடப்போரிடையே "ஆளுமையை" வளர்த்துவிடும் இயல்புடையது என்பது பற்றியனவும் இதில் கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் மக்களிடையே காணப்படும் துன்பங்கள், கஷ்டங்கள், போட்டி, பொறாமை மனப்பான்மைகள் ஆகியவற்றுக்கான பிரதான காரணியாக "தர்மம்" தேவையான அளவில் மக்களால் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி





– வாரியார் சுவாமிகள் –

49. தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னும் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே!

## பதவுரை

மின்னும் கதிர்வேல்- ஒளி வீசுகின்ற கதிர்வேலையேந்திய, விகிர்தா- வேறு வேறு வடிவங்களையுடையவரே! நினைவார் கின்னம் களையும்- தேவரீரைத் தியானிக்கும் அடியார்களின் துன்பத்தைப் போக்குகின்ற, க்ருபைசூழ் சுடரே- கருணை சூழ்ந்த பேரொளியே! தன்னந்தனி நின்றதுதான்- கருவி கரணங்களிலிருந்து கழன்று தனிமையான இனிமையில் நிலைநின்ற பேரின்பத்தை, அறிய- மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படி, இன்னும் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ- இனி மற்றவர்க்கு விளக்கிச் சொல்ல இயலுமோ? இயலாது.

## பொழிப்புரை

ஒளி வீசுகின்ற கதிர்வேலாயுதரே! வேறு பல வடிவங்களையுடையவரே! தியானிக்கின்ற அடியார்களின் துன்பங்களைப் போக்குகின்ற கருணை சூழ்ந்த பேரொளியே! கருவி கரணங்களினின்றும் நீங்கித் தனிமையான இனிய நிலையில் அடியேன் நின்ற பேரின்ப நிலையை இத்தன்மைத்தென்று பிறருக்கு உரைக்க வொண்ணுமோ?

## விரிவுரை

**தன்னந்தனி நின்றதுதான்:-**

தன்னந்தனி என்பது, ஆன்மா பொறி புலன்கள் முதலிய கருவி கரணங்களினின்றும் கழன்று தனியாக நிற்கும் நிலை எனவுணர்க.

"செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியஉயர்
திருவடியி லணுகவரம் அருள்வாயே"

-(அறிவழிய) திருப்புகழ்.

தன்னந்தனி நின்றது என்பதற்கு தத்துவா தீதனான இறைவன் என்று பொருள் காண்பார் சிலர். இது சிறப்புடைய பொருளன்று.

பக்குவப்பட்ட ஆன்மா தான் தனிமையான நிலையில் அடைந்த அருளின்பத்தை நவில முடியாது என்ற பொருளில் இது வந்தது. "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்பார் ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய ஒரு பெண்மணியை ஓர் ஆடவன் மணஞ்செய்து கொண்டான். அந்த ஆடவனுக்கு உடன் பிறந்த ஆண்கள் அறுவர்; பெண்கள் எழுவர்; தாய் தந்தையர் இருவர்; பாட்டன் பாட்டி அத்தையர், கொழுந்தியர் முதலிய பலர் அந்த வீட்டில் இருந்தார்கள். கணவன் மனைவி எப்போது பேச முயன்றாலும் அங்கே ஒருவர் இருந்து தனிமையின் இனிமையைக் கெடுப்பர். அவனுக்கு நிரம்ப வருத்தம். ஒருநாள் வீட்டுக்கு வந்தான். மனைவி தனியாக இருந்தாள். பால் கொடுத்தாள். “கண்ணே! வீட்டிலே ஒருவரும் இல்லையா?” என்றான். “எல்லாரும் திருவிழாப் பார்க்கப் போயிருக்கின்றார்கள்” என்றாள். “ஒருவரும் இல்லையா” என்று கேட்டான். தன் வாழ்க்கைத் துணையுடன் தனித்திருப்பதைக் கணவன் விரும்புவதுபோல, ஆன்மா 36 தத்துவங்களும் இல்லாத தனிமையில் இறைவனுடன் கலப்பதில் பரிபூரண பேரின்பம் விளைகின்றது.

**அறிய இன்னும் ஒருவர்க்கிசைவிப்பது:-**

மேலே கூறியவாறு ஏகாந்த நிலையில் விளைந்த இன்பத்தை இன்னொருவர் அறியும்படி சொல்ல முடியுமோ? முடியாது.

அத்துவிதப் பேரின்பத்தைச் சொல்ல முடியாது. அது சொல்லும் தரமன்று- என்று அடிகளார் இந்த அநுபூதியில் பல இடங்களில் கூறுகின்றார்.

28ஆவது பாடலில் “நவிலத்தகுமோ?”

30ஆவது பாடலில் “எவ்வாறொருவர்க் கிசைவிப்பதுவே”

38ஆவது பாடலில் “ஆண்டது செப்புமதோ?”

44ஆவது பாடலில் “தந்தது சொல்லுமதோ?”

**மின்னுங் கதிர்வேல் விகிர்தா:-**

வேலாயுதம் ஒளி மயமானது. நூறுகோடி சூரிய ஒளியுடையது.

“உலாவு தயபாநு சதகோடி உருவானஒளி
வாகுமயில் வேலங் கையிலோனே”

-(அவாமருவி) திருப்புகழ்.

**விகிர்தா:-**

விகிர்தம்- வேறுபாடு.

“விகிர்தங்களா நடப்பார்” -தேவாரம்.

அடியார்கள் பொருட்டு முருகன் பற்பல வடிவங்கள் கொண்டு காட்சி தருகின்றான்.

இருமூவகை வதனத்தொடும் இளையோனெனத் திரியும்
ஒருமாமுக னொடுசென்றிடும் உயர்காளையி னுலவும்
பெருமாமறை யவரேயென முனிவோரெனப் பெயரும்
தெரிவார்கணை மறவீரரில் திரிதந்திடும் செவ்வேள்

-கந்தபுராணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நினைவார் கின்னங் களையும்:-

பிற பொருள்களை நினையாது, வேற் பரமனையே நினைத்துத் தியானிக்கின்றவரது துயரங்களை முருகன் களைந்தருளுவான்.

"வேலுமயிலு நினைந்தவர் தந்துயர்
தீரஅருள் தரு கந்தநி ரந்தர
மேலைவயலை உகந்துள நின்றருள் பெருமானே"

-(வாளின்) திருப்புகழ்.

கின்னங் குறித்தடியேன் செவி கேட்க"

-கந்தரலங்காரம் (24)

க்ருபை சூழ் சுடரே:-

வெப்பஞ் சூழ்ந்த சுடர் சூரியன்; கருணை சூழ்ந்த சுடர் முருகன்.

**கருத்துரை**

வேலவரே! அடியேன் ஏகாந்தமான நிலையையடைந்தபோது பெற்ற இன்பம் பிறருக்குக் கூறமுடியாது.

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 62

பல்லவி

சும்மாகவே யிருக்கும் சுகந்தனைத் தா! முருகா!
எம்மானுன் பேரழகை என்னுளத் திருத்தியென்றும்

அநுபல்லவி

இம்மாநிலத் தெவரும் ஏற்றுசன் னிதியானே!
அம்மாயன் மருகோனே! வெம்பாவம் அழிகோனே

சரணம்

தம்பாரம் தீரவுன தயவினை வேண்டமரர்
தம்பார மேகஅருள் தனிவடி வேலவனே!
கொம்பூறு தேனோடு தினைமாவும் படைத்தேனே
நம்பார மோடியென்னுள் நானுனையே கண்டு

அம்மாவும் பையனுமாய் அருங்காட்சி தீட்டியவா
அம்மானின் மகளுக்காய் கிழவுரு நாட்டியவா
பெம்மானுக் குரைசெய்து பேரின்ப மூட்டியவா
நம்மாநிலக் கிணற்றில் நன்னீரைக் காட்டியவா

-இராசையா குகதாசன்- (சும்மாகவே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் சமயம்

– திரு S. குணாகரன் அவர்கள் –

"அன்பே சிவம்" என்பது எமது ஆன்றோர் வாக்கு. அன்பிலேதான் சமயம் உயிர் பெற்று வாழ்கிறது. நாம் கடைப்பிடிக்கும் விரதங்களினாலோ, சடங்குகளினாலோ, வெளியே நாம் கடைப்பிடிக்கும் ஆசாரங்களினாலோ சமயம் விளங்குவதில்லை. கள்ளமில்லா உள்ளத்தின் உள்ளே மிளிரும் உண்மையான அன்பின்மூலம் தான் சமயம் வாழ்கிறது. உள்ளத்திலும், உடம்பிலும் தூய்மை அற்று வாழும் நாம் ஆலயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபடுவது பயனற்ற செயலேயாகும். உள்ளும் புறமும் தூய்மையுடன் நிர்மலமாக நின்று வழிபடும் அன்பர்களது வேண்டுகோளை இறைவன் செவி சாய்த்து அருள் பாலிக்கின்றார். மனத்தூய்மை அற்று வழிபாடுகளில் ஈடுபடுவோர் வாழ்வில் தோல்வியை அடைவார்கள். உணவை மென்று சுவைத்து நிதானமாகச் சாப்பிடுகின்றவனுக்கு சோற்றில் உள்ள கல் தெரிவதுபோல நின்று நிதானித்துப் பார்க்கின்றவனுக்கு வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் தெரிகின்றன. அதற்கேற்ற வகையில் இறைவனது அருளும் கிடைக்கின்றது. வெளிப்புறத்தே நாம் செய்யும் வழிபாடு மனத்தின் கண் ஊறும் பக்தியின் வழிப்பாடாகவே அமைய வேண்டும். உள்ளத்தினுள் ஊற்றெடுக்கும் தூய்மையான வழிபாடே உண்மைப் பொருளாகிய இறைவனை அடைய வழி வகுக்கும். இதை விடுத்து வெளி ஆசாரங்களுக்கும், அனுட்டானத்திற்கும் அடிமைப்பட்டால் அதனால் யாதொரு பயனும் ஏற்படாது. எம்மிடம் உள்ள மனிதம் தோற்று நாம் இக் காலத்தில் இழிவாக வாழ்கின்றோம். அதன் அடிப்படையில் சமூகத்திற்கு ஒவ்வாத எச்செயலையும் செய்யத் துணிகின்றோம். இவ்வளவும் செய்துவிட்டு புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்துவிட்டால் நாம் செய்த பாவங்களெல்லாம் போய்விடும் என்று மனப் பால் குடிக்கின்றோம். மனத்தில் உள்ள தீய சிந்தனைகளோடு ஆலயம் சென்று வழிபடுபவனது வழிபாடு மேன்மேலும் பாவத்தையே சேர்க்கும்.

மாசுள்ள மனத்தோடு ஆலயம் தொழுவோன் தன் பாவமூட்டையை அதிகமாக்கிக் கொள்கிறான். முன்னிலும் பார்க்க பாவம் செய்தவனாய் வீடு திரும்புகிறான். அத்துடன் அம்மனத்தோடு புண்ணிய ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்கு தீர்த்த யாத்திரை செய்கின்றான். தீர்த்த யாத்திரைக்குரிய தலத்தின் தன்மையானது புண்ணியவாளர்களான பெரியோர்களும், புனிதமான பொருள்களும் நிறைந்த இடமேயாகும். புனித வாழ்வு வாழும் பெருமக்கள் ஓரிடத்தில் இருந்தால் அவ்வூரில் கோயில் இல்லாவிடினும் அவ் ஊரின் மகத்துவம் மேன்மையுற்று விளங்கும். தூய்மையற்ற மக்கள் விரும்பி வாழும் ஊரில் பல கோயில்கள் இருந்தாலும் புனிதத்தன்மை அற்றதாகவே இருக்கும். மேலும் ஒரு புனிதத் தலம் இருக்கும் ஊரில் வாழ்வது எளிதன்று. மிகக் கஷ்டமானதாகும். ஏனெனில் சாதாரண இடங்களில் செய்யும் பாவத்தை எளிதில் போக்கிக் கொள்ளுதல்கூடும். ஆனால் புனித தலங்களில் செய்யப்படும் பாவங்களுக்குப் பரிகாரமில்லை.

உண்மையாய் இரு, அகத்தூய்மையோடு இரு, பிறருக்கு நன்மை செய் ஆகிய

*தொடங்குவதைச் சரியாகத் தொடங்கினால் அதுவே பாதி வெற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளே வழிபாடுகளின் உயிர் நாடியாய் ஒளிரும் உண்மை. ஏழை பங்காளனாகிய இறைவனை ஏழை மக்களிடமும், அநாதரவாய் இருக்கும் அபலைகளிடமும் காண்பவரே உண்மையான பக்தராவார். இத்தகைய மக்களிடம் சிவத்தைக் காணாது ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களை மாத்திரம் வழிபடுவோன் அடிப்படைத் தத்துவங்களிலிருந்து மாறுபடுகின்றான். சாதி சமயம், இனம் ஆகிய வேற்றுமைகளைப் பாராட்டாது ஒரு ஏழைபால் இறைவனைக் கண்ணுற்று அவனுக்கு வழங்கும் காருண்ய சேவையின் மூலம் இறைவன் அருளுக்கு ஆட்படுகின்றான். ஆலயங்களில் செய்யும் இறைவழிபாட்டைவிட அடியார்களுக்கு செய்யும் ஆன்ம வழிபாட்டினை மேற்கொள்பவர்களுக்கு இறைவன் அருள் பூரணமாகக் கிடைக்கும்.

தந்தைக்குப் பணி செய்ய விரும்பும் ஒருவன் முதன்முதல் குழந்தைகளுக்குப் பணி செய்தல் வேண்டும். அதேபோன்று இறை சேவையில் ஈடுபடுவோர் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்திலும் இறைவனைக் கண்டு அதனடிப்படையில் காருண்ய வாழ்வு வாழவேண்டும். இதனை நாம் மனதிற் கொள்ள வேண்டும். நாம் மாசற்ற வாழ்வு வாழவேண்டும். நம்மை நாடிவரும் ஏதிலிகளுக்கு எமது இயல்புக்கேற்றவாறு உதவிபுரிய வேண்டும். இதுவே புண்ணிய கருமம். இச்செயற்பாட்டினால் உள்ளம் புனிதமாகும். அத்தகைய உள்ளத்தில் இறைவனைக் காணலாம். இதனையே திருவள்ளுவரும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற"

என்று கூறியுள்ளார்.

## எழுபதாவது ஜனன தினத்தில்
## சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

சிவானந்தவாரிதி சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர். தமது இசைச் சொற்பொழிவின் மூலம் பட்டங்கள் பல பெற்றவர். இவர் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்படுகின்ற ஞானச்சுடர் மலரில் மகாபாரதக் கதையை எழுதியதோடு நூறு மலர்களில் வெளிவந்த அக்கட்டுரை நூல்வடிவம் பெற்று இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டமையும், அவரது ஆறுபதாவது ஜனனதின விழா மிகச் சிறப்பாக இங்கு கொண்டாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் 23.03.2015இல் எழுபதாவது பிறந்த தினத்தில் கால்பதிக்கும் இவர் பல்லாண்டு காலம் வாழவும் சைவ உலகுக்கு இன்னும் சேவைகள் செய்யவும் சந்நிதி முருகனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.



-சந்நிதியான் ஆச்சிரமம்-

*மகிழ்ச்சி என்பது நாம் கொண்டிருக்கும் வாழ்க்கையில்த்தான் இருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சைவநெறி

# 05.12.2014 அன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் எழுத்து வடிவம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

**03. சைவன் யார் என்பதற்கு மணிவாசகரின் பதில்:**

மணிவாசகர் தனது திருவாசகத்தில் மூன்று இடங்களில் சைவன் என்ற சொல்லைக் கையாளுகின்றார். அவை வருமாறு:

1. சைவாபோற்றி தலைவா போற்றி (போ.திரு: 113)
2. ஐயாறதனில் சைவனாகியும் (கீர். திரு: 85)
3. சைவனுக்கு ஆட்பட்டேன் (குலாப்பத்து: 9)

இந்த மூன்று இடங்களிலும் மணிவாசகர் தன்னைச் சைவனாகச் சொல்லவில்லை. எங்களையும் சைவர்களாகச் சொல்லவில்லை. இறைவனைத்தான் சைவன் என்று குறிப்பிட்டுள்ளார். ஓரிடத்தில் சைவன் ஆகியும் என்கிறாரே. இறைவனைச் சைவன் என்றவர் பிறகு ஏன் அவரே சைவனாகினார் என்று கூறவேண்டும்? சைவன் எப்படிச் சைவன் ஆவது? சுவாமி சின்மயானந்தர் தனது பணியைப் பற்றிக் குறிப்பிடும்போது நான் யாரையுமல்ல இந்துக்களை இந்துக்களாக மாற்றிக்கொண்டிருக்கிறேன். மற்றவர்களை இந்துக்களாக மாற்றுவதென்றால் இது ஓரளவு எளிதாக இருக்கும். ஆனால் நான் இந்துக்களைத்தான் இந்துக்கள் ஆக்கிக் கொண்டிருக்கிறேன் என்றார். அது மிக மிகக் கடினமான வேலை என்று குறிப்பிட்டார். எல்லாவற்றையும் கடந்து சமயாதீத நிலையில் வாழ்ந்த மணிவாசகரும் தனது சூழலில் சைவர்கள் என்று கூறியவர்களைச் சைவராக்க எண்ணி அப்படி இறைவனே சைவனாகினான் என்ற ஒரு Paradoxஐ முதலில் கூறுகிறார்.

**04. நெறி என்ற அடுத்த விடயம்.**

நெறி என்றால் வழி, பாதை, ஒழுக்கம் எனப் பொருள்படும். நூல் நுவலியது என்று அதற்கு விளக்கம் கொடுப்பர். திருவள்ளுவர் ஆக நான்கு இடங்களில் மட்டும்தான் நெறி என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். அதுவும் அறம்தான். ஆனால் அவர் தனது திருக்குறளில் அறம், அறன் என்ற இரண்டு வார்த்தைகளைப் பல இடங்களிலே பயன்படுத்தி உள்ளார். செய்யுள் இலக்கணத்தில் ன்,ம் என்ற குற்றெழுத்துக்கள் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. அறம் என்று சொன்னாலும் அறன் என்று சொன்னாலும் ஒன்றே. ஆயினும் அவர் இரண்டையும் திட்டமிட்டுப் பயன்படுத்துகின்றார். உதாரணம்,

1. இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
   பெருமை பிறங்கிற்று உலகு.
2. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
   ஆகுலநீர பிற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்.

அறம் என்று சொல்லுமிடங்களில் Concept, அறக் கோட்பாட்டையும், அறன் என்று கூறுமிடங்களின் அந்த அறக்கோட்பாட்டை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதையும் அவர் குறிப்பிடுவார். அவ்வாறு நடைமுறைப்படுத்தும்போது எதிர்கொள்ளவரும் சங்கடமான நிலைகளில் ஒரு தீர்மானத்துக்கு வர உதவுவது நெறி என்ற வழி, அல்லது நூல்முறை ஆகும். பொதுநிருவாகத்தில் தீர்மானம் எடுக்கும் வழிகாட்ட அரசு AR,FR என்பவற்றை வைத்திருப்பது போன்றது இது. எனவே சைவக்கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வழி அதனை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் வழியைக் கூறுவது சைவநெறி ஆகும். உதாரணம் சரியா மார்க்கம்.

**05. சைவநெறியின் நோக்கமும் பயனும்:**

சாக்கிய நாயனார் புராணம் கூறுபவர்கள் தொகை, வகை, விரி எனும் மூன்று நூலாசிரியர்கள். திருத் தொண்டத்தொகை பாடியவர் சுந்தரர். அவர் சாக்கிய நாயனார் பற்றிக் கூறுவது.

"வார் கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்"

நம்பியாண்டார் நம்பி கூறுவது,

"சிவபுரத்துப் புகழ்தரப் புக்கவன்"

சேக்கிழார் கூறுவது,

"சிவலோகத்தில் பல அடிமைப் பாங்குஎய்தியவர்"

மூவருமே சாக்கிய நாயனார் சிவலோகம் எய்தினார் என்கின்றனர். அதுமட்டும் அன்றி அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எல்லோரும் சிவலோகம் போவது பற்றி பல இடங்களில் கூறியுள்ளனர். சுந்தரர் "சிவலோகம் ஆழ்வதற்கு யாதும் ஓர் குறைவில்லை" என்பார். இப்படி அவர்கள் கூறும்போது நாம் கருதுவது எங்கோ மிக உயர்ந்த இடத்தில் சிவலோகம் என்று ஒன்று உள்ளது என்றே. அங்கு போவதுதான் சிவலோகம் என்று கருதிக் கொள்கிறோம். அப்பாலுக்கப்பால் உள்ளது என நினைக்கின்றோம்.

ஆனால் சிவன் இருக்கின்ற இடம்தானே சிவலோகம். சிவன் எங்கும் இருக்கின்றான் என்றால் சிவலோகமும் எங்கும் உள்ளதுதானே. என்னுளும் சிவன் இருக்கிறான் என்றால் அங்கும் சிவலோகம்தானே. எம்முள் உள்ள சிவன், வெளிப்படும்போது சிவன் சிவனாவதைக் காணலாம். அதுதான் மணிவாசகர் ஐயாறதனில் சைவனாகியும் என்று கூறிய விடயம் யாரோ ஒரு அருளாளரை மையமாகக் கொண்டு ஐயாறதனில் சைவனான சிவன் சைவனாகினான் என்றதே அதன் பொருள். அப்படிச் சைவனாகின்றபோது அங்குள்ளவர்கள் அவரது சங்கமத்தால், கூட்டுறவால் தாமும் சைவராகி பலர் தம்முள்ளேயுள்ள சிவனை வெளிப்படுத்துகின்றனர். அது மட்டுமன்றி அந்த இடம், சூழ்நிலை, சிவலோகம் பெரிய சிவலோகம் ஆகிறது.

திருமூலரினது பாடல்களிலே சிவலோகம் ஒருவர் தன்னிடத்திலே காணலாம் என்றே கூறுவார்.

1. "சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்"
2. "தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே"
3. "திருவடியே சிவலோகம் சிந்திக்கில்" என்ற வரிகளிலே அதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே திருமூலர் இலங்கையை சிவ லோகம், சிவபூமி என்பார். அதனை நிருபித்து எங்களுக்கு அது சிவபூமி, சிவலோகம் என்று காட்டியவர் யோகசுவாமி அவர்கள். அவரது நற்சிந்தனைப் பாடல்களிலும், சிறப்பாக இலங்கை வளநாடு என்ற பாடலிலும் நீங்கள் சிவலோகத்தை இங்கே காணலாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் தனது திருவாசகத்திலுள்ள திருவம்மானையில் "அப் பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த அப்பார் சடையப்பன்" என்பார். இறைவன் தன்னை மையமாகக் கொண்டு பாண்டி நாட்டை சிவலோகம் ஆக்குவித்தான் என்கின்றார். சிவனே பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கி னார் என்று கூறவில்லை. உண்மையில் மணி வாசகர் அந்த அருளைப் பல பிறவிகளில் தேடினார்; சேகரித்தார்; கூட்டிக்கொண்டார். அது பெருகி அவரிடத்திலே வெளிப்பட்டது. நான் அதனைச் செய்தேன் என்ற "நான்" அற்ற நிலையில் செய்ததனால், தன் முனைப் பின்றிச் செய்ததனால், சிவன் தன்னைக் கொண்டு பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கினான் என்றே அவர் கூறுவது.

அப்போது இலங்கையிலும், பாண்டி நாட்டிலும், தென்னாட்டிலும் உள்ளவர்கள் சிவலோகத்தில் இருக்கிறார்களா? நீங்களே உங்களுக்குப் பதில் சொல்லிக் கொள்ளுங் கள். நாம் ஒவ்வொருவருமே சைவன், சிவன் தான். ஆனால் சைவனாகி அதனை வெளிப் படுத்துகிறோமில்லை. நாம் ஓர் இடத்திற்குச் செல்ல எங்களை அலங்கரித்துவிட்டுக் கண் ணாடியில் பார்க்கிறோம். முகத்தில் ஓர் அழுக் குத் தென்படுகிறது. பல தடவையும் துடைத் துப் பார்க்கிறோம். அதுபோகவே மாட்டேன் என்கிறது. இறுதியில் அது முகத்தில் இல்லை கண்ணாடியில்த்தான் இருக்கிறது என்று பார்க்கிறோம். அதனைத் துடைத்ததும் முகம் அழகாக ஒளிவிடுகிறது. நாம் சரியாகப் பார்த்து அழுக்கைத் துடைத்துக்கொள்ள முடியுமாயின் சிவலோகத்தை எங்கும் காண லாம்.

(முற்றும்)

## அற்புதம் நிகழ்த்தும் அற்புதன் அழகன் சன்னிதி வேலன்

அற்புதம் நிகழ்த்தும் அற்புதன்
அழகன் சன்னிதி வேலன்
குற்றம் குறைகளைக் கூறிடு
கூடிடும் பக்தியை நாடிடு
பற்றுடன் பாதம் பணிந்திடு
பாரினில் சிறந்து வாழ்ந்திடு
சற்றுநீ மனதை அவன்பால்
சாய்த்திடு எல்லாம் கைகூடும்

-வ. யோகானந்தசிவம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத சிவாகமப் பணி செய்யும் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்களுடனான நேர்காணல்

– நேர்கண்டவர்: பிரம்மஸ்ரீ தி. மயூரகிரிசர்மா அவர்கள் –

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவிய உள்நாட்டுப்போர், இடப்பெயர்வு என்பவற்றுக்கு இடையிலும் குருகுலமரபு வழியில் வேதாகமக்கல்வி இன்றைக்கும் ஓரளவேனும் செழிப்புற்று உள்ளது என்றால், இன்றைக்கு இலங்கையின் பல பாகத்திலும் சிவாச்சார்யர்கள், அந்தணோத்தமர்கள் சிறப்பாக கிரியைகளை ஆற்றி வருகிறார்கள் என்றால், வேத, சிவாகம ஆராய்ச்சிகளும், இத்துறையில் புதிது புதிதாக நூல்களும் உருவாகின்றது என்றால், இந்த எழுச்சியில், இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக்குருக்களின் பங்கும் பணியும் மிக முக்கியமானது.

தமிழகத்தில் இன்றைக்கும் காஞ்சி, திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி, தருமபுரம் ஆதீனம், சீர்காழி போன்ற பல்வேறு இடங்களில் சிவாச்சார்ய வேதாகம பாடசாலைகள் உள்ளன. இதேபோல, இலங்கைத் திருநாட்டிலும் மஹாதேவக்குருக்கள் அவர்கள் ஒரு பாடசாலையை நிறுவனரீதியாக அன்றி, தனது தனிப்பட்ட ஆளுமைத்திறத்தாலும் தம் குடும்பத்தவரின் ஒற்றுமையான பணிகளாலும், முழுமையான இலவசக் கல்விமுறையாக நடாத்தி வந்திருக்கிறார் என்பது ஆச்சர்யமான ஒரு விடயம் ஆகும்.

1994ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பெரும்பகுதி யாழ்ப்பாண மக்கள் இடப்பெயர்வையும் பெரும் அவலத்தையும் சந்தித்தனர். இவ்வாறான ஒரு சூழலில் மஹாதேவக்குருக்கள் குடும்பமும் அவரது பாடசாலைச் சமூகமும்கூட, இதே துயரத்தை ஏற்று தென்மராட்சியின் உசன் பகுதிக்கு இடம்பெயர்ந்தது. அங்கும் கூட, குண்டு மழைக்குள்ளும் இலவச வேத, ஆகம வகுப்புகளும், பகவத்கீதா வகுப்புகளும் நடந்தமை வியப்பானது. அந்த வேளைகளில் முன்பள்ளிப் பருவத்தில் இருந்த நானும் அந்த வகுப்புக்களில் கல்வி கற்றிருக்கிறேன்.

அன்று தொட்டு தொடர்கின்ற குருக்களுடனான இணைப்போடு, அண்மையில் குருக்கள் அவர்களை சந்தித்தபோது, அவரை நேர்கண்டேன்.

கேள்வி- உங்களுடைய குடும்பப்பாரம்பரியமே தாங்கள் வேதாகமப்பணிகளில் ஈடுபடக் காரணமா?

பதில்- என்னுடைய தந்தையார் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் பரிசாரகராக (இறைவனுக்காக நெய்வேதனங்களை செய்பவர்) தன் வாழ்வியலை மிகுந்த துன்பங்களோடும் வறுமையோடும் நடத்தியவர். என்னுடைய தாயார் எமக்கு ஒன்பது வயதாயிருக்கிற போதே இறந்து விட்டார். சௌகரியங்கள் என்று எங்களுடைய இளமைக்காலத்தில் ஒன்றுமே இருக்கவில்லை. நாங்கள் தாயன்பை பெற இயலாதவர்களாக, வறுமையின் பிடிக்கு மத்தியில் வளர்ந்தோம். அதனால் நாம் நன்றாக கற்க வேண்டும் என்ற ஆவலைப் பெற்றோம்.

நான் மாவிட்டபுரம் கு.பாலசுந்தரக்குருக்கள் அவர்களிடமும், இந்தியாவைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ கி.வாசுதேவ வாத்தியார் அவர்களிடமும் இன்னும் பலரிடமும் கற்றிருக்கிறேன். எனக்கு நிரம்ப குருமார்கள் என்பதையிட்டு நான் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி- நீங்கள் பலரிடம் கற்றதாகச் சொன்னீர்கள். உங்களின் பாடசாலைக்கல்வி பற்றிக் குறிப்பிடுங்கள்?**

பதில்- நான் மிகச்சிறிய வயதில் வீமன்காமத்தில் உள்ள சிறுபாடசாலையில் கல்வி கற்றதுடன், உயர் தரத்தை கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியில் பெற்றுக் கொண்டேன். இது தவிர காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியிலும் கல்வி கற்றேன். இன்னும் பல்கலைக் கழகம் சென்று கற்க வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் நிரம்ப இருந்தது. ஆனால், எனது குடும்பச்சூழல் அவற்றுக்கெல்லாம் இடம்கொடுக்கவில்லை. எம்முடைய தந்தையார் சைக்கிளில் கோவில் கோவிலாகச் சென்று உழைத்த பணத்தை வைத்தே எமது குடும்பம் வாழ்ந்தமையால் வறுமை கல்வியைத் தொடர இடம் தரவில்லை.

நான் உயர்தரத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், பாளி போன்ற மொழிகளைச் சிறப்பாக கற்றேன். இத்துடனேயே அக்காலத்தில் அரசாங்க சேவையில் சேரக் கூடிய வாய்ப்பு இருந்தது. என்றாலும், அப்பொழுது என்னுடைய ஆசிரியராக இருந்த ராமையர் அவர்கள் "சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலை"யில் சம்ஸ்கிருதம் படிப்பிக்கச் சொன்னதாலும், அதில் எனக்கு ஈடுபாடு இருந்ததாலும் அதில் ஈடுபடலானேன். சில ஆண்டுகளில் இந்தப் பாடசாலை இயங் காமல் போனதும் இங்கே என்னை நாடி வருகிற மாணவர்களுக்கு படிப்பிக்க வேண்டியதாயிற்று.

**கேள்வி- அவ்வாறாயின் மிகவும் சிரமப்பட்டு, திட்டமிட்டே இக்குருகுலத்தை உருவாக் கினீர்களா?**

பதில்- எனக்கு இவ்வாறான திட்டங்கள் ஒன்றும் இருக்கவில்லை. இதை நான் இலட்சியமாகக் கொள்ளவில்லை. ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒன்று திரண்டு என்னை கருவியாக்கி கொண்டு விட்டன.

**கேள்வி- அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வேதபாரம்பரியத்தை வளர்த்த குருமார்கள் பலரிடமும் பழகவும் கற்கவும் உங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததா?**

பதில்- ஆம். நான் பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ சுப்பிரம்மண்ய சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகள், கீரிமலை பிரம்மஸ்ரீ இராமையர் போன்ற பல வேத வித்வான் களிடமும் கற்கும் வாய்ப்பு பெற்றவன். இதனால், அவர்களது ஆலோசனைகளும் வழிகாட்டு தல்களும் ஆசிகளும் எனக்கு கிடைத்தன.

இதை விட, இந்தியாவில் இரண்டாண்டுகளுக்கு மேலாக தங்கியிருந்து வேதபாடங்கள், அமரம், சப்தம், சம்ஸ்கிருத வியாகரணம் (இலக்கணம்) என்பவற்றை எல்லாம் கற்க முடிந்தது.

நான் சதாசிவ பிராசீன பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த வேளையில் அங்கு நேரே வந்து நயினை ஐ.கைலாசநாதக்குருக்கள் என்னைப் பாராட்டியமையும் என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி ஆகும்.

**கேள்வி- நீங்கள் தர்மசாஸ்தா குருகுலத்தை பல்லாண்டுகளாக நடாத்தி வருகிறீர்கள். எவ்வளவு மாணவர்கள் இந்த குருகுலத்தில் கல்வி கற்றிருப்பார்கள்?**

பதில்- எங்களுடைய குலதெய்வம் கேரளாவின் சாட்டுப்பத்தூர்பதியில் எழுந்தருளியிருக்கும் தர்மசாஸ்தா ஆகும். எங்களுடைய தாத்தா அந்தக்காலத்திலேயே சபரிமலை யாத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர். இந்த வகையிலேயே எமது குருகுலத்திற்கு தர்மசாஸ்தா குருகுலம் என்று பெயர் வைத்திருக்கிறோம்.

இந்த குருகுலத்தை நாற்பதாண்டுகளாக நடாத்தி வருகின்றோம். சுமார் எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கே கல்வி கற்றிருக்கிறார்கள்.

**கேள்வி- எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றதாகச் சொல்கிறீர்கள். இவர்களிடம் இருந்து பெறும் பணம் மூலம் குருகுலத்தை வளர்க்க முடிந்ததா?**

பதில்- நாம் எம்மிடம் கல்விக்காக வருகிற எந்த மாணவர்களிடத்தும் எவ்வகையிலும் பணம் பெறுவதே இல்லை. அதற்கு மேலதிகமாக, இலவசமாக உணவு, உடை, உறையுள் என்பவற்றையும் கொடுத்தே கல்வி கற்பித்து வந்திருக்கிறோம்.

**கேள்வி- ஏறுகின்ற விலைவாசியில் எவ்வாறு உங்களால் தனிமனித முயற்சியாக இலவசக் கல்வியைக் கொடுக்க முடிகிறது?**

பதில்- இதில் இறையருளே பெரிது. நம்முடைய குருத்துவப்பணிகளின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தின் மூலமும் கோவில்களுக்கு கிரியை நெறிப்படுத்தல்களுக்குச் செல்கிறபோது கிடைக்கிற ஆச்சார்ய சம்பாவனையையும் வைத்தே இதனை செய்து வருகின்றோம்.

**கேள்வி- நீங்கள் வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்திருக்கிறீர்கள். அது பற்றிக் குறிப்பிடுங்கள்?**

பதில்- இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சுவிஸ், லண்டன், என்று பல நாடுகளுக்கும் சென்று வந்திருக்கின்றேன். அங்கெல்லாம் நடந்த ஆலய கிரியைகளில் என்னுடைய ஆலோசனைகளையும் சேவையையும் பெற்றிருக்கிறார்கள். சிறப்பாக கௌரவம் செய்திருக் கிறார்கள். 2015 ஜனவரியில் கூட, சிங்கப்பூருக்கு கும்பாபிஷேகத்திற்குச் சென்று வந்தேன்.

**கேள்வி- சிறந்த சம்ஸ்கிருத அறிவு மிக்க நீங்கள் சம்ஸ்கிருத நூற் பதிப்புக்களையும் செய்திருக்கிறீர்களா?**

பதில்- இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் நிரம்ப சம்ஸ்கிருத, ஆகம, பத்ததி நூல்கள் வெளி வருகின்றன. அவற்றுள் அநேகமானவை என்னுடைய ஆலோசனையை பெற்று திருத்தி, செம்மைப்படுத்தி வெளிவருகின்றன. இதை அந்த நூல்களிலேயே வெளியீட்டாளர்கள் நன்றி யோடு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். என்னுடைய கைப்பிரதிகள் பலவும் இன்று அச்சேறி இருக்கின்றன.

**கேள்வி- நீங்கள் புதிதாக இலக்கிய வடிவங்களைச் செய்துள்ளீர்களா?**

பதில்- இப்பொழுது கிடைக்கிற பத்ததிகளை செழுமைப்படுத்தி, யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் வெளிப்படுத்துவதிலேயே நான் மிகுந்த கவனம் செலுத்தி வந்திருக்கிறேன். முக்கியமாக, அகோர சிவாச்சார்யார், சத்யோஜாத சிவாச்சார்யார் போன்றவர்களின் பத்ததிகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை தெளிவாக இளம் சிவாச்சார்யர்களும் புரிந்து கொண்டு கிரியைகளை செய்யும் விதமாக புதுப்பிரதிகளை ஆக்கியிருக்கிறேன். அவை வெளிவந்து பலருக்கும் பிரயோசனமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி- அவ்வாறாயின், குறிப்பிட்ட சில நூல்களை தங்களால் செழுமையாக யாவரும் புரிந்து கொள்ளுமாறு சீரமைக்கப்பட்ட நூல்கள் என்று சொல்ல முடியுமா?

பதில்- ஆம். பலவற்றைச் சொல்லலாம். ஆனால், முக்கியமாக, விநாயகர், சுப்பிரம்மண்யர், அம்பாள் போன்ற மூர்த்திகளுக்கான நவகண்ட ஸ்பர்சாஹூதிகள் புரிதலற்றதாயும், மிகவும் குழப்பமானதாயும் அமைந்திருந்தன. இவற்றை சிவனுக்கே உரிய ஸ்பர்சாஹூதியை வைத்து செழுமைப்படுத்தியிருக்கிறேன். இவை இப்போது பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இதே போலவே, சிவனுடைய திரியத்திரிம்சத்குண்ட பட்ச மஹாகும்பாபிஷேகபத்ததி பிரகாரம் அம்பாள், விநாயகர், சுப்பிரம்மண்யர் போன்ற மூர்த்திகளுக்கான பத்ததியை ஒழுங்கமைத்து செழுமைப்படுத்தியுள்ளேன்.

இவற்றை விட, நம்முடைய முன்னோர்கள் சிவாச்சார்ய அபிஷேகத்திற்கும், சிவ தீக்ஷைக்கும் அகோரசிவாச்சார்யருடைய மிக விரிவான பத்ததியையே பல்லாண்டுகளாக பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பத்ததியை விளங்கி செய்வது என்றால் மிகவும் கடினம். நிறைவான சம்ஸ்கிருத அறிவும், சாதுர்யமும் கொண்ட ஒருவராலேயே அப்பத்ததிக்கிரம யாகபூஜையை செய்ய முடியும். எனவே, நான் அதே பத்ததியையே யாவரும் புரிந்து கொண்டு கைக்கொள்ளும் வண்ணம் இலகுபடுத்தி எழுதியுள்ளேன். அதுவும் இப்பொழுது பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படி நிறையச் சொல்லலாம்.

கேள்வி- நீங்கள் செய்து வந்த பணிகள் சில வேளைகளில் விமர்சனங்களுக்கும் உட்பட்டதை அறிந்திருக்கிறேன். அது பற்றிக் குறிப்பிடுங்கள்?

பதில்- ஆமாம்... அவை மிக சுவாரஸ்யமானவை. ஏழாலையில் வாழ்ந்த கலாநிதி கந்தையா உபாத்யாயர் மிகுந்த அறிஞர். சைவசித்தாந்த அறிவு மிகுந்தவர். தவறாமல் சிவபூஜை செய்பவர். அவர் எனது சில செயற்பாடுகளை கண்டித்து கட்டுரைகள் எழுதினார்கள். என்னை அறிவுபூர்வமாக விமர்சித்த அந்த அறிஞரை நான் ஒரு விழாவில் பேசமுயன்றும் அவர் என்னைக் கண்டு கொள்ளவில்லை. பிறகு, நான் நேரில் அவரது இல்லத்திற்குச் சென்று பேசினேன்.

அவர் தம்முடைய கருத்துக்களைச் சொன்னார். நான் என்னுடைய கருத்துக்களைச் சொன்னேன். பல்வேறு விடயங்கள் பற்றியும் பேசினோம். கருத்துக்கள் ஏற்கப்பட்டன என்று சொல்வதற்கு இல்லையாயினும், பிறகு, என்னோடு மரியாதையோடும் அன்போடும் அவர் பழகினார்.

கேள்வி- நீங்கள் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வேதாகமமரபை பேணி வந்திருக்கிறீர்கள். இவற்றுக்காக உங்களுக்கு கௌரவங்கள் கிடைத்ததா?

பதில்- எனக்கு புங்குடுதீவில் முதன்முதலாக, “வேதசிவாகம பாஸ்கர” என்ற விருதை வழங்கினார்கள். பிறகு நிறைய விருதுகளும் பட்டங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கிடைத்தன. லண்டனுக்குச் சென்றிருந்தபொழுது “வேதவிசாரத”, “சாதகரத்னாகர”போன்ற பட்டங்களை தந்தார்கள். எனினும், நான் ஆரம்பக்காலம் தொட்டு செய்து வந்த விடயங்களை கோர்வைப்படுத்தி ஆவணப்படுத்த முயற்சிக்காததால், எனக்கு அரசு முறையிலான கௌரவங் கள் முறையாகக் கிடைக்கவில்லை.

வேத ஆகம பணியை கலைப்பணியாக அவர்கள் கருதாதலாலும் இக்கௌரவங்களில் என்னை சேர்க்கவில்லை. இதற்கிடையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் அரச உயர் பதவியிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெரியவர் இங்கே நடக்கிற சேவைகளை அறிந்து, என்னை அணுகி, படங்கள், விவரங்கள், சான்றிதழ்கள் என்று யாவற்றையும் தருமாறு பன்முறை கேட்டு வாங்கிச் சென்றார்கள். ஆனால், துரதிட்டவசமாக, அவரால் அதனை உடனே செய்ய இயலவில்லை. சில மாதங்களிலேயே அவர் காலமாகியும் விட்டார். அவரிடம் கொடுத்தவை எனக்கு பிறகு கிடைக்கவே இல்லை.

**கேள்வி- உங்களிடம் கல்வி கற்ற மாணவர்களில் யாவரை முதன்மையாக நீங்கள் சொல்வீர்கள்?**

பதில்- நிரம்ப மாணவர்கள் கற்றார்கள். பல்வேறு இடங்களில் பல்வேறு நல்ல பணிகளைச் செய்து வருகிறார்கள். இவர்களில் அவர் இவர் என்று சொல்ல இயலாது என்றாலும் தெல்லிப்பளை நாராயணர் (பிரம்மஸ்ரீ நாராயண வாத்யார்), மயிலணி வரதராசர் (அமரர் பிரம்மஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக்குருக்கள்), அளவெட்டி சந்திரர் (கும்பளாவளை பிரம்மஸ்ரீ சந்திரக்குருக்கள்) ஆகியோர் முன்னோடிகளாக திகழ்ந்தார்கள். இன்றைக்கும் பல மாணவர்கள் புத்தெழுச்சியோடு உருவாகி வருகிறார்கள்.

**கேள்வி- வேத பாரம்பரியத்தில் நீங்கள் சிறப்பாக முன்னெடுத்த விடயம் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

பதில்- உதகசாந்தி ஜபம், ஏகாதசருத்ர ஜபம் போன்றவை முன்பு அரிதாகவே செய்யப்பட்டன. தாராளமாக பலரும் இவற்றை கற்கவும், பிரயோகப்படுத்தவும் வைதீக கிரியைகள் பலரும் பழகிக் கொள்ளவும் நான் இயன்ற அளவு செயற்பட்டிருக்கிறேன்.

**கேள்வி- தங்களின் புதல்வர்களும் தங்களுடைய பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வார்களா?**

பதில்- இதை யாவரும் நன்கு அறிவர். என்னுடைய புதல்வர்கள், சகோதரர்கள், மருமகன்மார், பேரப்பிள்ளைகள் என்று யாவரும் வேதாகம பாரம்பரியத்தை சிறப்பாக முன்னெடுத்து வருகிறார்கள். நன்கு செயற்படுகிறார்கள். தாங்கள் கற்றதை பிறருக்கும் கற்பித்தும் வருகிறார்கள்.

குருக்களுடன் இணைந்து அவரது குடும்ப அங்கத்தவர்களான பிரம்மஸ்ரீ தா.சுப்பிரம்மண யக்குருக்கள் (மணிவாத்தியார்), பிரம்மஸ்ரீ சிவபாலசர்மா, பிரம்மஸ்ரீ ம. தானுநாதக்குருக்கள், பிரம்மஸ்ரீ ம. சோமசுந்தரக்குருக்கள், பிரம்மஸ்ரீ ம. ஸ்ரீவத்சாங்கக்குருக்கள் எனப்பலரும், அவர்களது பிள்ளைகளும் சேர்ந்து பெரியளவில் வேதசிவாகமப்பணிகளை செய்து வருவதை அவதானிக்க முடிந்தது.

இதே போலவே, குருக்களின் துணைவியாரான ஸ்ரீமதி புவனேஸ்வரி அம்மாள் அவர்கள் மிகச்சிறந்த இல்லத்தரசியாக, குருபத்தினியாக விளங்குகிறார். கடந்த நாற்பதாண்டுகளாக இயங்கும் குருகுலத்தில் கல்வி கற்கிற மாணவர்களுக்கு இலவசமாக உணவு தந்து தன் பிள்ளைகள் போலவே, அவர்களிடம் அன்பு செலுத்தி பேணி வந்திருக்கிறார். இன்னும் அதே பணிகளை அவர் தொடர்கிறார். தனது பதியினுடைய தர்மகார்யங்கள் யாவற்றிலும் கைகொடுக்கும் காரிகையாக, அவர் திகழ்வதைப் பார்க்கிறபோது ஆச்சர்யமாகவே இருக்கிறது.

அதே போலவே, எந்தப்பெருமையும் இல்லாமல் மிகவும் எளிமையாகவும், இயல்பாகவும் பேசும் குருக்களின் சேவைகள் கண்டு அவருக்கு நன்றி சொல்லி விடைபெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 17. சர்வாத்மாசார ரமணன்

சூர்ய ஒளியென அடியார்கள் அனைவர்மீதும் வேற்றுமையின்றி சமமாகப் பொழிகிறது பகவானின் அன்பும் அருளும். அதைக் கிரகித்துக்கொள்ளும் திறமையும் சக்தியும் அடியவருக்கடியவர் மாறுபடுகிறது. ஜன்னல் கதவுகளைத் திறக்கும் அளவில் ஒளி பரவுவது போல், நம் மனக்கதவுகள் திறக்கும் அளவிற்கு ஐயனின் அருளும் பாய்கிறது.



இங்கு பகவானின் ஒரு அரிய பக்தரை அறிவிக்க விரும்புகிறேன். அவர்தான் ராமநாத பிரம்மச்சாரி. மிகச்சிறிய மெலிந்த உருவினர். மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது என்பதுபோல் அச்சிறிய உடலில் குடிகொண்ட பக்தியும் வைராக்கியமும், எளிமையும், அசைக்க முடியாத வலிவுடையவை.

திருவண்ணாமலை வேத பாடசாலையில் மாணாக்கனாக இருந்தான் சிறுவன் ராமநாதன். பகவான் முதல் சந்திப்பிலேயே தன்னவனை ஆகர்ஷித்துக் கொண்டது. அவனே பிற்காலத்தில் சங்கோசத்துடன் விவரித்தபடி "பகவானின் ஒரேயொரு காந்தப் பார்வைதான், அந்தக் கமல நயனங்களின் கண்ணொளி பட்டதுதான் தாமதம், என் உள்ளத்தில் பகவான்மீது "தாய்ப்பாசம்" ஊற்றுக்கண் திறந்தாற் போல் பெருக்கெடுத்தது; (இந்த அபூர்வப் பிள்ளைக்கு 'தாய்ப்பாசம்' பொங்கியதாம் பகவானிடம்)

வேத பாடசாலையில் பாடம் முடிந்த உடனேயே, நேராக மலையேறி பகவானிடம் போய் எத்தனை நேரம் முடியுமோ, அதுவரை அங்கேயே இருப்பான் ராமநாதன். இதற்காக பாடசாலையில் கிடைக்கும் நல்ல சாப்பாட்டையும் துறந்து பிச்சையெடுத்துண்ணவும் தயாராக இருந்தான்.

ராமநாதனுக்குப் பகவான்மீது இருந்த அன்பு அத்தனை ஆழ்ந்தது என்றால், அதற்கு ஒரு மாற்றும் குறைந்ததல்ல பகவான் அவனிடம் காண்பித்த பாசம்! அவன் ஒரு சமயம் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தபோது பகவான் தானே அவனைப் பராமரித்துப் பாதுகாத்தது. குஞ்சுஸ்வாமி இவர் சம்பந்தமான மனமுருக்கும் சம்பவமொன்றை எடுத்துரைத்தார்.

"1920இல் நான் முதன்முதலாக வந்த சமயம், இங்கு பிளேக் நோய் பரவியிருந்தது. அப்போதுதான் அண்ணாமலை ஸ்வாமி என்ற இளைஞர் அதற்குப் பலியாகியிருந்தார். அதனால், பகவான், பெருமாள்சாமி, ராமநாதன் மற்றும் சிலரைத் தவிர மற்ற எல்லோரும் ஊரைவிட்டுப் போய்விட்டிருந்தார்கள். பாவம் ராமநாதன்! பிளேக்கால் பீடிக்கப்பட்டு, உடல் வீங்கி சீழ் வடிய கந்தாச்ரமத்தின் ஒரு மூலையில் துவண்டு சுருண்டிருந்தான். பகவானையும் அந்தக் கொடிய நோய் பீடித்துவிடக் கூடுமே என்ற கவலையால் அனைவரும் பகவானை

*சொந்த நாற்காலியில் மட்டுமே ஒருவன் சுகமாக உட்கார முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமநாதனை விட்டு வெகுதூரத்தில் கொண்டு போய் வைத்திருக்க வேண்டுமென்று, பக வானுக்குத் தெரிவிக்காமலே தமக்குள் திட்டமிட்டிருந்தனர். அதன்படி அனைவரும் பகவானுடன் கிரிபிரதஷிணம் செய்யப் புறப் பட்டனர். பச்சையம்மன் கோயிலை நெருங்கி யதும், பகவானிடம், எல்லோரும் கோவிலி லேயே தங்கிவிடலாமென்றும், அதற்கு வேண்டிய சாமான்களனைத்தும் கொண்டு வந்து தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் இங்கிருந்தே ராமநாதனுக்கு உணவு அனுப்பலாமென்றும் அவன் கந்தாச்ரமத்தி லேயே பூரண குணமடையும்வரை இருக்கலா மென்றும் சொன்னார்கள். பகவான் அமைதி யாக பதிலளித்தது: ஓகோ, அப்படியா? ராம நாதனைத் தனியே அங்கு விட்டுவிட்டு நாமெல்லோரும் இங்கு தங்கவேண்டும்; நீங் கள் அவனுக்கு இங்கிருந்து உணவு அனுப் பப் போகிறீர்கள்; அதுதானே திட்டம்? சரி, நீங்கள் எல்லோரும் இங்கு தங்கி விடுங்கள். நான் மாத்திரம் போய் அவனிடமிருந்து அவ னைக் கவனித்துக் கொள்கிறேன். எப்படியும் நீங்கள் ராமநாதனுக்கு ஆகாரம் அனுப்பப் போகிறீர்கள். அதனுடன் சேர்த்து எனக்கும் கொஞ்சம் அனுப்பி விடுங்கள் போதும் என்றது.

திட்டத்தைக் கைவிட்டு அனைவருமே கந்தாச்ரமத்துக்குத் திரும்பினரென்று சொல் லத் தேவையே இல்லையல்லவா? ராமநாதன் சீக்கிரமே குணமடைந்தான். பகவானின் நேரடி அருட்பார்வையும், கவனமும் அவன்பால் இருக்கும்போது அவன் நலமடைவது தடுக்க முடியாதது அல்லவா?"

குஞ்சுஸ்வாமி கந்தாச்ரமத்தில் வசித்த காலத்தில் நினைவுகூரத்தக்க விந்தையான நிகழ்ச்சியொன்று நடந்தது. பகவானின் அன்னை அழகம்மைக்கும் ராமநாதனிடம் மிகப் பிரியம் இருந்தது. ஆசாரமான பிராமணர்கள் உப யோகிக்கும் கற்சட்டியை தேய்த்து வைக்கும் பொறுப்பை பிராமணச் சிறுவனான ராமநாத னிடம் ஒப்படைத்திருந்தாள் அன்னை. அவ னுக்கு அதைத் தேய்ப்பதில் ஏனோ வெகு தாமதமாகும். முடியாததாலோ, அல்லது அழகம்மையிடம் உள்ள பக்தி சிரத்தையால், நன்றாகத் தேய்க்க வேண்டுமென்று எண்ணி னானோ என்னவோ, காரணமெதுவாயினும் கற்சட்டியைத் தேய்த்துக் கழுவி முடிப்பதில் மிகவும் தாமதமாகும். அம்மா கூப்பிடுவாள் 'ராமநாதா கற்சட்டியைக் கொண்டு வா', அவ னும், 'இதோ வருகிறேன், வருகிறேன் என்று சொல்லிக் கொண்டே மேலும் தேய்த்துக் கொண்டே இருப்பான். தினசரி சமையலுக்குத் தேவைப்படுவதால் ராமநாதனை அம்மா அதைக் கொண்டுவரச் சொல்லிக் கூப்பிடு வதும், அவன் பதிலளித்துக்கொண்டே தாமதிப்பதும் அனேக தடவைகள் நடக்கும். ஒருநாள் இந்த ஜுகல் பந்தி நடக்கையில் பகவான், 'அம்மா இந்தப் பல்லவி பாடுவதை விடமாட்டாள், இவனும் தன் அனுபல்லவியை நிறுத்த மாட்டான்' என்றது பிரியமான குறு சிரிப்புடன்.

அழகம்மை சமாதியாகி பகவான் இந்த ஆச்ரமத்துக்கு வந்துசேர்ந்த பின்னரும், ராமநாத பிரம்மச்சாரி தொண்டு செய்வதை நிறுத்தவில்லை. அந்த மெலிந்த உருவத்தின் சலியாத உழைப்பைக் கண்டு அனைவருக் கும் ஆச்சரியம், சுற்றுப்புறமெல்லாம் துப்புரவு செய்வது, அடியாருக்குத் தேவைப்படும் எடு பிடி வேலைகளைச் செய்து தருவது, இவை யெல்லாம் அவர் உவந்து செய்யும் பணிகள். அவர் தானாகவே மேற்கொண்ட கடமை. எல்லோரும் சாப்பிட்டபின், எட்டரை மணி ரயிலில் வருபவர்களுக்காகச் சாப்பாட்டைச் சூடாக வைப்பது, அப்படி வருபவர்களுக்கு, உணவளித்து, படுக்க ஓலைப்பாயை தட்டி விரித்து, தலையணையாக சிறு கட்டையை யும் தந்து உதவுவார். பிறருக்குச் சேவை செய்வதில் அவர் எவ்வளவு தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்திக் கொண்டாரென்பது நேரில் பார்த்தவர்களால்த்தான் நம்ப முடியும். அவர் ஆழ்ந்து உறங்கும்போது கூட யாராவது இரவில் தண்ணீர் என்று மெல்ல முனகினால் கூடப்போதும், உடனே அவர் துள்ளியெழுந்து, ஓட்டமாக ஓடி, மகிழ்வுடன் போய் அதை அவர்களுக்காகக் கொண்டு வருவார். சேவையே அவரது உயிர்நாடி என்று கூடச் சொல்லலாம். 'ஆண்டவனே' என்பது அவர் நாவில் சதா தாண்டவமாடும் சொல். யாராவது கேலி செய்தாலும் 'ஆண்டவனே!' என்று சிரிப்பதுதான் அவருடைய பதில். எதை மறுத்தாலும் ஏற்றாலும் 'ஆண்டவனே!' என்றே அதனால் அவர் பெயரும் 'ஆண்டவன்' என்றாகிவிட்டது. நாளடைவில் ராமநாத தீஷிதர் அல்லது பிரம்மசாரி என்ற பெயரே அனேகமாக எல்லோருக்கும் மறந்துவிட்டது.

ஆண்டவன் தீவிரமான காந்தியவாதியும்கூட தவறாமல் சர்க்காவில் நூல் நூற்பார். தான் நூற்ற நூலால் நெய்த வஸ்திரத்தை காந்திஜிக்கு நேரில் போய் கொடுத்துவிட்டு வந்தார். ஆச்ரமத்திற்குத் திரும்பியதும், அந்த நிகழ்ச்சியை அவர் குதூகலத்துடன் விவரித்ததை அனைவரும் ரசித்தனர். காந்திஜி இருபத்தொரு நாள் உண்ணாவிரதம் ஆரம்பித்தபோது, இவரும் இங்கே அதே மாதிரி விரதமனுஷ்டிக்கத் தொடங்கினார். ஆனால் மூன்று நாட்களானதும் குஞ்சுஸ்வாமி மிகவும் வற்புறுத்தி ஆண்டவனை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி செய்தார். அடியார்களுக்குள் விளையாட்டு, வேடிக்கைப் பேச்சுகளுக்கும், அன்பு கலந்த கேலிக்கும் ஆண்டவன்தான் எளிமையான இலக்கு. ஊருக்குள் இருக்கும் சுவரொட்டிகளில் காணப்படும் விளம்பரங்களையெல்லாம் படித்துவிட்டு வந்து தெரிவிக்கும்படி அடியார்கள் சொன்னதற்காக, அவர்களை மகிழ்விக்கும் நோக்கத்துடன், ஆண்டவன் அதையும் செய்வார். பொறுமை, பணிவு, கள்ளமற்ற குழந்தை உள்ளம், எளிமை இவற்றின் மறுபெயர்தான் 'ஆண்டவன்!'

ஆண்டவன் ஊருக்குள் போய்விட்டுத் திரும்புவது கண்கொள்ளாக் காட்சி. மெலிந்த வலக்கை, பிய்ந்த குடையைப் பலமாகப் பற்றியிருக்கும். இடது கையில் சிறிது சாப்பாட்டுடன், நசுங்கிய சிறு அலுமினியத் தூக்கு ஊஞ்சலாடும். போதாக்குறைக்கு ஊரில் யாராவது அடியவர் பகவானுக்கு என்று பிளாஸ்க்கில் (அந்தக் காலத்தில் இது பணக்காரச் சின்னம்) காபி கொடுத்தனுப்பி இருப்பார். அதையும் எப்படியோ சுமந்து கொள்வார். அவர் பை எதுவும் வைத்துக்கொள்வதில்லை ஆதலால், இறுக மடித்துக் கட்டி இருக்கும் வேட்டியின் மடிப்புக்குள், கடைத்தெருவில் வாங்கிய காய்கறிகளைத் திணித்திருப்பார். அதனால் ஆங்காங்கு தொங்கும் வேட்டி மடிப்பு, அவர் ஜாக்கிரதையுடன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், அவரது முட்டுகளில் இடித்துக்கொண்டே வருவதனால் ஆண்டவனது நடை வாத்து நடையாகிவிடும். அவர் அணிந்திருந்த காலணி காலத்தை வென்ற 'பழங்கால நண்பர்கள்'. ஓட்டை விழும்போதெல்லாம் அட்டை வைத்து மேலும் மேலும் தைத்ததில் தடித்துப் போயிருந்த அந்தக் காலணியின்மீது ஆண்டவனுக்கு விசுவாசமதிகம். யார் என்ன கேலி செய்தாலும் தம் மெலிந்த காலில் அவற்றை அணிவதைத் தவிர்க்க மாட்டார். இந்தக் கோலாகலத் தோற்றம் காண்பவர் மனதில் சிரிப்புடன், அன்பும் அனுதாபமும் உண்டாக்கும்.

இளங்கன்றாக இருந்த லஷ்மியை அருணாசலம் பிள்ளை ஆச்ரமத்துக்கு ஓட்டி வந்தபொழுது 'இங்கு அவற்றைப் பார்த்துக் கொள்ள யாருமில்லை' என்று சொல்லி பகவான் அவரைத் தடுத்துப் பார்த்தது. இந்த அயனான சந்தர்ப்பத்தில், ஆண்டவன்தான், அந்தப் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்வதாக தயக்கமின்றி முன்வந்தார். அதன்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதகாலம் அவை இரண்டும் அவருடைய அன்பான கவனிப்பில் இருந்தன. அதன்பின் ஊருக்குள்ளிருந்து ஒருவர் ஆச்ரமத்துக்காக அப்பசுக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதனால் பசு லஷ்மி பகவானை வந்தடைந்ததில் ஆண்டவனுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.

அச்சமயம் பலாக்கொத்தில் முருகனார், முனகல வெங்கட்ராமையா, யோகி ராமையா, குஞ்சுஸ்வாமி, விஸ்வநாதசுவாமி முதலிய அடியார்கள் வசித்து வந்தனர். அவர்களது இருப்பிடங்களை கூட்டிப் பெருக்கி, சுத்தம் செய்தல், பொழுது சாயும் நேரம் விளக்குத் திரிகளை சீர் செய்து எண்ணெய் நிரப்பி விளக்கேற்றுதல், மற்றும் சில வேலைகளை யாரும் சொல்லாமலே தாமாகவே காலம் தவறாது கருத்துடன் செய்வார் ஆண்டவன்.

குஞ்சுஸ்வாமி பழைய நினைவுகளைத் தூசுதட்டி வெளிக்கொணர்ந்தார். 'அந்தக் காலத்தில் நாங்கள் எல்லோரும் இளம் வயதினர். எங்களை மிகுந்த வைராக்கிய சீலர்களாக பாவித்துக் கொண்டோம். இருப்பிடத்தைச் சுத்தம் செய்யவோ, விளக்கேற்றவோ, எங்களுக்கு அக்கறை இருக்காது. விறகில்லாவிட்டால் சாப்பாட்டைத் தவிர்த்து விடுவோம். ஆனால் ஆண்டவன் இவையனைத்தையும் கருத்துடன் எங்களுக்காகச் செய்வார்.

ஒருநாள் நாங்களனைவரும் பகவான் சந்நிதியில் இருந்தபொழுது, ஏகநாதராவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் 'பலாக்கொத்து சர்வாதிகாரி'யை மிகவும் விசாரித்து எழுதியிருந்தார். அதைப் படித்த பகவான் 'அது யார்? இதொன்றும் எனக்குத் தெரியாதே! என்றது. நான் எழுந்து நின்று தயங்கியவாறு, ஆண்டவனைச் சுட்டிக் காட்டி, நாங்கள் அவரை 'பலாக்கொத்து சர்வாதிகாரி' என்று விளையாட்டாகக் கூப்பிடுவோம். அவர் எங்களுக்காக சாமான்கள் வாங்கி வருவது, விளக்குகளுக்குத் திரியிட்டு ஏற்றுவது, தரை பெருக்குவது முதலான வேலைகளை உவந்து செய்வதால், அவரைச் 'சர்வாதிகாரி' என்று பிரியத்தால் பெயரிட்டுள்ளோம் என்றேன். என்னிடம் ஏன் இத்தனை நாட்களாகத் தெரிவிக்கவில்லை? இந்த மாதிரி சர்வாதிகாரியிருந்தால் எல்லோருக்கும் சந்தோஷம்தானே? என்று பகவான் மகிழ்வாகச் சொல்லியது. ஆண்டவன் எழுந்து வெட்கத்துடன், எனக்குத் தெரியாது பகவானே, அவர்கள் விளையாட்டாக அப்படிக் கூப்பிடுகிறார்கள் என்றார். 'வேடிக்கை என்ன அதில்? நல்லதுதானே' என்றது பகவான், பரிவுடன். (தொடரும்...

நாடாயிருந்தால் என்ன? காடாயிருந்தால் என்ன? மேடாயிருந்தால் என்ன? பள்ளமாயிருந்தால் என்ன? எங்கு உன்மேல் நடக்கும் மனிதர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அங்கு நீயும் நன்றாக வாழ்கிறாய். மண்ணே! என்று மண்ணை வாழ்த்திப் பாடியிருக்கிறாள் தமிழ் முதாட்டி ஔவையார்.

இது இப்படித்தான் நடக்கும். இப்படித்தான் நடக்க முடியும் என்று எந்த முயற்சியும் நீ ஆசைப்படுகிறபடியே முடியவேண்டும் என்பதற்காகச் செயலை மறந்து விளைவை மட்டும் எண்ணிக் கற்பனைகளை வளர்க்காதே. அது வேறுவிதமாக நடந்தாலும் தாங்கிக் கொள்ளத் தயாராக இரு. கீழே விழுவது மீண்டும் எழுவதற்காகவே.

*-விவேகானந்தர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரும் தண்ணீரும்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

கவலையின் வெளிப்பாடு கண்ணீர். கண்ணீரும் கம்பலையும் என்பது வழக்காறு. கம்பலை- கவலை. ஏழையழுத கண்ணீர் கூரிய வாளுக்கு ஒப்பு. கண்ணீரில் இருவகையுண்டு. ஒன்று ஆனந்தக் கண்ணீர்; மற்றது கவலைக் கண்ணீர். கவலைக் கண்ணீர் முன் கண்ணால் வடிவது. கடைக்கண்ணால் வருவது ஆனந்தக் கண்ணீர். இறைவனையே நினைந்து கண்ணீர் வடித்தனர் அருளாளர். மனித குலத்துக்கே சொந்தமானது கண்ணீர். சில பிராணிகள் கூடக் கண்ணீர் சொரிவதை நாம் கண்டு கண்ணீர் விட்டிருக்கிறோம். அழுத பிள்ளை பால் குடிக்கும். ஞானசம்பந்தர் அழுதார். உண்ணாமுலையாள் பொன் வள்ளத்திற் பால்கொடுத்தாள். எட்டு மெய்ப்பாடுகளில் அழுகையுமொன்று. அழுதடியடைந்தவர் ஆளுடையடிகள். "அழுபவர் தொழுபவர் ஓர்பால்" எனப்பாடினர். எனவே கண்ணீர் சொரியும் அபலைகளின் கண்ணீரைத் துடைப்பதே மனிதப் பண்பு. மனிதநேயம் மற்றவர் துயர் துடைப்பது. சஹ்ருதயம் சம உள்ளம். சம உள்ளமுடையவன் பிறர் துயர் கண்டு கண்ணீர் வடிப்பர். பாஞ்சாலி ஆறாக இருதடங்கண் அஞ்சன வெம்புனல் சோர அழுதாள். இந்தக் கண்ணீர் பிறர் துயர் துடைக்க வைக்கும். ஆனந்தக் கண்ணீர் பக்திப் பரவசத்தால் வரும். தன்னை அறியாமல் வரும். கண்ணீர் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் அடையாளம்.

நீரில்லாமல் உலகமே நடைபெறாது. நீருக்கு மழை முக்கியம். நீராகாரம் நல்ல உணவு. நீர் ஆலயங்களிலே தீர்த்தமாகிறது. தீர்த்தம் புனிதமானது. அத்தா உன் அடியேனை அன்பாலார்த்தாய் அருள்நோக்கிற் தீர்த்த நீராட்டிக் கொண்டாயென அப்பர் பேசுகிறார். பாசுரங்களை ஆழ்வார்கள் தீர்த்தமென்பர். தீர்த்தக் கிணறு, கேணி, குளம், ஆறு இல்லாமலே குழாய் நீரில் இன்று தீர்த்த விழா மேற்கொள்ளப்படுவது நகைப்புக்கிடமானது. கங்கையிற் புனிதமான தீர்த்தமேயில்லை. தண்ணீர் நில நலத்தாலென்று அவ்வை பாடினாள். பஞ்ச பூதங்களிலொன்று நீர். நிலத்தியல் பால் நீர்த்திரிந்தற்றே மாந்தர்க்கினத்தியல்பதாகும் அறிவு என்றார் வள்ளுவர். நீர் உணவைத் தரும், உணவாகவும் அமையும். சுத்த நீர் பல நோய்களைத் தீர்க்கும். காலையிலே நீர் அருந்துவதும் ஒரு மருத்துவநெறி. நீராற் சூழ்ந்தது இவ்வுலகம். புனிதம், சுத்தம், தூய்மை பேண நீர் தேவை. நீரை வேகவைத்தால் வெந்நீர். சுடுநீர் மற்றது தண்ணீர். பச்சைத் தண்ணீர். சுடுதண்ணீர் என்பது பிழையான பிரயோகம். நிறைகுடம் தழும்பாது. பழைய சித்தர்கள் நீர்மேல் நடந்தனர். தீமேல் நகர்ந்தனர். பெரும் பாவிகள் தீக்குளித்து பாவ விமோசனம் பெறுவர். மன்னனை வாழ்த்திய மூதாட்டி வரப்புயர நீரும், நீருயரப் பயிருயரும் எனப் பாடி அரசனை வாழ்த்தினாள். பசுவுக்கு வைப்பதற்காக நீரை இரக்காதேயென ஐயன் வள்ளுவன் பாடினான்.

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

திருக்குறள் 1066

பசுவின் தண்ணீர் விடாயை நீக்கற்பொருட்டுத் தண்ணீர் தருமாறு பிறரிடம் கேட்பதுபோல், ஒருவனின் நாக்குக்கு இழிவான செயல் வேறொன்றுமே இல்லை. இரத்தலை இழித்தார் திருவள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாயின் என்ன செய்யவேண்டும். ஒரு வாளியைத் தேடியெடுத்து கிணற்றிலே நீரை மொண்டு ஒரு பாத்திரத்தில் நிறைத்துக்கொண்டு போய் பசுவுக்கோ எதற்கேனும் தண்ணீர் விடாயைத் தீர்க்கவேண்டும். கானல் நீரைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது. எழுதாவிதிக்கு அழுதாற் தீருமோ என்றோர் பழமொழி. பாரசீக கவிஞன் உமர்கயாம் இதைக் கவிதை வடிவிலே வடித்துள்ளான்.

எழுதிச் செல்லும் விதியின்கை எழுதியெழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவுமதை செய்தாலும்
அழுத கண்ணீர் ஆறெல்லாம் அழுதோர் எழுத்தை அழித்திடுமோ

நாடகங்களிலே இன்பியல் நாடகம் துன்பியல் நாடகமென இரண்டுண்டு. இன்பியல் சிரிப்பு நகைச்சுவை கலந்தது. துன்பியல் கண்ணீர் விடச் செய்யும். நாம் தினமும் காலையிலும் மாலையிலும் விளக்கேற்றி ஒரு குவளையிலே தண்ணீர் வைத்து ஊதுவத்தி கொளுத்தி பூ வைத்து வணங்குகிறோமே ஏன்? நமது துன்பக் கண்ணீரைச் சேர்த்து இறைவனுக்கு நிவேதனம் செய்கிறோம். "எம் கண்ணீரைத் துடைத்துவிடு இறைவா" என்று. இதுவே உள்ளார்ந்த அர்த்தமாம். நாயன்மார்கள், ஆழ்வார்கள், தாயுமானவர், வள்ளலார், பட்டினத்தார் முதலியோர் கண்ணீருக்குக் காவியமே செய்தனர். புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு இது திருமூலர் வாக்கு.

இவ்வரிசையிலே திருவாசகம் தந்த மணிவாசகரின் கண்ணீர் அஞ்சலியைக் காண்போம்.

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உனைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்துறுமாறே.

திருச்சதகம் 90

இ.ள்:

அடியார்களுள், யான் ஒருவனே பொய்மயமானவன், என் மனமும் வஞ்சமுடையதே. என் அன்பும் களங்கமற்றதன்று, ஆனால் தீவினையுடையேன், பிழையுணர்ந்து வருந்தி அழுவேனாயின் உன்னையடையலாமே. தேனே, அமுதே, கருப்பஞ்சாறே, இவைபோல இனிமை பயக்கும் பெரியோனே, அடியேன் உன்னை வந்து சேருமாறு அருள்புரியாயே! மான்- மகான், பெரியோன். தேன்- இச்சை, அமுது- அறிவு கருப்பஞ்சாறு- செயல்.

அழுதும் பிள்ளை அவனே பெறவேண்டும். அஃதேபோல இறைவனோடு கலக்க அழுவது ஒன்றே வழி என்பர் வாதவூரர். பொன்னை உருக்க உருக்க அதன் கழிம்பு அகல்வது போன்று நாம் மெய்யுருகிப்பாடி அழ- அழ எம் மனம் புடத்தங்கமாகி ஒளிர்கிறது. வள்ளுவரும்,

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிப் பவர்க்கு என்றார்.

குறள்- 267



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்போல, தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு மிகும். அழுதால் உனைப் பெறலாமேயென்ற சுவாமிகள் அழுவது ஒன்று தான் வழியெனத் தனக்குக் கூறுவது போன்று நமக்கும் அறிவுறுத்துகின்றார்.

முழுமுதலே ஐம்புலனுக்கும் மூவர்க்
கும்என் றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்
திரள் வான் குழுமிக்
கெழுமுத லே அருள்தந்தி ருக்கஇரங்
குங்கொல் லோஎன்று
அழுமது வேயன் றிமற்றென் செய்கேன்
பொன்னம் பலத்தரசே

கோயில் மூத்த திருப்பதிகம் 4

செயலற்று வருந்துவதொன்றே தன்னால் முடிந்தது- ஆகுவதொன்று என்பதை எண்ணி "அழுமது வேயன்றி வேறுயான் எதைச் செய்ய முடியும் என்பதை உணர்த்தும் இத்திருவாசகம். இந்த மன உருக்கத்தை, உருகி உருகிப் பாடுகிறார் ஆளுடையடிகள்.

தழலது கண்ட மெழுகது போலத்
தொழுது உளம் உருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே ஆகிநல் இடையறா அன்பின்
பசுமரத்து ஆணி அறைந்தால் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகம் குழைந்து அனுகுலமாய் மெய்விதிர்த்துச்

போற்றித் திருஅகவல் 60-67

கற்றாமன மெனக்கதறியும் பதறியும் 73

கம்பித்து- நடுங்கி. கன்று+ஆ= கற்றா. ஈன்றண்ணிய பசு. கன்றினையுடைய பசுவானது, கன்றினைக் காணாதபோது அலறி மனம் பதைத்தல் போல, அலறி நடுங்கி முழுமுதற் கடவுளாம் சிவனையன்றி- கனவிலும் பிற தெய்வத்தை நினையே னென்ற கோட்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய சைவ சமயிகள் இதை உணர்வார்களாக.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.

திருச்சதகம் 1

என்னை அடிமையாக உடையவனே, நின் பெருங்கருணைத் திறத்தை நினைந்து, உடம்புதானே. மயிர்க்கூச்செறிந்து நடு நடுங்க, உனது வாசனை பொருந்திய திருவடிகளை வணங்குவான், எனது கைகள் தாமே தலைமேற் கூப்பப் பெற்றுக், கண்களினின்றும், ஆனந்த வெள்ளம் நிரம்ப மனமானது ஆர்வத்தால் வெப்பமுடையதாக நிலையற்றவற்றின் பற்றுத்தானே நீங்கியொழிய, உனக்கு வணக்கம், வெற்றி வெற்றி வணக்கம். என்று இயம்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தையே நழுவவிடாது மேற்கொண்டு நிற்பேன். அடியேனைக் கண் பார்த்து ஏற்றுக் கொள்க.

இவ்வாறு ஒரு பக்தனின்- பக்திமதியின் மெய்ப்பாடுகள் இருந்தவாறை இத்திருவாசகம் உணர்த்துவதை நாம் உணர்வோமாக.

திருவாசகத் தெய்வப் பனுவலிலே ஆழ்ந்து தன்னிழப்புப் பெற்ற போப் அய்யரையே கொள்ளை கொண்டாடல் இனிவருமாறு.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம் தாழ் உறுபுனலிற் கீழ் மேலாகப்
பதைத்து உருகும் அவர் நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே
திருச்சதகம் 21

இறைவனை ஆராதனை செய்ய உள்ளங்கால் நின்று உச்சிமட்டும் மனம் (உள்ளம்- நெஞ்சம்) கேட்ட சுவாமிகள் கண்ணீர் வார. இரு கண்கள் போதா- உடம்பெல்லாம் கண் கேட்கிறார். அழுது அழுது இப்பிறவியை முடிக்க. போதாதென்று தன் மனத்தைக் கல் என்றார். கண்களை மரக்கண் என்றார். இரக்கமில்லாத நிலையைச் சொல்ல வழியேது. அருணகிரியார் திருச்செந்தூரனைக் காண நாலாயிரம் கண் வேண்டினார். ஆக நம்மைக் கடைத்தேற்ற இந்த ஒரு வாசகமே போதுமன்றோ.

எனவேதான் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் "திருவாசகமிங் கொருகால் ஓதின் கருங்கல் மனமும் கசிந்துருகக் கண்ணீர் தொடு மணற்கேணியின் சுரந்து நீர்பாயும்" என (அனுபவித்துப்) பாடினார்கள்.

மெய்யுருகிப் பாடியவர்களால் ஒருவர் தவராஜசிங்கம் தாயுமான சுவாமிகள். அவர் தந்த அனுபவப் பிழிவே இனிவரும் பாடல்.

உடல் குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்க
ளூற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்(து) உண் நடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரிப்பி ஆர்த் தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானே! அவ்வானிலின்ப
மழையே! மழைத் தாரை வெள்ளமே! நீடுழி
வாழி! என வாழ்த்தி யேத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பரன்புக்கு எளியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னெஞ்ச னுக்கு எளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

தாயுமானவர் பாடல். கருணாகரக் கடவுள் 9

உடல் குழைய- சரீரம் வாடவும், என்பு எலாம் நெக்கு உருக- எலும்புகளெல்லாம் நெகிழ்ந்து உருகவும், விழிநீர்கள் ஊற்று என வெதும்பி ஊற்ற- கண்ணீர் மணற்கேணி எனலாம்படி கொதித்து ஒழுகா நிற்கவும், ஊசிகாந்தத்தினைக் கண்டு, அதனிடத்துச் சென்று பொருந்துதல் போல, ஓர் உறவும் உன்னி உன்னி- ஒப்பற்ற ஆத்மநாயகனாகிய உன்னையும் நினைந்து நினைந்து, நெஞ்சம் படபடவெனப் பதைத்து- மனம் படபட என்று துடித்து, உள் நடுக்குற- உள்ளே நடுக்கமடையவும், பாடி ஆடிக் குதித்து- பாடி ஆடித் துள்ளி, பனி மதிமுகத்திலே நிலவு அனைய- குளிர்ச்சியான சந்திரன் இடத்தில் உண்டாகும்- சந்திரிகையை (நிலவை) ஒத்த, புன்னகை பரப்பி புன்சிரிப்பை விதிர்த்து, ஆர்த்து ஆர்த்து எழுந்து,- பலமுறை ஆரவாரித் தெழுந்து, மடல் அவிழும் மலர் அனையகை- இதழ்கள் விரியாத தாமரை மொட்டை ஒத்த கைகளை, விரித்துக் கூப்பி- விரித்துங் குவித்தும், வானே- விண்ணே (சிதாகாசமே) அவ்வானில் இன்ப மழையே- அந்த ஆகாயத்தினின்றும் பொழிகின்ற ஆனந்தமழையே! மழைத்தாரை வெள்ளமே- அந்த மழைத் தாரைகளால் உண்டாகும் பெருக்கே, நீடூழி வாழி என வாழ்த்தி ஏத்தும்- நீடூழிகாலம் வாழ்க என்று திருப்பல்லாண்டு பாடித் துதிக்கின்ற, கடல்மடை திறந்தனைய- கடலானது கரையை மீறினாற்போன்ற, அன்பர் அன்புக்கு எளியையோ- அன்பரது அன்புக்கு எளியையாய் இருப்பையேன் கருத அரிய- நினைத்தற்கரிய, சிற்சபையில்- சிதம்பரத்தில், ஆனந்த நர்த்தமிடு- ஆனந்தக் கூத்தாடுகின்ற, கருணாகரக் கடவுளே- கருணைக்குப் பிறப்பிடமாய் இருக்கின்ற கடவுளே!

உரை: பூவை- கலியாண சுந்தரமுதலியார்.

எனவே நாம் எம்பெருமானை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரால் உடம்பு நனைந்து அழுவோம். தொழுவோமாக.

## சாமி ஐயா ஆசி தருவார்

சீரிய பணிகள் செய்து
சிந்தையில் சீர்மை மேவ
பாரினில் பண்பு ஓங்க
பற்பல கருமம் செய்வீர்
நேரிலே கந்தன் வந்து
நெகிழ்ந் தெமக்(கு) குதவுகின்றார்
வாரியே வழங்கு வார் மயில்
வாகனர் ஆசி தானே

*-தி. பாலசுப்பிரமணியம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

388. பிரதோஷ விரதமாவது யாது?

சுக்கிலபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்தும் வருகின்ற திரியோதசி திதியிலே, சூரியாஸ்தமனத்துக்கு முன் மூன்றே நாழிகையுமாய் உள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே, சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இவ்விரதம் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்கு மாசங்களுள் ஒன்றிலே, சனிப்பிரதோஷம் முதலாகத் தொடங்கி அநுட்டித்தல் வேண்டும். பகலிலே போசனம் செய்யாது, சூரியன் அஸ்தமிக்க நான்கு நாழிகை உண்டு என்னும் அளவில் ஸ்நானஞ் செய்து, சிவபூசை பண்ணித் திருக்கோயிலில் சென்று சிவதரிசனம் செய்துகொண்டு, பிரதோஷ காலம் கழித்த பின் சிவனடியாரோடு போசனம் பண்ணல் வேண்டும். பிரதோஷ காலத்திலே போசனம், சயனம், ஸ்நானம், விஸ்னு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திர செபம், நூல் படித்தல் என்னும் இவ்வெட்டும் செய்யலாகாது. பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவதரிசனம் செய்துகொண்டுவரின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். அஸ்தமனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையே சிவதரிசனத்துக்கு உத்தம காலம்.

(அவமிருத்து- அகாலமரணம்)

## *தேவி விரதம்*

389. தேவி விரதம் எத்தனை?

சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்திர விரதம், நவராத்திரி விரதம் என மூன்றாம்.

390. சுக்கிரவார விரதமாவது யாது?

சித்திரை மாசத்துச் சுக்கிலபக்ஷத்து முதல் சுக்கிரவாரம் தொடங்கிச் சுக்கிரவாரந்தோறும் பார்வதி தேவியரைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்தல் வேண்டும்.

391. ஐப்பசி உத்திர விரதமாவது யாது?

ஐப்பசி மாதத்து உத்தர நக்ஷத்திரத்திலே பார்வதி தேவியரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்தல் வேண்டும்.

392. நவராத்திரி விரதமாவது யாது?

புரட்டாசி மாசத்துச் சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் நவமி ஈறாகிய ஒன்பது நாளும் பார்வதி தேவியரைக் கும்பத்திலே பூசை செய்து அநுட்டிக்கும் விரதமாம். இதிலே முதலெட்டு நாளும் பணிகாரம், பழம் முதலியவை உட்கொண்டு, மகாநவமியில் உபவாசம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விநாயக விரதம்

393. விநாயக விரதம் எத்தனை?

சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என மூன்றாம்.

394. சுக்கிரவார விரதமாவது யாது?

வைகாசி மாசத்துச் சுக்கிலபக்ஷத்து முதற் சுக்கிரவாரம் தொடங்கிச் சுக்கிரவாரம் தோறும் விநாயகக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதிலே பழம் முதலியன இரவில் உட்கொள்ளல் வேண்டும்.

395. விநாயக சதுர்த்தி விரதமாவது யாது?

ஆவணி மாசத்துச் சுக்கிலபக்ஷ சதுர்த்தியிலே விநாயகக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்து, இரவிலே பழமேனும் பணிகாரமேனும் உட்கொள்ளல் வேண்டும். இத்தினத்திலே சந்திரனைப் பார்க்கலாகாது.

396. விநாயக சட்டி விரதமாவது யாது?

கார்த்திகை மாசத்துக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதல் மார்கழி மாசத்துச் சுக்கிலபக்ஷ சட்டி ஈறாகிய இருபத்தொரு நாளும் விநாயகக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொண்டு, முதலிருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனம் செய்து, இறுதி நாளாகிய சட்டியில் உபவாசம் செய்தல் வேண்டும்.

### சுப்பிரமணிய விரதம்

397. சுப்பிரமணிய விரதம் எத்தனை?

சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் என மூன்றாம்.

398. சுக்கிரவார விரதமாவது யாது?

ஐப்பசி மாசத்து முதல் சுக்கிரவாரம் தொடங்கிச் சுக்கிர வாரந்தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் உத்தமம்; அது கூடாதவர் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளக் கடவர். அதுவுங் கூடாதவர் ஒரு பொழுது பகலிலே போசனம் பண்ணக் கடவர். இவ்விரதம் மூன்று வருஷகாலம் அநுட்டித்தல் வேண்டும்.

399. கார்த்திகை விரதமாவது யாது?

கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திரம் முதலாகத் தொடங்கிக் கார்த்திகை நட்சத்திரந்தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் உத்தமம்; அது கூடாதவர் பழம் முதலியன இரவில் உட்கொள்ளக் கடவர். இவ்விரதம் பன்னிரண்டு வருஷகாலம் அநுட்டித்தல் வேண்டும்.

400. கந்த சட்டி விரதமாவது யாது?

ஐப்பசி மாசத்துச் சுக்கிலபக்ஷப் பிரதமை முதற் சட்டி ஈறாகிய ஆறு நாளும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஆறு நாளும் உபவாசம் செய்வது உத்தமம். அது கூடாதவர் முதல் ஐந்து நாளும் ஒவ்வொரு பொழுது உண்டு, சட்டியில் உபவாசம் செய்யக் கடவர். இவ்விரதம் ஆறு வருஷகாலம் அநுட்டித்தல் வேண்டும். மாசந்தோறும் சுக்கிலபக்ஷ சட்டியிலே சுப்பிரமணியக் கடவுளை வழிபட்டு மா, பழம், பால், பானகம், மிளகு என்பவைகளுள் இயன்றது ஒன்று உட்கொண்டு வருவது உத்தமம்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனின் சந்தேகம்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

அன்று ஐப்பசி வெள்ளி. குமாரசாமி முருக பக்தர். வெள்ளிதோறும் சன்னிதிக்கு வரத்தவறுவதில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த பேரன் கிருபாவையும் கூட்டிக்கொண்டு செல்லச்சன்னிதிக்கு வருகிறார். கால்களைக் கழுவியபின் உள்ளே சென்று பிள்ளையாரை வழிபட்டபின் சுற்றிவந்து சன்னிதியான் சந்நிதியை அடைந்தனர். பூசைக்கான ஆயத்த மணி ஒலித்தது. பூசகர் வருகிறார்; திரை விலகுகிறது; பறை, கண்டாமணி, கொத்துமணி, சேமக்கல ஒலி வானை முட்டுகிறது. பக்தர்களின் அரோஹரா ஒலி வேறு. வாயை வெள்ளைத் துணியால் மூடிக்கட்டியவாறு பூசை நடக்கிறது. முடிவில் கர்ப்பூர தீபத்தை உயரத்தூக்கி பக்தர்களுக்கு காட்டுகிறார் பூசகர்.

அரோஹரா அரோஹரா கந்தனுக்கு அரோஹரா; வேலனுக்கு, முருகனுக்கு, ஆற்றங் கரையானுக்கு அரோஹரா அரோஹரா ஒருவர் தொடக்க ஏனையோர் சொல்லி முடிக்கின்றனர். பக்தி மேலீட்டால் சிலர் உருவந்து ஆடுகிறார்கள்.

வெளிவாயில் முற்றத்தில் காவடியாட்டம், பறைமேளம், உடுக்கு, சேமக்கலம், தவில் ஓசைக்கு ஏற்ப ஆட்டம், "காவடியாம் காவடி கந்தனுக்குக் காவடி அரோஹரா; அரோஹரா! கிருபா இந்நாள்வரை காணாத காட்சிகள். மனதில் பல கேள்விகள். விபூதி பிரசாதம், தீர்த்தம், சந்தனம், பூக்கள் வாங்கியதும் தாத்தாவும் கிருபாவும் ஓரிடத்தில் இருக்கிறார்கள். கிருபாவும் தாத்தாவும் உரையாடுகிறார்கள்.

கிருபா:- தாத்தா! எங்கள் பக்கத்து அம்மன் கோவிலில் ஐயர் வாய்க்குள் ஏதோ சொல்லிக்கொண்டு பூசை செய்கிறார். ஆனால் இங்கே வாயைக் கட்டிப் பூசை செய்கிறார். அது ஏன்?

தாத்தா:- அம்மன் கோயில் ஐயருக்குப் பூசை மந்திரங்கள் தெரியும். ஆனால் கதிர் காமத்தில் பூசை செய்பவர்கள் வேடர் சந்ததியினர். அவர்கட்கு மந்திரம் தெரியாது. அதனால் அவர்கள் வாயை சீலையால் கட்டி மௌனபூசை செய் கிறார்கள். இலங்கையில் கதிர்காமம், மண்டூர், செல்லச்சன்னிதி மூன்று கோவில்களிலுமே வாய்கட்டிப் பூசை செய்யும் வழக்கம் இன்றுவரை நடை பெறுகிறது. இங்கேயும் பிராமணர் அல்லாதவர்களே மந்திரங்கள் பூசைமுறை தெரியாமையால் வாயைக் கட்டி மௌன பூசை செய்கிறார்கள்.

கிருபா:- தாத்தா! முருகனுக்கு அரோஹரா! கந்தனுக்கு அரோஹரா எனச் சொல் கிறார்களே அரோஹரா என்றால் என்ன?

தாத்தா:- ஹர என்றால் பாவங்களை நீக்குவது என்பது அர்த்தம். ஹர ஓ ஹர என்று சொல்வதுதான் அரோஹரா என வந்தது. அதாவது "முருகா! நான் செய்த பாவங்களைப் போக்குவாய்" என முருகனை மனமுருகிக் கேட்பதே.

கிருபா:- அரோஹரா சொல்லும்போது ஏன் இரு கைகளையும் மேலே தூக்கிக் கும்பிடுறாங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா:- நாங்கள் கோயிலுக்கு வரும்போது வாயில் முகப்பில் உயரமாக கையில் வேலுடன் ஒருவரைக் கண்டாயல்லவா? அவன்தான் இக்கோயிலில் நாம் வழிபடும் கடவுள். பெயர் முருகன். அது படம். ஆனால் உண்மையான முருகனை நம் கண்ணால் காணமுடியாது. அவன் உயர்ந்தவன் என்றெண்ணி இரு கைகளையும் மேலே தூக்கி வணங்குகிறார்கள். இன்னுமொரு காரணம் உண்டு. சொல்கிறேன். கர்ப்பக்கிரகம் அதுதான் மூலஸ்தானம். முருகன் வேல் வடிவமாகத் தெரிகிறான் கண்டாயல்லவா? அங்கே இரு விளக்குகள் எரிகின்றன. ஐயர் தீபம் காட்டும்போது விளக்கொளியில் ஐயர் காட்டும் தீபமும் சேர சுவாமியைக் காணமுடியாது. அதனாற்றான் கண்களுக்குப் பக்கமாக இரு கைகளையும் குவிக்க ஐயரும் தீபத்தை உயரத் தூக்கிக் காட்டுவார். இப்போ சுவாமியைக் காணலாம். நாமும் இரு கைகளையும் உயர்த்தி உள்ளங்கை சேர வணங்குவோம். இதை திரிவிதாங்க நமஸ்காரம் என்பர்.

கிருபா:- தாத்தா! ஆண்கள் நிலத்திலே படுத்து கைகளை நீட்டுறாங்க, பெண்கள் குனிந்திருந்து தலையை நிலத்தில் முட்டுறாங்க அது ஏன்?

தாத்தா:- ஆண்கள் எட்டு உறுப்புகள் நிலத்தில்பட வீழ்ந்து வணங்குவார்கள். அது அட்டாங்க நமஸ்காரம்.

பெண்கள் ஐந்து உறுப்புகள் நிலத்தில்பட முழந்தாளிட்டு தலை நிலத்தில்பட வணங்குவார்கள் இது பஞ்சாங்க நமஸ்காரம்.

முன்பு சொன்னேனே திரிவிதாங்க நமஸ்காரமும் அத்துடன் இரு கைகளையும் நெஞ்சுக்கு நேரே கூப்பி வைத்து வழிபடுவது ஏகாங்க நமஸ்காரம். இவையிரண்டும் ஆண்கள், பெண்களுக்கும் உரியவை.

கிருபா:- ஏன் தாத்தா! சுவாமி முன்பாக இரு கைகளையும் நீட்டி "தா" என்று கேட்பது போலிருக்கே.

தாத்தா:- கோவிலுக்கு வாறவங்களெல்லாம் தமக்குரிய கவலைகள் துன்பங்களை கடவுளிடம் முறையிட்டு மன அமைதியடையவும், தேவைகளையும் கூறி கடவுளின் அருளைப் பெற்றுக்கொள்ளவுமேயாகும்.

சிலர் தீராத நோயுடனும், சிலர் பகைவர், கடன்தொல்லை, வறுமை யுடனும் வருவார்கள். சிலர் தமக்குப் பிள்ளையில்லை, பிள்ளைகட்கு கலியாணம் ஆகவில்லை; உத்தியோகம் கிடைக்கவில்லையே என்ற கவலை யுடன் வருவார்கள். முருகன் அவர்கள் வழிபாட்டிற்கேற்ப அருள்புரிவார் என்ற நம்பிக்கையினால்த்தான் பக்தியோடு கண்ணீர்விட்டு, முருகா! வரம் தா என்று கைகளை நீட்டி வாங்குவது போலவும் கைகளைக் கூப்பி வணங்கும்போது அவர் மனதில் நிம்மதி தோன்றும்.

கிருபா:- தாத்தா வாசலில் உயரமாக பெரியமணியும், உள்ளே நீளமாக சிறிய மணிகள் தொங்குகின்றனவே ஏன் அப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா:- அது ஆயத்தமணி. அது கோயில் பூசை தொடங்குவதற்காக அடிப்பார்கள். அது பல மைல் தூரத்துக்கப்பாலும் கேட்கும். ஊரவர்கள் அயலவர்கள் விரைந்து வருவார்கள். வரமுடியாதவர்கள் முருகனுக்குப் பூசை நடக்கிறது என மனதில் நினைத்து வணங்குவார்கள். உள்ளே தொங்கும் கொத்துமணி, கண்டாமணி, சேமக்கலம், பறை மேளம் இவற்றின் ஒலியுடன் ஐயர் பூசை செய்வார். மக்களும் பக்திமயமாகி கர்ப்பூர ஒளி கண்டு அதில் முருகன் இருப்பதாக அரோஹரா சொல்லிக் கும்பிடுவர்.

கிருபா:- தாத்தா! அங்கே தோகை விரித்தபடி மயில் செய்து வைத்திருக்கே! அது ஏன்?

தாத்தா:- முருகனும் தேவயானிக்கும் திருமணம் நடந்தபோது இந்திரன் தன் மகளான தேவயானிக்கு கொடுத்தது யானை. இந்திரனுடைய ஒரு வடிவம் மயில். முருகன் சூரனோடு போர்புரியச் சென்றபோது அவருக்கு உதவ நினைந்து மயிலாக மாறி முருகனைத் தாங்கிக் கொண்டான். போரில் சூரனுடைய உடலை முருகன் கைவேல் இரண்டாகப் பிளந்தது. மேல் பகுதி சேவலாக மாற அதைக் கொடியிலும், கீழ்ப்பகுதி மயிலாக மாற அதைத் தன் வாகனமாக்கிக் கொண்டார். முருகனுக்கு மயில்வாகனன், சேவற்கொடியோன் என்ற பெயர்களுமுண்டு. முருகனுக்கு இன்னொரு வாகனம் ஆட்டுக்கடா. எப்படி வந்ததென்று சொல்கிறேன் கேள். நாரதர் ஒரு யாகம் செய்ய வேள்வித் தீயிலிருந்து கடா ஆடு வந்து மக்களை அழிக்க முருகன் அதன் மேலேறி அடக்கி வாகனமாக்கினார். முருகனுக்கு இந்திரன் பரிசாகத் தந்த யானை, சூரனுடைய உடலைக் கிழித்தபோது தோன்றிய மயில், ஆட்டுக்கடா மூன்றுமிருந்தாலும் அவர் மயில்மீதேறியே உலகைச் சுற்றி வருவார்.

கிருபா:- அரோஹரா சொல்லும்போது ஏன் இரண்டு கைகளையும் கன்னத்தில் போட்டு அரோஹரா சொல்கிறார்கள்?

தாத்தா:- முருகா! நான் தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களை மன்னித்துக்கொள் என்று கேட்பதுதான் அர்த்தம்.

கிருபா:- தாத்தா! அபிஷேகம் பற்றிச் சொல்லவில்லையே!

தாத்தா:- அதுபற்றி இன்னோர் சமயம் கூறுவேன். கோயிலில் நீ அறியவேண்டிய பல விஷயங்கள் உண்டு. இப்போ நேரமாய் விட்டது. உனக்குப் பசிக்க வில்லையா? வா சந்நிதியான் ஆச்சிரமத்துக்குப் போவோம்.

கிருபா:- ஏன் தாத்தா அங்கு போகவேண்டும்? என்ன விஷேடம்?

தாத்தா:- இதுவரை முருகனிடம் நம் கவலைகள், துன்பங்கள், நோய் பிணிகளை நீக்கும்படி கேட்டு மனநிறைவோடு போகும் பக்தர்கள் அடியார்கள் பசி தாகத்தோடு போகாது சாப்பிட்டுப் போகவேண்டும் என்று எண்ணி மோகன தாஸ் சுவாமிகள் யாவர்க்கும் சாப்பாடு போடுகிறார். அதோ அவர்தான் மோகன் சுவாமிகள். இருவரும் ஆச்சிரம வாயிலுக்கு வந்து விட்டார்கள். சுவாமிகட்கு வணக்கம். இருவரும் கைகூப்பி வணங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன் சுவாமிகள்:-யார் அங்கே? இதோ இந்த இருவரையும் கூட்டிப் போங்கோ. பசியோடு இருக்கிறார்கள்.

இருவரும் பந்தியிலே இருக்கிறார்கள். ஒருவர் வாழையிலை போடுகிறார்; மற்றொருவர் கறிவகைகள்; இன்னொருவர் குவளையில் தண்ணீர் வைக்கிறார், சுவாமிகள் வேலுக்குப் பூசை செய்து தீபம் காட்டுகிறார். 'அரோஹரா' சொல்லி யாவரும் சாப்பிடுகிறார்கள். "தா; இன்னும் கொஞ்சம்" என்று எவரும் கேட்காதபடி, சொதி, குழம்பு, ரஸம் எனத் தேவை அறிந்து பரிமாறுகிறார்கள். வயிறாகிய சிவம் வாழ்த்த; நாம் சுவாமிகளை வாழ்த்தி வணங்கி ஆச்சிரம அன்னதான நிதிக்கு பணம் போட்டுவிட்டு வருகிறோம்.

கிருபா:- தாத்தா! இவ்வளவு பேருக்கும் உணவு போட எவ்வளவு பணம் வேண்டும். சுவாமியாருக்கு இவ்வளவு சம்பளமா?

தாத்தா:- இல்லை. எங்கள் நாட்டில் உள்ள பணக்காரர்கள், கடை முதலாளிகள், வைத்தியர், ஆசிரியர் இன்னும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் பணமாக, அரிசி மூடையாக தர வெளிநாட்டிலுள்ளவர்களும் தாராளமாகத் தருகிறார் கள். இங்கு அன்னதானப் பணி மட்டுமல்ல, எவரும் வந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக வைத்தியசாலை, முதியோர் பராமரிப்பு ஏழை மாணவர்களுக்கு படிப்புக்கு உதவி, கண் பார்வையற்றவர்களுக்கு கண்ணாடி, வாழ்வாதாரம் கேட்பவர்க்கு துவிச்சக்கரவண்டி, தையல் இயந் திரம், மாணவர்களை ஊக்குவிக்க சமய அறிவுப் போட்டி, கலைகள் பண்பாடு வளர்வதற்காக ஒரு சபை அமைத்து சமய அறிவாளிகளை அழைத்துச் சொற்பொழிவு, அச்சகம் ஒன்று அமைத்து, பல அறிவாளிகள் தரும் கட்டுரைகள், ஆக்கங்கள், ஆலயத்தில் நடைபெறும் நிகழ்வுகளைத் தொகுத்து "ஞானச்சுடர்" என்ற புத்தக வெளியீடு இப்படி இன்னும் பல அறப்பணிகள் நடக்கின்றன. யாவும் முருகன் அருளால் மோகன் சுவாமிகள் செய்து முடிக்கிறார். சுவாமிகளின் எண்ணக் கருத்தை நிறைவேற்ற பல தொண்டர்கள், அடியார்கள், அபிமானிகள் இருக்கிறார்கள்.

கிருபா:- இத்தகைய சிறப்பு வாய்ந்த கோயில், ஆச்சிரமப் பணிகள் பற்றி அப்பா, அம்மா, மற்றும் என்னுடன் படிக்கும் மாணவர்கட்கும் சொல்லி, நீங்களும் ஆலய, ஆச்சிரமப் பணிகட்கு உதவுங்கள். நீங்கள் செய்யும் சிறு துளி தர்மம் மறுபிறவியில் நமக்கான வங்கியில் கணக்கு வைக்கப்படும்.

முருகன் அருள்பெற்ற மோகன் சுவாமிகள் நீடூழி வாழ்க! சுவாமிகளின், அன்னதானம் முதலாகவுள்ள அறப்பணிகள் என்றென்றும் தொடர்க.

தாத்தா:- கிருபா பஸ் வருகிற நேரமாய்விட்டது. வா வீட்டுக்குப் போவோம். வழமை போல் வெள்ளிக்கிழமையில் சன்னிதி முருகனை வழிபட்ட மனநிறைவுடன் குமார சாமியும், சன்னிதியானின் சந்நிதியில் பல சந்தேகங்களைக் கேட்டறிந்த மனத்திருப்தியுடன் கிருபாவும் வீடு செல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| க. ஸ்ரீசந்திரன் ஆசிரியர் | வல்வெட்டித்துறை | 500. 00 |
| ஐ. சீவரட்ணம் | மானிப்பாய் | 1000. 00 |
| இ. சிவராசா | கரவெட்டி | 10000. 00 |
| M. சந்திரேஸ்வரன் | அரியாலை (ஜேர்மன்) | 2000. 00 |
| அ. கணபதிப்பிள்ளை | லண்டன் | 5000. 00 |
| செ. ஐடா | புலோலி | 5000. 00 |
| திரு மகேஸ்வரன் | அச்சுவேலி தெற்கு | 4000. 00 |
| வி. இராஜேஸ்வரி | நல்லூர் 25k அரிசி, 2k பருப்பு | 2000. 00 |
| சிவபாக்கியம் சுப்பிரமணியம் நினைவாக | | |
| திருமதி சத்தியா சிவானந்தன் | காங்கேசந்துறை | 5000. 00 |
| திருமதி அ. குணநாயகம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| யோகவரதன் மகாலிங்கசிவம் | கொழும்பு (உடுப்பிட்டி) | 5000. 00 |
| திரு துரைச்சாமி ஐயர் | மல்லாகம் | 2000. 00 |
| ஜெ. கபிலன் | சித்தங்கேணி (பிரான்ஸ்) | 5000. 00 |
| சி. இராஜேஸ்வரி | பத்தமேனி | 1000. 00 |
| செ. விஷ்ணுஜா | நெல்லியடி | 5000. 00 |
| Dr S. கணநாதன் | குப்பிளான் | 2000. 00 |
| திரு முகுந்தன் | சங்கானை | 1000. 00 |
| பொ. தவராசா | வேலணை | 1000. 00 |
| வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | ஆசிரியர், மாணவர்கள் வவுனியா | 3000. 00 |
| ந. இராமரூபன் | நீர்வேலி | 1000. 00 |
| N. சண்முகநாதன் | இணுவில் கிழக்கு | 5000. 00 |
| க. கனகசபை | ஆவரங்கால் | 10000. 00 |
| ச. தர்மலிங்கம்மூலம் S. பசுபதிராசா நினைவாக | மாதர் சங்கவீதி சித்தங்கேணி | 10000. 00 |
| திருமதி ந. குமார் | கைதடி | 10000. 00 |
| யா/ இந்து ஆரம்ப பாடசாலை | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| இ. கங்கைக்கரசு | மயிலிட்டி | 10000. 00 |
| P. அப்புத்துரை | வசாவிளான் | 1000. 00 |
| கலாபன் மகிபன் | இமையாணன் | 1000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் மில் ஒழுங்கை | மல்லாகம் | 10000. 00 |
| ஸ்ரீ. அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாஸ்கரன் யாழினி | அம்பன் | 2000. 00 |
| ஜெ. ரக்ஷன் | கந்தரோடை (U.K) | 1000. 00 |
| த. கபிஸ்ணா | ஆவரங்கால் | 2000. 00 |
| திருமதி சோ. குமாரசாமி | கனடா | 5000. 00 |
| சி. சண்முகலிங்கம் குடும்பம் | இணுவில் மேற்கு | 12000. 00 |
| க. குமாரகுலசிங்கம் | கோண்டாவில் வடக்கு | 1மூடை அரிசி |
| சி. சகுந்தலாதேவி | மல்லாகம் | 500. 00 |
| S. மங்கையற்கரசி | நாவற்குழி | 2000. 00 |
| B.R. ரஞ்சன் J.P | வண்ணார்பண்ணை | 500. 00 |
| க. ஞானச்சந்திரன் | கொக்குவில் | 1500. 00 |
| ஓர் அன்பர் | மானிப்பாய் | 2500. 00 |
| பா. லோகநாதன் (இலங்கை வங்கி) | பருத்தித்துறை | 5000. 00 |
| இ. மகேந்திரம் வத்தனை | பருத்தித்துறை | 4000. 00 |
| திரு ஐங்கரன் காந்தியூர் | தம்பசிட்டி | 2000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| அ. மகாலிங்கம் | வத்தளை | 4000. 00 |
| பொன்னையா தணிகாசலம் | பத்தமேனி | 7000. 00 |
| திரு பகீரதன் | பத்தமேனி | 2000. 00 |
| வசந்தராணி விவேகானந்தன் | ஈவினை | 500. 00 |
| S. ஞானசம்பந்தன் | கரவெட்டி | 5000. 00 |
| இ. சந்திரசேகரன் | ஏழாலை வடக்கு | 500. 00 |
| திரு செல்வமாணிக்கம் | நெல்லியடி | 4000. 00 |
| ச. செல்வராசா | உசன் | 1000. 00 |
| ந. ஜெயரட்ணராஜா | சுழிபுரம் | 10k அரிசி |
| ச. சபேசன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 300. 00 |
| K.K. சிதம்பரநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் மகாத்மா வீதி | கரவெட்டி | 1000. 00 |
| க. ஜெயலீலா | வல்வெட்டித்துறை (கனடா) | 5000. 00 |
| ஐ. மகாலிங்கம் | உடுவில் | 1000. 00 |
| ரா. யோகராணி | அச்சுவேலி | 10000. 00 |
| குமாரசாமிமூலம் ஞா. அஸ்வின் | கரவெட்டி மத்தி | 3000. 00 |
| சி. செந்தில்குமரன் (U.K) | கோயிற்கடவை | 10000. 00 |
| மாதவன் அனுஷியா | லண்டன் (கோயிற்கடவை) | 31300. 00 |
| K.v. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 2000. 00 |
| I. இந்துசேகரம் குடும்பம் | அவுஸ்திரேலியா | 80000. 00 |
| J. சந்திரப்பிரகாஷ் ஆசிரியர் | பருத்தித்துறை | 8000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஔவையாரின் முதுமொழி. அதுமட்டுமன்றி அது தெய்வீக மொழி. மக்களை வளமாக வாழ வழி சமைத்த மொழி. இப்பழமொழியின் முன் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று மொழிந்திருப்பது பெற்றோரின் முதன்மையை எடுத்து விளங்க வைக்கின்றது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனக் கண்ட குழந்தை "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று உணர்ந்து கொள்ளும். எனவே மானுட வாழ்க்கைக்கு ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது.

மானுட வாழ்க்கை அரிதினும் அரிது. ஆறறிவு மானுடன் விஞ்ஞானத்தின் உச்சப்படியில் ஏறி நிற்கின்றான். அண்டங்களை அளந்த மானுடன் உடம்பிலிருந்து பிரிந்த உயிரை மீண்டும் உடம்பில் சேர்க்க முயல்கின்றான். அது கையாலாகா விடயம் என்பதை ஆலய வழிபாட்டின்மூலம் உணர்ந்து கொள்கின்றான். இறைவன் மனம் வாக்குக்கு எட்டாத பொருள். விஞ்ஞானத்தின் மூலம் அறிய முடியாத பொருள். இறையருளால் மாத்திரம் உணரக்கூடிய பொருள். இறைவனை அப்பர் கைலாய திருப்பதிகத்தில்

"ஆறங்கம் நால்வேதமானாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றியுலகை விடாதாய் போற்றி
அடியும் முடியுமிகலி போற்றி
யங்கொன்றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
உண்ணாதுறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி"

என்று இறைவன் புகழைப் பாடுகின்றார். இறைவன் புகழை உணர்ந்தவர்கள் கோவிலுக்குச் சென்று பக்தியுடன் வழிபடுவர் என்பது தெள்ளத் தெளிவான உண்மையாகும். எனவே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையார் கூறியது மிகவும் உவப்புடையதாகும்.

இறைவன் ஆலயங்களில் அடியார்களுக்கு அருள் புரிந்துகொண்டிருக்கின்றான். சிறப்பாக தொண்டைமானாறு செல்லச்சன்னிதியில் இடர்களைந்து எந்நிதியும் வழங்கிக் கொண்டிருக்கின்றான் என்பது கண்கூடு. ஆற்றங்கரையானின் அருளை நாடிவரும் அடியார் கூட்டம் அளப்பரியது. மனக்குறைகளை நீக்குவது மாத்திரமன்றி பசிப்பிணியை நீக்க சந்நிதியான் ஆச்சிரமத்தை முகப்பு வீதியில் அமைத்துள்ளான். அதைப் பராமரிக்க தகுந்த ஆசானையும் நியமித்துள்ளார். அவர் இல்லையெனாது இன்முகத்துடன் அடியார்களுக்கு காமதேனுவைப்போல் அன்னம் பாலித்துக் கொண்டிருக்கின்றார். சந்நிதியான் ஆச்சிரமம் சிறந்த கட்டுப்பாட்டுடன் நிர்வகித்து வருவது முருகன் கருணையன்றோ. உலகுக்கு உதாரணமாக விளங்கும் இவ்வாலயம் ஔவையார் கூறியதுபோல் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற முதுமொழியை விளக்கி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தின் உயிர்நாடியாக விளங்குவது ஆலயம். மனம் ஒடுங்கி இறை வனை வழிபடுவதினால் ஆலயம் என்னும் நாமம் உண்டாயிற்று. காலத்துக்கேற்ப சைவ சமய ஆலயங்கள் பெருகி வளர்ச்சியடைந்து வருவதை நாம் காண்கின்றோம். நவீன விஞ் ஞான உலகில் வாழ்கின்ற மனிதன் விஞ் ஞானத்தை முழுமையாக நம்பி மெய்ஞ் ஞானத்தை மறக்கும் நிலையில் உள்ளான். தொலைக்காட்சிகளின் செய்திகளைக் கேட்டு உண்மையை உணராது அற்ப சந்தோசத்திற் காக இறைவனை மறக்கும் நிலையில் மனி தன் வாழ்கின்றான். இதனால் நாட்டில் ஒழுக் கம் குறைந்துகொண்டு போகின்றது. நாட்டில் பஞ்சமா பாதகங்கள் வளர்ந்துகொண்டு செல் வதை நாம் தினமும் காண்கின்றோம். புன்னெறி யில் செல்கின்ற பிள்ளைகளை பெற்றோரும், ஆசிரியர்களும் நன்னெறிப் பாதையைக் காட்ட வழிசெய்ய வேண்டும். தீய செயல்களால் ஏற்படும் விளைவுகளை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இடித்துரைக்க வேண்டும். பெற் றோர்கள் தமது பிள்ளைகளுக்கு காலையும், மாலையும் இறைவனை வழிபட வழிசமைக்க வேண்டும். பிள்ளைகள் உண்ணும்போது சிறப்பாக தாய்மார் நல்வழிகளைக் கூறி, உணவு ஊட்ட வேண்டும். பிள்ளைகள் ஆல யம் சென்று வழிபட இறையருளால் நற்பழக் கங்கள் ஏற்படும். ஔவை கூறிய முதுமொழி களையும் கற்கவேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட மாணவன் வாழ்வு சிறப்படையும் என்பது திண்ணம். எனவே ஔவையின் முதுமொழி எக்காலத்துக்கும் உரியதாய், மக்களை வளப்படுத்தும் சாதனமாய் விளங்கும் என்பது உண்மையில் உண்மை.

## பெண்மையை போற்றிடுவோம்

ஆற்றலின் வடிவமான பெண்ணை
போற்றிட ஓர்நாள் வகுத்து
வந்ததா மகளிர் தினம்
இல்லை
மகளிர் தினம் தினம்
படுதுயர் போக்கிடின்
எதற்கிங்கு
மகளிர் தினம்
எம் சமயம் காத்த
பெண்களின் சிறப்பதை
மறந்திடலாமோ
சக்தியின்றேல்
சிவமில்லை
என்பது தானே
எம் சமயம்
வீட்டிலும் எம்
சக்தியான பெண்மையை
போற்றிடுவோம் - அவர்
ஆற்றலை மதித்திடுவோம்
வன்முறை தவிர்த்திடுவோம்
வரன்முறை உணர்ந்திடுவோம்.

-வேல்நந்தன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



– திரு இரா. செல்வவடிவேல்

## கருமங்களும் தீட்டும்

மனிதர்கள் செய்யும் காரியங்கள் ஒவ்வொரு யுகத்திலும் வேறுபடுகிறது. யுகங்கள் நான்கு. இவற்றில் கிருதயுகத்தில் தவம் செய்தல், திரோதாயுகத்தில் தியானம், துவாபர யுகத்தில் வேள்விகள் செய்தல், கலியுகத்தில் தானங்கள் செய்வது உத்தமமானது என்று வற்புறுத்தப்படுகின்றது.

இல்லற வாழ்வை மேற்கொண்டவர்கள் வேள்வி முதலான கருமங்களைப் புரிவதும், கோயில், சத்திரம், தோட்டம், குளம் போன்ற தர்ம கைங்கரியம் செய்வதும் அதிதிகளை உபசரித்து அவர்களைத் திருப்தி செய்வதும் உத்தமமான செயலாகும். இத்தகைய உத்தம செயல் எல்லா யுகங்களுக்கும் பொதுவானது.

குடும்ப வாழ்க்கையில் இருப்பவர் தம்முடைய தாயாதிகள் எவரேனும் இறந்துவிட்டால் அவரைக் குறித்து தர்ப்பணம் என்னும் நீர்க்கடனைச் செய்யவேண்டியது முக்கியமாகும். அதனால் இறந்தவரின் ஆன்மா மகிழ்ச்சியடையும்.

இறந்தவருக்கு அவரைக் குறித்துப் போடப்படும் பிண்டங்களாலேயே சரீரம் உண்டாகின்றது. அதனால் பத்து நாள்களும் செய்யவேண்டிய கிரியைகளைத் தவறாமல் முறைப்படி செய்ய வேண்டியது முக்கியமாகும். அவ்வாறு செய்வதில் குறை ஏற்படுமானால் இறந்து போனவன் பிண்ட சரீரம் பெற முடியாமல் வருந்த நேரும்.

ஒருவர் தம் தாய் தந்தையருக்குரிய கருமங்களைச் சரிவரச் செய்தால் அக்கருமப் பயன்கள் அவர்களைச் சென்றடையும். இறந்து போனவர் முதல் நாள் நீரிலும் அடுத்த மூன்று நாள் அக்கினியிலும் அதற்கடுத்த



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூன்றுநாள் ஆகாயத்திலும் பத்தாவது நாள் தம் வீட்டிலும் ஆவி உருவில் இருப்பர். முதல் மூன்று, ஐந்து, ஏழாவது, ஒன்பதாவது, பதினொன்றாவது ஆகிய நாட்களில் நவ சிரார்த்தம் செய்ய வேண்டும். ஒவ்வொரு குலத்திற்கும் எத்தனை நாட்கள் ஆசௌசம் எனப்படும் தீட்டு விதிக்கப்பட்டுள்ளதோ அத்தனை நாட்களும் பிண்டத் தர்ப்பணம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஒருவர் இறந்த திதியிலேயே மாத சிரார்த்தம் செய்ய வேண்டும். பதினோராம் நாள் பலவகை பலகாரங்களோடு சோறு சமைத்து நாற்சந்தியில் கொட்டி நீராட வேண்டும். ஒருவர் தான் இறக்கும்போது அதிக வருத்தமடைந்திருந்தால் அவரைக் குறித்து ஏகோதிஷ்ட சிரார்த்தம் சிறப்பாகச் செய்ய வேண்டும். அதனால் அவர் வருத்தம் நீங்கி மகிழ்ச்சியடைவார். ஏகோதிஷ்ட சிரார்த்தம் ஒவ்வொருவரும் தம் குலவழக் கப்படி குறிப்பிட்ட நாட்களில் செய்யலாம். ஒருவர் இறந்து விட்டால் அவரைச் சேர்ந்தவர் களுக்கு பத்து நாட்கள் தீட்டு உண்டு. இறந்த வருக்குரிய கர்மம் செய்து முடித்த பிறகு மூன்று மாதங்களுக்குள்ளாக ஒரு உறவினர் இறந்த செய்தியைக் கேட்க நேரின் அந்நிலை யில் மூன்று நாட்கள் மட்டுமே தீட்டு உண்டு. மூன்று மாதங்களுக்கு மேல் ஆறு மாதங் களுக்குள்ளாகவோ ஓராண்டுக்குள்ளாகவோ கேட்க நேர்ந்தால் ஒரு நாள் மட்டுமே தீட்டு உண்டு. ஓராண்டு முடிந்த பிறகு கேட்க நேரின் கேட்டவுடனேயே நீராடி விட்டால் போதுமானது. இது எல்லா குலத்தினருக்குமே பொதுவானது.

## இறந்தவருக்கு ஈமச் சடங்குகள் செய்யும் விதம் பற்றி பகவான் ஸ்ரீ விஷ்ணு கூறுகிறார்.

இறந்து போனவரின் தாய் தந்தையர் உயிருடன் இருக்க நேரின் அவர்களுக்கு மேலே மூன்று தலைமுறைப் பிதுர்களின் பிண்டத்தோடு இறந்தவரின் பிண்டத்தையும் சேர்க்க வேண்டும். அத்தகைய பிண்டச் சேர்க் கையை அவரது புத்திரர் செய்ய வேண்டும். அப்பொழுது தான் இறந்துபோன தந்தை மகிழ்ந்து அப்புத்திரருக்கு புத்திர பாக்கியம் உண்டாகுமாறு செய்வர். சிரார்த்தம் பிதுர் களுக்கு திருப்தி உண்டாகுமாறு செய்ய வேண்டும். அதனால் செய்பவருக்கு நற்பயனே உண்டாகும்.

ஒருவர் உயிர் விட்டது அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுள் ஒன்றாக இருப்பின் இறந்தவருக்கு உடனடியாகச் சடங்குகளைச் செய்யக்கூடாது. அவர் உயிர்விட்ட நட்சத் திரம் முடிந்த பின்பே கிரியைகள் செய்ய வேண்டும். அதனால் அவர்கள் நற்கதி அடை வர். அவர்களுக்கு எள் - பசுநெய் போன்றவற் றைத் தானம் செய்ய வேண்டும்.

ஒருவர் இறந்து விட்டால் அவரது கால்களையும் கைகளையும் கட்ட வேண்டும். உற்றார், உறவினர் சடலத்தினருகில் இருக்க வேண்டும். ஒருவர் வீட்டிலோ ஒரு கிராமத் திலோ இறந்த உடல் (சவம்) இருந்தால் சுற்றியுள்ளவர் உணவு உண்ணக் கூடாது. தாம்பூலம் தரிக்கக்கூடாது. ஆண் பெண் கூடிக் களிக்கக் கூடாது. அவ்வாறின்றி சவம் கிடக்கும்போது யாராவது நீரும் உணவும் உட்கொண்டால் மாமிசம் உண்ட தோஷமும் இரத்தம் பருகிய தோஷமும் உண்டாகும்.

கருடன் இப்போது "பகவானே! தீட்டு பற்றி இன்னும் விளக்கமாகக் கூற வேண்டும்" என்று கேட்டான். பகவானும் கூற ஆரம்பித்தார்.

கருடனே! பிராமணனுக்குப் பிள்ளை பிறந்தாலும், பிராமணன் இறந்தாலும் அவனது தாயாதிகாரர்களுக்கு பத்துநாட்கள் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டு உண்டு. தீட்டு உள்ளவர்கள் வீட்டில் மற்றவர்கள் உணவருந்தக் கூடாது. தற் கொலை செய்து கொண்டவர்களுக்கும், கொடிய மிருகங்களால் கொல்லப்பட்டவர் களுக்கும், தீயில் விழுந்து இறந்தவர்களுக் கும், வெளிநாடு சென்றிருக்கும்போது அல் லது வெளியூர் சென்றிருக்கும்போது இறந்த வர்களுக்கு உடனே கருமம் செய்யக்கூடாது. பொதுவாக ஒருவன் இறந்த செய்தியைக் கேட்டவுடன் குளித்துவிட வேண்டும்.

அரசன், துறவி, வேள்வி செய்பவன் ஆகியோருக்குத் தாயாதிகாரர்கள் இறந்தால் தீட்டு கிடையாது. ஒருவனுக்குப் பெண் குழந்தை பிறந்தால் தாயாதிகாரர்களுக்கு தீட்டு இல்லை. பெற்ற தாய்க்கு மட்டும் பத்து நாட்கள் தீட்டு உண்டு. யாகம் செய்யும் போதும், திருமண கோலத்தில் இருக்கும் போதும், கோவில் திருவிழாவின்போது கங் கணம் கட்டிக்கொண்டவர்களுக்கும் அந்தக் காலத்தில் தீட்டு வந்தால் தீட்டுக் கிடையாது. தீட்டுக் காலங்களில் பிராமணர்களுக்குத் தானம் செய்யலாம். போரில் ஒருவன் உயிர் இழந்தால் அவனைச் சேர்ந்தவர்களுக்கு ஒருநாள் மட்டும் தீட்டு உண்டு என்று தீட்டுக் களைப் பற்றி பெருமாள் கூறினார்.

(தொடரும்...

# இளமையிற் கல்

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதுபோல் இளமையில் பழகிய பழக்கங்கள் எமது வாழ்நாள் பூராவும் நின்று நிலைப்பதுபோல் சிறு வயதுமுதல் இறைவழிபாடு, வாசிப்பு பயிற்சி என்பவற்றை எமது மூதாதையர் எமக்குப் பழக்கப்படுத்தியுள்ளார்கள். அந்த வகையில் இன்று வரையும் காலையில் ஒரு மணிநேரமாவது வாசிப்பது, தேவார திருவாசகங்கள் பாராயணம் செய்வது வழமை. ஆனாலும் ஞானச்சுடர் மலர் வெளியாகிய காலம்முதல் அலுவலகம் சென்று இறைவழிபாடு இயற்றியபின் திருவள்ளுவரின் திருக்குறளும், யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை மற்றும் சுடர் தரும் தகவல் என்பவற்றை காலையில் வாசித்த பின்னர் அன்றாட வேலைகளை செய்வதில் மன நிறைவு ஏற்படுகின்றது.

இவ்வாறே 19.02.2015 அன்றும் சுடர் தரும் தகவல் வாசித்து முடிந்ததும் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. இச் சுடர் தரும் தகவலை வியாழக்கிழமைகளில் சாயிசிந்தனை, யோகர் சுவாமி நற்சிந்தனை என்பன வெளியிடுவதுபோல இதனையும் வெளியீடு செய்வதற்கு அனுப்பினால் நல்லது என்று எண்ணியபடி மலரை நிறைவு செய்துவிட்டு வலம்புரி பத்திரிகையை மேலோட்டமாக செய்திகளைப் பார்க்கின்றேன். அன்றைய தினம் "இளமையிற் கல்" என்ற கட்டுரை ஞானச்சுடரில் இருந்து தொகுத்து வெளியீடு செய்திருந்தார்கள். ஞானச்சுடர் மலர் என்பது அஞ்ஞானத்தில் சிக்கித் தவிக்கும் மக்களை மெஞ்ஞான நிலைக்கு உயர்த்த வந்துதித்த ஞான நூல் என்பதில் ஐயமில்லை.

இம்மலர் வெளிவந்த காலத்தில் இருந்து ஒரு விடயத்தை அவதானிக் கின்றேன். என்ன சிந்தனையோடு அல்லது என்ன வினாவுடன் இந்நூலை வாசிக் கிறேனோ அதற்குச் சரியான விடை அம்மலரில் அடங்கியிருப்பதைக் காண்கின்றேன். இவ்வாறான நிகழ்வுகள் தினமும் எழுதி ஆவணப்படுத்தி வருகின்றேன். எதிர் காலங்களில் தொடர்ந்து மலரில் வெளியீடு செய்வதற்கு குருவருளும் திருவருளும் கைகூட வேண்டும்.

-திருமதி தவேந்திரநாதன் வசந்தகுமாரி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு யோகர் சுவாமிகளின் சிவப்பேறினில் தித்திக்கும் சைவசமயம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

இலங்கையில் காலத்திற்குக் காலம், தவ சிரேஷ்டர்கள் பலர் தோன்றி திருவருள் கைகூடப் பெற்றவர்களாய் மக்களை வாழ் வாங்கு வாழ வழிகாட்டியுள்ளார்கள். பொது வாக எல்லா மதங்களிலும் இஃதுபோல் நடை பெறுவது வாலாயமாக இருக்கின்றபோதும் சைவசமயத்தில் "குருவருள்" நிரம்பிய இரு வரை என்றும் போற்றி வணங்குகின்றோம் சிறப்போடு. அவ்வாறு போற்றி வணங்கப்படு பவர்கள் யாரெனில், ஒருவர் **தவத்திரு செல் லப்பா சுவாமிகள்**. மற்றையவர் **தவத்திரு யோகர் சுவாமிகள்**. இன்னொரு விதமாகச் சொல்வதாயின் குருவும் சிஷ்யனும் என்ப தாகும். இருவருமே மொத்தமாக நூறு ஆண்டு களை ஆன்மீக எல்லைகளாக வடிவமைத் துக்கொண்டதுபோல ஒவ்வொருவருடைய இருதயங்களையும் துப்புரவு செய்த மகா புருஷர்களாவர். துப்புரவு என்பது மனித இதயங்களுக்குப் பொருந்துமா என்ற கேள்வி எழுவது இயல்பே. அது சரியென்று கூற முடி யும். காரணம், நாம் பொதுவாக வேண்டாத பலவற்றையும், நிலையில்லாத எக்கச்செக்க மானவற்றையும் உள்ளே வைத்திருக்கின் றோம். இவற்றை நீக்குவதென்பது குருவரு ளாலேதான் துப்புரவு செய்யமுடியும். அத னையே செல்லப்பரும் யோகரும் செய்தனர்.

இவர்களுக்கு முன்னோடியாக, கடை யிற் சாமியே பரிபக்குவநிலையை மிக எளி தாக, செல்லப்பா சுவாமிகளுக்கு வழங்கினார். எப்படியென்றால், செல்லப்பா சுவாமிகள் கடையிற் சாமியைத் தரிசிப்பதற்காக வந்து கொண்டிருக்கின்றார். கண்டவுடன் கடையிற் சாமியோ, ஒரு ரூபாவை வெற்றிலையில் வைத்து மடித்து செல்லப்பரின் கையில் வைத்து, தான் வைத்திருந்த குடையைத் தலையில் சுமக்கச் செய்து, செல்லப்பரைப் பார்த்து "ஓடடா" என்று சொன்னார். ஓடிய செல்லப்பர் நல்லூர் தேரடியில் பதினைந்து நாட்கள் ஆடாமல் அசையாமல் தியானம் செய்தார். கடையிற் சாமியின் அருட்பிரவாகம் செல்லப்பரை ஞானகுருவாக்கிற்று. சித்தத் தைச் சிவமயமாக்கிய காரணத்தினால், சிவ சம்பத்துக்கள் அவர்பால் நிறைந்ததெனலாம். அதனால் தன்னை மறந்தார். மக்கள் இவரை **"விசர் செல்லப்பர்"** என்று அழைக்கலானார் கள். மேலும் சாதியாச்சாரமோ, சமயாச் சாரமோ, சம்பாத்திய ஆச்சாரமோ, மற்றும் ஆசாபாசங்களோ எதுவுமே செல்லப்பரைத் தொந்தரவு செய்யவில்லை. இந்தநிலை **தற்காலத்தைத் தொந்தரவு செய்வதனால் தான் எம் சமயம் பல சங்கடங்களைச் சுமந்தவண்ணம் உள்ளது.**

நாம் சமயத்தைச் சங்கடப்படுத்து கிறோமே தவிர, உண்மையான சமயிகளாக வாழ்கிறோமா என்று எண்ணத் தோன்றுகிறது. செல்லப்பரின் நிலை அன்றைய மக்களை ஆன்மீக வழியில் நேராகப் பயணிக்க வைத்தது. சிந்திக்கவும் வைத்தது. எதிலுமே தட்டாது, முட்டாது நின்று சிரிப்பார், களிப்பார், பேசுவார், கூத்தாடுவார், பட்டினி கிடப்பார். பாடுவார், பிச்சையெடுப்பார், பிறிதாகச் சமைப் பார். நல்லூர் தேரடியில் படுத்துறங்குவார். இவ்வேளையில்தான் கொழும்புத்துறையைச் சேர்ந்த விதானையார், திருஞானசம்பந்தர், துரையப்பா ஆகியோருடன் யோகநாதன் எனப் பெயர் கொண்ட யோகசுவாமிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். யோகநாதனைக் கண்ட செல்லப்பா சுவாமிகள்,

"யாரடா நீ! என்று அதட்டினார். இடி போல அதட்டிய அந்தக் கர்ச்சனைதான் யோக சுவாமிக்கு அர்ச்சனையாக அமைந்த தெனலாம். "ஆரடா நீ!, தேரடா உள் தீரடா பற்று" என்ற வாசக பரிபூரணத் தீட்சையை அளித்த கையோடு:-

ஒரு பொல்லாப்பும் இல்லை,
முழுவதும் உண்மை,
நாமறியோம்,
எப்பவோ முடிந்த காரியம்
ஆரறிவார்?

ஆகிய மகா வாக்கியங்களை அவரது செவியினில் உபதேசித்து அருளினார். அன்றி லிருந்து யோகரின் குருவாக செல்லப்பர் விளங்கினார். யோகரே பொருத்தமான ஒரு சீடனாக அமைந்து விட்டான் என்பதை உணர்ந்து தன்னை அவரிடம் மனதார ஒப் படைத்தார். அன்றுமுதல் செல்லப்பா சுவாமிகளை யோகரும் குருவாக ஏற்றுக் கொண்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இன்றுவரை செல்லப் பரின் ஒவ்வொரு சொல்லும் மெத்தச் சரி யாகவேயுள்ளது. ஆம், நாம் ஒவ்வொருவரும், செல்லப்பரின் கேள்விக்கு விடையை இது வரை பெற்றோமா? என்பது வினாவாகவே உள்ளது. யார் நீ? இதற்கு என்ன பதில்? 1915ஆம் ஆண்டு பங்குனி மாதம் அஸ்வினி நட்சத்திரத்தில், வெள்ளி பூத்த இரவுவேளை ஓம் என்ற ஒலியோடு, செல்லப்பர் சமாதி யடைந்தார். "அவனே - நான்" என்ற தாற்பரிய மோடு, நீயார் என்பதற்கு விடையாக, செல்லப் பரின் வழியில் திகழ்ந்தவர்தான் தவத்திரு யோக சுவாமிகளாவார்.

யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் என்னும் வரலாற்றுத் திருப்பதியில், சைவப் பெரியார், அம்பலவாணர் - சின்னாச்சி அம்மையார் தம்பதியினருக்கு, 1872ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் 29ஆம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தவர்தான் யோகநாதன் என்ற பெயர் கொண்ட யோகர்சுவாமி அவர்கள். கத்தோ லிக்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியும், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியுமாக, தமிழ் ஆங்கிலக் கல்வியில் பரிணமித்தார்.

தந்தையார் மஸ்கெலியாவில் வியா பாரம் நடாத்திய காரணத்தினால், தேயிலைத் தோட்டமொன்றில் குமாஸ்தாவாக கடமை புரிந்தார். மலைநாடு மனதுக்கிசைந்த இரம் மியம் மிக்கதாக அமைந்திருந்ததனால், சிவனொளிபாதமலையின் இரகசியத்தையும், அங்கு சூரியோதயக் காட்சியையும் கண்டு அநுபவித்தார். தன் மனதைப் பறிகொடுத்தார். அதனால் யோகர் தன்பாட்டிலேயே பேசத் தொடங்கினார். எப்படி? "எனது உடம்பு சிவன் சொத்து. இது சிவனுக்கே சொந்தம். நான் அவனையே தேடிப் போனேன். இது எல்லாம் முழுக்க முழுக்க உண்மையே. நானே அவன். அவனே நான்" என்றவாறு புலம்பிய யோகரைக் கண்ணுற்ற தந்தையார், மஸ் கெலியாவிலிருந்து மீண்டும் யாழ்ப்பாணத் திற்கே அனுப்பி வைத்தார்.

இரணைமடுக் குளக்கட்டு நிர்மாண வேலைகளுக்குப் பொறுப்பாகவுள்ள திரு பிறஷிண் என்ற பொறியியலாளரால் இவருக் குப் பண்டகசாலைப் பாதுகாவலர் என்ற பதவியில் இடமளிக்கப்பட்டது. இவரது ஆங் கிலப் புலமையால் நிர்வாகம் இலகுவாக்கப் பட்டது. தொழில் புரியும்போதே பிரார்த்தனை யிலும், தியானத்திலும் ஈடுபடுவதைக் காணுற்று திரு பிறஷிண், இவரைப் பார்த்து, ('GOD MAN') கடவுள் மனிதன் என்று குறிப் பிடுவார். இவர் நட்ட மாமரம் வளர்ந்து மிக வும் செழிப்பாக இப்போதும் இருப்பதனால், அது "சாமியார் மரம்" என்று அழைக்கப்படு கிறது. வடமொழியும் கற்றுத் தேர்ச்சி பெற்ற தனால் கற்பவை அவருக்கு இலகுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனனமாயிற்று. திருக்குறள், ஒளவையார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், பட்டினத் தார் பாடல்கள், நமச்சிவாய மாலை, பாடு துறை, பகவத்கீதை, உபநிடதங்கள், பிரம்ம சூத்திர பாஷ்யம், விவிலியத்துத் திரு வசனங் கள், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், குர்ஆனின் வசனங்கள் என, சகலமத சாராம் சங்களையும் கற்றுணர்ந்த தகைமையினால், மதநல்லிணக்கம் நாட்டில் குடிகொண்டதென லாம். இப்போ?

செல்லப்பா சுவாமிகள் எப்படிச் சீறி னாலும், யோகர் அவற்றையெல்லாம் பொறுத்து, அவருடைய வாயிலிருந்து உதிர்க்கும் வாக்கி யங்களையும், பாவனைகளையும், பரிபாஷை களையும் சேமிப்பதிலேயே அதீத அக்கறை கொண்டிருந்தார். 1899ஆம் ஆண்டு உத்தி யோகம், சம்பளம், வேலை எல்லாவற்றையும் துறந்து, உற்றார், பெற்றோர், உடன் பிறந் தோர் அனைவரையும் விட்டு நீங்கியவராய், நல்லூர் தேரடியில் செல்லப்பரோடு குடி யேறினார். பட்டினி வாட்டியபோதும் பாயின்றிக் கிடப்பார். ஒரு ரூபாவோடு ஒரு நாளைக் கழிப்பர். சட்டி பானைகள் கூட செல்லப்பர் உடைத்தெறிவார். சாப்பாடுகூட யோகருக்குக் கிடைக்காமல் போய்விடும். கீரிமலை, கதிர் காமம், மாத்தளை, கொழும்பு, மாவிட்டபுரம், வண்ணார்பண்ணை சிவன்கோவில், சுன் னாகம், கிளிநொச்சி, கொழும்புத்துறையென பேராதனை, கம்பளை, நாவலப்பிட்டி, திரு கோணமலை, மட்டக்களப்புவரை யோகர் வாழ்வு பேறாக அமைந்தது. சுவாமிகள் தம் மைத் தரிசிக்க வருகை தந்த ஆசிரியர் களையும், ஏனைய அரச ஊழியர்களையும் ஏசிக் கலைத்துவிட்டார். காரணம் கடமைநேர காலத்தில் கடமையை உதாசீனம் செய்து கடவுளுக்குத் துரோகம் செய்ய எண்ணிய தாலேயே உள்ளேவர அனுமதிக்கவில்லை. இப்பொழுது யோகர் சுவாமிகள் பகலில் வீதியுலா வருவாராக இருந்தால், பலருக்கு லீவு வழங்குமாறு சிபார்சு செய்திருப்பார். அல்லாவிடின் ஏசிக் கலைத்திருப்பார். கந்த புராணம் படிப்பதற்காயினும் கடமையை அலட்சியம் செய்ய வேண்டாம் எனப் பலரை எச்சரித்தார்.

தன் தந்தையைக் கவனிக்காத ஒரு மைந்தன், தன் கால்களில் வீழ்ந்து கும்பிட முயன்றபோது, "போய்க் கொப்பனைக் கும்பிடு" என்றாராம்.

**"பணிதலைக் கொள்ளல் பாரினில் இன்பம்,**
**பணிதனைக் கொள்ளல் பாரினில் இன்பம்,**
**பணி முயன்று ஆற்றி முற்றுதல் இன்பம்,**
**பணி பலன் கருதாது ஆற்றுதல் பேரின்பம்"**

ஒரு தொண்டானது, ஒருவராலோ அல்லது பலராலோ நிறைவேற்றப்படும்போது, அந்தத் தொண்டின் மறைவில், ஏதாவது ஒரு இலாப நோக்கம், அல்லது கரவுடைய நெஞ் சம் ஒளிந்திருக்குமானால் அந்தத் தொண்டு உண்மையான தொண்டாக அமையாது. கள்ளத்தனமான தொண்டாக மாறுகிறது. இது பலருக்குப் புரிவதில்லை. உதாரணமாக நான் ஒரு பொதுப்பணி ஆற்றுவதாக நியமிக் கப்படும் பட்சத்தில், யாவும் சிவதொண் டாகவே ஒப்பேற்ற வேண்டும். இல்லாத பட்சத் தில் என் குடும்பத்துக்குச் சுவறுவதாக அமையவே கூடாது. அல்லாமலும் எனது பட்டங்களோ பதவிகளோ அல்லது தரங் களையோ உறுதிப்படுத்தி பிரபல்யப்படுத்த லாகாது. சுவாமிகள் கூறியதாக, எங்கள் அப்பு என்ற நூலில் பக்கம் 48இல், இவ்வாறு கூறப்பட்டுள்ளது. எவ்வாறெனில், தனக்கும், தன்னைத் தொடரும் சந்ததிக்கும், நல்ல லாப நோக்குடன் தொண்டுபோல் மடங்களை யும், கோயிலையும் கட்டுவதனால் என்ன பலனை இறுதியில் காணமுடியும்? யார் யாருக்கு எந்தெந்த வேலை கொடுக்கப்படு கிறதோ அது ஆண்டவனுக்கே காணிக்கை என்ற மனப்பாங்குடன் செய்வதே சிவ தொண்டு. இதனையே "அண்ட பிண்டமெலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவெனக் கண்டு தொண்டு செய்வதே தகுதி" எனச் சுவாமிகள் நுட்பமாகக் கூறியுள்ளார். வீடும் ஒரு கோயில். கோயிலைப் போன்றே வீட்டையும் தூய்மையாகப் பேண வேண்டும். கோயிலில் நைவேத்தியம் போல, வீட்டிலும் பக்குவமாகப் பாகம் செய்து அன்ன மிட வேண்டும் என அன்னையருக்குப் புத்தி கூறுவார். மேலும் ஒவ்வொருவரும் தத்தமது வேலைகளைத் தாமே செய்யத்தான் வேண்டும் என்பார். இந்தப் பிறப்பின் நோக்கமானது- ஏகனாகி இறைபணி நிற்றல் இந்நிலையில், சுவாமிகளுக்குப் பெருஞ்செல்வம் எப்போதும் இருந்ததில்லை. இல்லாதபோதும் சைவ உலகத்தைச் சரியான பாதையில் தித்திக்க வைத்த பெரும்பேறினை யோகர் சுவாமிகள் ஆற்றியபடியால்தான் யாழ்ப்பாணம் மட்டுமல்ல உலக இந்துமதம் குறிப்பாக சைவ சமயம், உயிரோடு தழைத்திருக்கிறதென்றே கூறலாம். கட்டிடங்களினாலோ, கோபுரங்களினாலோ, விளம்பரங்களினாலோ சமயம் வளர்வதாயின் இன்றைய நிலையில் அதீத வளர்ச்சியை நாம் எட்டியிருக்க வேண்டும். எட்டியிருக்கிறோமா? எமது சமயம் யாவற்றிலுமே எளிமையாக்கப்பட வேண்டும். "காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங் கவர் கள்வன்' பணத்தையோ, பதவியையோ ஒரு போதும் விரும்பியதில்லை. மாறாகப் பக்தியையே விரும்புகின்றான். மின்சாரமும், பெற்றோலும் உலகெங்கும் அறவே இல்லாமல் போகுமேயானால், மனிதர்கள் எல்லோருமே தெய்வமாகலாம். சுவாமிகள் ஒரு சதக் காசும் இல்லாமல் ஆண்டியாகவே இருந்தார் இதனாலன்றோ நல்லதோர் சமய வழிகாட்டியானார். ஆன்மீகம் கொழும்புத்துறையிலிருந்து ஹவாய் தீவு வரை உயிரோடிருப்பதென்றால் தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆன்மீக வார்ப்புகளே காரணமாகும்.

**"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே**
**நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்"**

இந்தப் பாடல் அவரால் பாடப்பெற்ற அற்புதம் நிகழவல்ல பாடலாகும். என்னால் அதை அனுபவிக்க முடிகிறது. நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய சித்தாந்தம். இந்த உண்மையை உணர்வாயாக. நீ கவனிக்க வேண்டியது ஒன்றுளது. அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளார். அவனே நான்! என்று சுவாமிகளின் சிந்தனை எக்காலத்திற்கும் பொருந்துவதாகும். வெப்பந் தட்பம், இன்பம் துன்பம், இளமை முதுமை, இவைகள் தீண்டுவதால் நீ கவலைப்படாதே! இவையனைத்தும் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை. உண்மை இன்மையாகாது. இன்மை உண்மையாகாது.

**"ஓ! சினேகிதா! நீ சிவனடியானென்று முழு மனத்தோடு நினை. எல்லா வெற்றியும் உன்னிடத்தேயுண்டு. யாவும் உன் காலடியில். ஓ மனிதனே வானமே வந்தாலும், பூமியே வந்தாலும் அதை ஆட்சி செய்யக்** கருதாதே! சாட்சியாயிரு. சற்குரு தரிசனம் உனக்குக் கிடைக்கும். அது ஒன்றே போதும். வேறென்ன வேண்டும்?

**"சற்குரு தரிசனம் சகல பாக்கியசுகம்**
**தாளினைப் பணி நீ தினம்"**

நற்சிந்தனைப் பாடல்களை நமக்குச் சொத்தாக்கிய சுவாமிகள், அன்பர் திருநாவுக்கரசருக்கு யாவற்றையும் உபதேசித்தவராய், 24.03.1964 அதிகாலை 3.30 மணியளவில் கொழும்புத்துறையில் மகா சமாதியடைந்தார். ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் ஆயிலிய நட்சத்திரத்தில் அவரது குருபூஜை கொண்டாடப்படுகிறது. நாமும் செல்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 06

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

01) சித்தன் போக்கு சிவன் போக்கு:

இன்றைய உலகின் மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் இறைநம்பிக்கை போன்ற சிந்தனைகளுக்கு முன்னோடியாகவும் முதன்மையாகவும் சித்தர்களே திகழ்ந்தார்கள். தவத்தின்மூலமாக இறை சக்தியைப் பெற்றவர்களாகிய சித்தர்கள் தமது கருத்துக்களைத் தங்கள் பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தினார்கள். சித்த மருத்துவம், கூடுவிட்டுக் கூடு பாய்தல், எண் சோதிடம், கரு உற்பத்தி போன்ற பல செய்திகளையும் சித்தர்கள் தம் ஞானத்தின் ஊடாக வெளியிட்டுள்ளனர். இறைவனின் தூதர்களாக விளங்கியவர்கள் கூறும் கருத்துக்களாகச் சித்தர்களின் கருத்துக்கள் காணப்படுகின்றன.

இயற்கை உணவினை உட்கொண்டு மனதைத் திடப்படுத்தி, நல்ல சிந்தனைகளையும், நல்ல எண்ணங்களையும் அன்பினையும், கருணையையும் மனதில் நிலைநிறுத்தி தவத்தினை மேற்கொண்டு இயற்கையின் ஆற்றலை உணர்ந்து வெளிப்படுத்தியவர்களே சித்தர்கள் ஆவார். "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" என்ற கம்பனின் வாக்கிற்கு அமைய தமது மனதில் தோன்றும் நல்ல சிந்தனைகளைச் செயல் வடிவம் ஆக்குவதில் இவர்கள் உறுதியுடன் செயற்பட்டார்கள். சித்தர்களின் உயர்ந்த சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கண்கட்டி வித்தைகள் என்று சிலர் இகழ்ந்தார்கள்; தூற்றினார்கள். சித்தர்கள் பிரபஞ்ச மயக்கத்தில் வாழும் மானிடர்கள் கூறும் கருத்துக்களைப் பொருட் படுத்துவதில்லை. இதனால்த்தான் "சித்தன் போக்கு சிவன் போக்கு" என்ற பழமொழி தோற்றம் பெற்றது.

இன்றைய காலத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்பத்தை வியந்து நோக்கும் மானிடர்கள் அதனது அழிவு தரக்கூடிய சக்திகளைக் காண்கின்ற பொழுது முகம் சுழிக்கின்றனர். அணு குண்டுகளையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும், பயங்கர ஆயுதங்களையும் கண்டுபிடிப்பதற்கும் இந்த விஞ்ஞான அறிவுதான் பயன்பட்டுள்ளது. ஆனால் சித்தர்கள் ஆக்க சக்திக்குப் பயன்படும் செயல்களில் மட்டுமே நாட்டம் செலுத்தினார்கள்.

02) சித்த வைத்தியம்:

சித்த வைத்தியத்தைப் பற்றி ஆராய்ந்தால் சித்தர்களின் சிறந்த விஞ்ஞான அறிவைக் காணலாம். சித்த வைத்தியம் தமிழகத்து அறிஞர்களால் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட தனி வைத்தியம் என்பதே அறிஞர்களின் கருத்து ஆகும். நாடிகளைப் பிடித்துப் பார்த்து நோயை அறியும்முறை சித்தவைத்தியத்திற்கு மட்டுமே உள்ள தனிமுறையாகும். நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் வாழ்வதற்கான பயிற்சியும் காயகல்பம் முதலிய மருந்து வகைகளும் சித்தர் நூல்களிலே கூறப்பட்டுள்ளன.

நம்நாட்டுச் சித்தர்களும், யோகிகளும், முனிவர்களும் மனித உடல் பற்றிய கருத்துக்களைத் தங்களது யோக ஞானத்தாலும், அனுபவத்தாலும் தெள்ளத் தெளிவாக அறிந்து இம்மண் பயனுறப் பாடல்களாகத் தந்துள்ளனர். "அரிது அரிது மானுடராதல் அரிது" என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் கூற்றாகும். இறைவன் தந்த இந்த உடலைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைக்கக் கூடாது என்பது சித்த புருஷரின் வாக்கு ஆகும். நாம் உண்ணும் உணவினாலேயே இந்தச் சரீரம் நிலைபெற்றிருக்கின்றது. உண்கின்ற உணவின் அளவு அதிகரித்தால் சரீரத்தில் பல வியாதிகள் உண்டாகும்.

அளவறிந்து உணவு உட்கொள்கிறவனிடம் இன்பம் நிலைத்திருப்பதுபோல, அளவின்றி நினைத்த போதெல்லாம் உண்கிற பெருந்தீனிக்காரனிடம் நோயும் நீங்காது குடிகொண்டு இருக்கும்.

இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம் போல் நிற்கும்
கழிபேரிரையான் கண் நோய் (குறள் 946)

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. உண்ணுதல், உறங்குதல், பேசுதல் ஆகிய மூன்றிலும் அளவு பேணப்படல் வேண்டும். அளவுக்கு மீறி உண்பதாலும், உறங்குவதாலும் உடம்பில் மந்தநிலை ஏற்படும். வாயால் வார்த்தைகளைப் பேசுவதில் நிதானம் கடைப்பிடிக்க வேண்டும். சிந்தனைக்கும் வாய்க்கும் இடையே தொடர்பில்லாமல் பேசுபவர்கள் பலரின் மனதினைப் புண்படுத்தி விடுகிறார்கள். இதனால்த்தான்

"அளவுக்கு மிஞ்சி உண்ணாதே, அளவுக்கு மிஞ்சி உறங்காதே,
அளவுக்கு மிஞ்சி உளறாதே" என்ற முதுமொழி ஏற்பட்டது. யோகிகள் வயிற்றினை அக்கினிக் குண்டத்தோடு ஒப்பிட்டுக் கூறுவார்கள். அக்கினியில் போடப்படும் பொருட்கள் யாவும் நீறாவதுபோல வயிற்றில் போடப்படும் உணவுகளும் செரித்துவிடும். பசித் தீயின் தேவைக்கேற்றபடி அல்லாமல் அளவில்லாமல் பெருந்தீனி உண்டால், அப்படி உண்பவரை நோய் நொடிகளும் அளவிட முடியாத அளவிற்குப் பற்றிக்கொள்ளும்.

தீ அளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோய் அளவு இன்றிப் படும். (குறள் 947)

"மீதூண் விரும்பேல்" "நோய்க்கிடங்கொடேல்" என்ற ஔவைப் பிராட்டியின் வாக்கும் இதனையே குறிப்பிடுகின்றது.

போகர் என்ற சித்தர் மூலிகைகளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ரோமாபுரிவரை சென்றிருந்தார் என்று கூறப்படுகிறது. சலத்தைப் பரிசோதனை செய்து நோயை அறிந்து கொள்ளும் முறை மேற்கத்தைய மருத்துவத்தில் இன்று பயன்படுத்தப்படுகிறது. இந்த முறையினைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தேரையர் என்ற சித்தர் தான் எழுதிய நீர்க்குறி சாஸ்திரம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மருத்துவ குணமுள்ள மூலிகைகள் பல நமது சூழலிலே காணப்படுகின்றன. இவற்றை நாம் உண்ணும் உணவிலே சேர்ப்பதனால் நீண்ட காலம் நோய் நொடியின்றி வாழலாம் என்ற உண்மையினை சித்த வைத்திய நூல்கள் கூறுகின்றன. ஆனால் இன்று நம்மவர்களில் பலர் இயற்கை தந்த மூலிகைகளை உணவாகப் பயன்படுத்துவதில்லை. போத்தலிலும், ரின்களிலும், பைக்கற்றுக்களிலும் அடைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற அவசர உணவுகளையே உண்கிறோம். குறிஞ்சா, சண்டி, மொசுமொசுக்கை, மொடக்கொத்தான், தூதுவளை, பசளி என்றால் என்னவென்று தெரியாமலே நமது அடுத்த சந்ததியினர் பலர் வாழ்ந்து வருகின்றார்கள்.

"பூச்சடித்த சுவரின் உள்ளே புடிங்கும் கேக்கும்
தாது நிறை உணவை எல்லாம் நீக்கிவிட்டுத்
தரித்திரத்தைக் காதலித்தோம் எங்கள் பாவம்"

என்ற கவிஞன் ஒருவரின் கூற்றே நடைமுறையில் நிலவி வருகிறது.

சித்தர்கள் பல்வேறு வகைப்பட்ட நூல்களை இயற்றியுள்ளனர். மருத்துவம், சோதிடம், தியானம், வான சாஸ்திரம், வர்மக் கலை, மூச்சுப் பயிற்சி, நீண்ட நாட்கள் வாழும் பயிற்சி போன்ற பல தரப்பட்ட கருத்துக்களைத் தம் பாடலில் கூறியுள்ளனர். சட்டை முனியின் சட்டை முனிவாத காவியம் ஆயிரம், அகத்தியரின் வைத்திய ரத்தினச் சுருக்கம், அகத்தியர் வைத்திய பூரணம், தேரையரின் வைத்திய காவியம், நீர் நீர்க்குறி சாஸ்திரம் போகரின் போகர் எழுநூறு, கோரக்கரின் மலை வாகடம், தன்வந்திரி முனிவரின் வைத்தியக் கும்பி, வைத்தியக் காவியம் ஆகிய நூல்கள் சித்தர்களின் பெருமையைப் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன.

சித்தர்கள் இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளையும் தேன், மரப்பட்டை, வேர்கள், காய்கனி வகைகளையும் கலந்து நவபாஷாணங்களையும் மூலிகை மருந்துகளையும், கசாயங்களையும் உருவாக்கி மக்களைத் தீராத நோய்களிலிருந்து காப்பாற்றியுள்ளனர். அவ்வகை மருத்துவ முறைகள் உடலுக்கு எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. நாடி அறிந்து நோயின் குணங்களைக் கண்டுபிடிப்பது சித்த மருத்துவத்தின் சிறப்பம்சமாகும். நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி தவப்பயிற்சியின் மூலமும் காயகல்ப பயிற்சிகள் மூலமும் வாழலாம் என்பது சித்த மருத்துவம் கூறும் கருத்தாகும்.

சித்த மருத்துவத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட மூலிகை மருந்துகளில் எவற்றை உண்ணவேண்டும், எவற்றைப் பூசவேண்டும் என்பதனையும், எந்த வேளையில் எந்த மருந்து வகைகளை உண்ணவேண்டும், எத்தனை நாட்கள் உண்ணவேண்டும். ஒரு வேளைக்கு எவ்வளவு உண்ண வேண்டும் என்பதனையும் சித்த புருஷர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஒடிந்துபோன எலும்பினை ஒட்ட வைக்கும் பச்சிலை வைத்தியத்தையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

இரும்பு, வெள்ளி, ஈயம் போன்ற உலோகங்களைப் பொன்னாக்கும் ரசவாதக் கலையில் சித்தர்கள் வல்லவர்கள் என்பது வாழையடி வாழையாக, செவிவழியாக, புராணங்கள் வாயிலாகக் கூறப்பட்டு வந்த வரலாறாகும். இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, தங்கம் முதலியவை தனித்தனி உலோகங்கள். அவை ஒவ்வொன்றும் இயற்கையானவை. ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்ற முடியாது. ஆனால் ஒரு உலோகத்துடன் மற்றொரு உலோகத்தையோ, பல உலோகங்களையோ கலந்து வெவ்வேறு உலோகங்களைப் போலக் காட்டலாம். தங்கமுலாம் பூசப்பட்ட நகைகள் வெளிப் பார்வைக்கு பவுண்போலக் காட்சிதரும். உரைத்துப் பார்த்தால் உண்மை நிலை விளங்கும். இவ் உண்மையை உணராதவர்கள் இதனை ரசவாத வித்தை என்று நம்பினர். இன்றும் நம்புகின்றனர். ஆனால் சித்தர்கள் கூறும் ரசவாதம் என்பது வேறு என்றே சித்தர்களின் நூல்களை ஆராய்ந்த அறிஞர்கள் கூறியுள்ளனர். ரசம் என்பது இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகள், வேர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டைகள், காய்கனிகள், தேன் போன்றவற்றை ஒன்றோடொன்று கலந்து ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனியான மருந்துகளை அறிந்து கூறப்பட்டதே ரசவாதமாகும். ரசம் என்றால் சாறு என்றும், வாதம் என்றால் நோய்களை எதிர்த்து வெல்லுதல் என்பதும் பொருளாகும். எந்தத் தீர்க்க முடியாத நோயையும் சித்த மருத்துவத்தின் மூலம் தீர்க்கப்படுதலே ரசவாதமாகும்.

உலோக வகைகள், உப்பு வகைகள், பாஷாண வகைகள், பூ வகைகள், முத்து பவளம் முதலிய கடல்படு திரவிய வகைகள், பிராணிகளின் உடம்பில் உற்பத்தியாகும் கோரோசனை, கஸ்தூரி ஆகிய அனைத்தையும் பற்றி ஆராய்ந்து அவற்றில் உள்ள மருத்துவ குணங்களையெல்லாம் சித்தர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

கர்ம வியாதி, தீர்க்கமுடியாத நோய். இவற்றை அனுபவித்தே தீரவேண்டும்; இதற்கு மருந்துகள் எதுவும் இல்லை என்று சிலர் கூறுவார்கள். சித்த வைத்தியத்தில் இவை எல்லாவற்றுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளது. சித்த வைத்தியத்தால் தீராத நோய் என எதுவும் இல்லை. சிறந்த கண் வைத்திய முறைகளும் சித்த வைத்தியத்தில் கூறப்பட்டுள்ளது. ஒடிந்த எலும்பை ஒட்ட வைக்கும் பச்சிலைகள் சித்த வைத்தியத்தில் உண்டு. முறிந்த எலும்பை வளர வைக்கும் பச்சிலைகளும் உண்டு.

யோக நூலாக, தத்துவ நூலாக, வாழ்க்கை நூலாகத் திகழும் திருமந்திரம் ஒரு வைத்திய நூலாகவும் மிளிர்கிறது. கர்ப்பக்கிரியை என்பது திருமந்திரத்தின் இரண்டாவது தந்திரத்தில் பதின்னான்காவது அதிகாரமாக உள்ளது. கர்ப்பம் என்பதற்கு கரு என்பது பொருள். கிரியை என்பதற்குச் செயல் என்பது பொருள். கருவை உருவாக்கி வெளிப்படுத்து கின்ற இறைவனது திருவருட் செயலைக் கரு உற்பத்தி என்ற அதிகாரத்தின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார். கருத் தோன்றுவதற்கு மூலகாரணன் இறைவன் எனக் கூறுகின்றார். ஆண் பெண் கூட்டுறவால் தோன்றுகின்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாகக் கருதி இன்புற்றுத் தாம் பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்த்துப் பெருமகிழ்ச்சி அடைகின்ற மக்கள் இவையெல்லாம் இறைவனின் திருவருட் செயல்கள் என்பதை உணரவேண்டும் என்கிறார். கருவிலே இருக்கின்றபோதும் அறிவு வெளிப்படாத நிலையிலும் இறைவனை எண்ணி இன்புறுதல் வேண்டும் என்ற தனது விருப்பத்தைக் கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன் என அப்பர் பெருமான் தனது தேவாரப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

இன்று மேற்கத்தைய மருத்துவ விஞ்ஞானத்தில் மகப்பேற்று மருத்துவ நிபுணர்களாகக் கடமையாற்றும் மருத்துவர்கள் கருவைக் காப்பதற்கும், கரு வராமல் தடுப்பதற்குமான ஆலோசனைகளைக் கூறுகின்றார்கள். ஆனால் சக்கரவர்த்தி தவராச யோகியாகிய திருமூலர் சிறந்த குழந்தைக்குரிய கரு தோன்றுவதற்கு வழி யாது என்பதையும், குறைபாடு உடைய குழந்தைக்குரிய கரு எவ்வாறு தோன்றுகிறது என்பதையும் திருமந்திரத்தின் ஊடாக விளக்கிக் கூறியுள்ளார். இவர் கூறிய கருத்துக்கள் இன்ப நுகர்ச்சியில் தலைப்படும் மக்களுக்குச் சிறந்த அறிவுரையாக விளங்குகின்றது. இன்பம் நுகரும் ஆண் பெண் இருவர்க்கும் மூச்சுக்காற்று ஒத்தியங்குமானால் குழந்தை அழகாகப் பிறக்கும். புணரும் காலத்தில் ஆண் பெண் இருவர்க் கும் உயிர்ப்புத் தடுமாறினால் பெண்ணுக்கு கரு உண்டாக வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமளமாயிடுங்
கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டது மில்லையாம் கோல் வளையாட்கே (திருமந்திரம் -483)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03) விந்து சக்தியே வீரிய சக்தி:**

உலகியலில் வாழும் மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். ஆசையை வெல்பவன் பூரண மனிதன் ஆகிறான் என்றே பகவத் கீதையும் கூறுகிறது. இறை அநுபூதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆசை தடையாக இருக்கிறது. ஆசைகள் அதிகரிக்க துன்பம் அதிகமாகும். ஆசையை விட்டால் பேரானந்தம் கிடைக்கும். மண் ஆசையால் அழிந்த துரியோதனனின் வரலாற்றையும், பெண் ஆசையால் அழிந்த இராவணனின் வரலாற்றையும், மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரண்டு இதிகாசங்களும் எடுத்து விளக்குகின்றன. பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகிய காமம் மிகவும் மோசமானது. காம இச்சை கொண்டு அலைபவர்களில் பலர் இளமையிலே முதுமைக் கோலத்தை அடைந்து விடுகின்றார்கள். காமப் பசி கொண்டவர்கள் பரத்தையர்களை நாடி அலைகிறார்கள். வீரிய சக்தியாகிய விந்து சக்தியை பாழுக்கு இறைக்கிறார்கள். இந்தக் கூடா ஒழுக்கத்தினால் கொடிய நோயாகிய "எயிட்ஸ்" போன்றவற்றுக்கு ஆளாகிறார்கள். சந்தக்கவி பாடிய அருணகிரிநாதர் இப்படியான சிங்காரிகளின் வலையில் விழாமல் தன்னைக் காத்தருள வேண்டுமென்று முருகப் பெருமானிடம் வேண்டுவதை

"சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்"

எனக் கந்தர் அநுபூதிப் பாடல் குறிப்பிடுகிறது.

விதை நெல்லைப் பாதுகாத்து வைத்து விதைத்தால்த்தான் விளைச்சலில் நல்ல அறுவடையைப் பெறமுடியும். இதேபோல விந்து சக்தியையும் வீணாக்காது பாதுகாத்துப் பயன்படுத்தினால்த்தான் நல்ல ஆரோக்கியமான சந்ததியை உருவாக்க முடியும். "விந்து விட்டவன் நொந்து கெட்டான்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழியும் ஆகும்.

விவசாயம் செய்பவனுக்கு விதை மிகவும் அவசியம். நல்ல விதையை நிலத்தில் விதைத்தால்த்தான் பயிர் செழித்து வளரும். விதை நெல்லைக் குத்திச் சோறாக்கி உண்பவன் விவசாயம் செய்வதன் பயனை அறியாதவன். வித்தை வறுத்துத் தின்பவனும் விதையின் பயனை அறியாதவனே ஆவான். பக்குவமானவன் விதையைக் குத்தி உண்ணாமல் உடல் முழுவதும் அதை விதைத்து விளைவின் பயனை அடைந்தவன் ஆவான். எனச் சித்த புருஷராகிய திருமூலர் கூறுகின்றார்.

வித்துக் குற்று உண்பான் விளைவு அறியாதவன்
வித்துக் குற்று உண்ணாமல் வித்துச்சுட்டு உண்பவன்
வித்துக் குற்று உண்பானில் வேறுஅலன் ஈற்றவன்
வித்துக் குற்று உண்ணாமல் வித்து வித்தான் அன்றே.

(திருமந்திரம்- 1964)

விந்து வீணே வெளிப்படாது காக்கத் தெரியாதவர்கள் வீணாக அழியும் விந்துவின் அளவை அறியமாட்டார்கள். வீணே அழியும் விந்தை வீணாக்காது தன்னுள் காத்து வைக்கும் தன்மையையும் இவர்கள் அறியமாட்டார்கள். இப்படி விந்து வீணாவதால் உடல் சோர்ந்து அழிகின்றவர்கள் தங்கள் உடலின் சோர்வுக்கும் அழிவுக்குமான காரணத்தையும் அறியாமல் தவிக்கிறார்கள்.

அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னை உள் காக்கலும் தேரார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிகின்ற காயத்து அழிந்து அயர்வுற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழியாரே

(திருமந்திரம் - 1936)

தாயின் கருவிலே குழந்தை உருவாகும் பொழுதே குழந்தையின் தலைவிதி தீர்மானிக்கப்படுகிறது. உடல் வளர்ச்சி மாத்திரமல்ல அறிவு வளர்ச்சியும் அங்கேயே உண்டாகிறது. சிசுவைத் தன் கர்ப்பத்திலே தாங்கியிருக்கும் தாயின் செயற்பாடுகள், எண்ணங்கள், விருப்பங்கள் யாவும் குழந்தையின் உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆணும் பெண்ணும் சற்புத்திரர்களைப் பெறுவதற்காக கூட வேண்டிய காலம் பற்றியும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆத்ம ஞானம் மிக்க சித்தர்கள் அக விசாரணை செய்யும் தன்மை உடையவர்கள். பெண்ணாசை கொண்டு மனம் அலைந்து திரிந்தால் விண்ணாசையாகிய முத்தியின்பம் கிடைக்காது என்று மனதிற்கு உபதேசம் செய்கின்றார் இடைக்காட்டுச் சித்தர்.

"பெண்ணாசையைக் கொண்டு பேணித் திரிந்தக்கால்
விண்ணாசை வைக்க விதி இலையே கல்மனமே"

"கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்" என்று மணிவாசகர் கூறுவதுபோல பொருள் மயக்கம் தரும் பொய்யான கல்வியினால் பயன் ஏதும் இல்லை. மெய்ப்பொருளாகிய இறைவனை அறியும் கல்வியே தேவை என்று மனதிற்கு உபதேசம் செய்யும் பின்வரும் பாடலை இடைக்காட்டுச் சித்தர் அருளியுள்ளார்.

"பொய்யான கல்வி கற்றுப் பொருள் மயக்கம் கொள்ளாமல்
மெய்ஞ்ஞானக் கல்வியினை விரும்புவாய் கல்மனமே"

பேய்க் குரங்கு போல உலகியல் இன்பங்களில் விருப்பம் கொண்டு நாய் நரிகள்போல அலைவதினால் பயன்கள் எதுவும் இல்லை என்கிறார்.

"பேய்க் குரங்கு போலப் பேருலகில் இச்சை வைத்து
நாய் நரிகள் போல் அலைந்தாய் நன்மையுண்டோ"

-இடைக்காட்டுச் சித்தர்-

(தொடரும்...

## சூரிய வணக்கம்

விரி கதிர்ச் செல்வனே விண்ணக வேந்தே
பரி பூரணரே பத்ம நாயகரே
பரி ஏழுடை தேரிலே பவனி வந்தே
பார் எலாம் ஒளி பாச்சும் ஒளி அரசே
சரணம் சரணம் நின் தாள் சரணம்
சகல உயிர்களின் சுருதியும் நீயே
அகில் உலகின் இயக்கமும் நீயே
திண்தோள் உழவர் மனமதில் நிறைந்தாயே
கண் கண்ட தெய்வமாய்க் காட்சி அளிப்பாயே
அக இருள் நீக்கிடுவாய் அறிவொளி ஏற்றிடுவாய்
திரிகரண சுத்தி அருளிடுவாய் காரிய சித்தியும் தந்திடுவாய்
மனுக் குலம் யாவும் மகிழ்வுடன் ஏத்தும்
மாண்புறு சூர்ய தேவனே நின்தாள் சரணம்

-திருமதி புனிதவதி சண்முகலிங்கம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டின் சாதனையாளர்
# மூ. நவரத்தினசாமி
# சன்னிதி முருகன் கொடுத்த வரம்

– சந்நிதியான் ஆச்சிரமம் –

இருபதாம் நூற்றாண்டில் தமிழன் பெருமையை உலகிலே நிலைநாட்டிய வீரர் நவரத்தினசாமி அவர்கள். யாழ் குடாநாட்டின் தென் பாகத்தில் சன்னிதி வேலவன் திருக்கருணை பரவிப் படர்ந்திருக்கின்ற தொண்டைமானாறு என்னும் ஊரிலே 1909ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திலும், மேல் படிப்பினை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்றார்.



கல்வி பயின்ற காலத்தில் வகுப்பாசிரியர் கூறிய தகவல் அவரது சிந்தனையைத் தூண்டியது. ஆங்கிலக் கால்வாயை ஒரு வெள்ளைக்காரர் நீந்திக் கடந்தார் என்பதே அந்தத் தகவலாகும். நம்மருகிலேயே உள்ள பாக்கு நீரிணையை ஒருநாள் நீந்திக் கடக்க வேண்டுமென்ற எண்ணம் மனதில் வேரூன்ற, காலை நேரங்களில் நீந்திப் பழகலானார். சன்னிதி முருகனின் அருட்கடாட்சம் அவர்மீது பொழிய நாளாந்தம் தமது பயிற்சியில் படிப்படியாக முன்னேற்றம் கண்டார்.

தமது 19ஆவது வயதில் பள்ளிப் படிப்பை முடித்த அவர், கமத்தொழிற் திணைக் களத்திற் கடமையிற் சேர்ந்தார். அயராத அவரது உழைப்பும் - விடா முயற்சியும்- புத்திக்கூர்மையும் - விவேகமும் கமத்தொழில் இலாகாவில் போஷகராகப் பதவி உயர்வு பெற வழிவகுத்தது.

நவரத்தினசாமி அன்புடன் நேசித்து வந்த அருமை மனைவி நோய்வாய்ப்பட்டு சிவபதமடைந்த சம்பவம் பெருந்துயரினை ஏற்படுத்தியபோதும் துவண்டு போகாமல் தனது இலட்சியத்தில் உறுதியாகவிருந்தார்.

பாக்கு நீரிணையின் நீளம் $31^1/_2$ மைல். வல்வெட்டித்துறை துறைமுகத்தில் பெருந்திரளான மக்கள் வந்திருந்து வாழ்த்தி வழியனுப்பி வைக்க 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ஆம் திகதி தனது நீச்சல் சாதனையை நிறைவு செய்ய எண்ணி கடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கினார். விபரமறியாத வயதிலும் அவரது மூன்று குழந்தைகளும் தந்தையின் கனவு நிறைவேற சன்னிதி முருகனைப் பிரார்த்தித்து நின்றனர். இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாக வருகை தந்திருந்த பாராளுமன்ற பிரதிநிதி திரு வி. நல்லையா அவர்கள் வழியனுப்ப மேற்குறித்த நாளில் பிற்பகல் 2.30 மணிக்கு நீச்சலை ஆரம்பித்தார்.

அவரது உடல் நலத்தினைக் கவனிக்க சுகாதார அதிகாரியும், பாதுகாப்பிற்காக பொலிஸ் பகுதியினரும், உற்சாகமூட்டுவதற்காக உறவினரும் - அன்பர்களும் மோட்டார் படகுகளிலும் கட்டுமரங்களிலும் ஏறி அவரைப் பின்தொடர்ந்தனர். கடலின் கொந்தளிப்பினையும் நீரோட்டங்களையும் சமாளித்து ஆழியில் முன்னேறிச் சென்ற வீரன் நவரத்தினசாமி $23^1/_2$ மணிநேர நீச்சலின்பின் கடலில் ஏற்பட்ட நீரோட்டத்தைச் சமாளிக்க முடியாமல் தமது முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

தாம் கூறிய வார்த்தைகளை நிறைவேற்ற எண்ணிய மறத்தமிழன் நவரத்தினசாமி, 1954 பங்குனி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.10க்கு மீண்டும் கடலில் இறங்கினார். நீச்சல் ஆரம்பித்த நேரம் முதல் ஓய்வில்லாமல் நீந்திச் சென்று பாக்குநீரிணையைக் கடந்து வெள்ளிக்கிழமை இரவு 7. 00 மணிக்கு தமிழகத்தின் கோடிக் கரையில் வெற்றியுடன் கால் பதித்தார்.

வெற்றிச் சாதனை படைத்த வீரன் நவரத்தினசாமியை வரவேற்க வல்வெட்டித்துறை கடற்கரையில் பல்லாயிரம் மக்கள் காத்திருந்தனர். சாதனை வீரனை வரவேற்க வல்வை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. இவரை ஏற்றி வந்த படகு கரையை அண்மித்ததும் வெற்றித் திருமகனை கோஷமிட்டு மக்கள் வரவேற்றனர். பருத்தித்துறை, சாவகச்சேரியின் பாராளுமன்ற பிரதிநிதிகள், இந்தியத் தூதுவர் திரு வி. நல்லையா, டாக்டர் N.M. பெரேரா, யாழ் நகர மேயர் ஆகியோர் அவரை வரவேற்க வெற்றிவிழா சிறப்பாக நடந்தேறியது.

மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணியாரின் இலங்கை விஜயத்தின்போதும் வீரன் நவரத்தினசாமி அறிமுகப்படுத்தப்பட்டது பெருமைக்குரியதாகும்.

நீச்சல் வீரர் நவரத்தினசாமியின் சாதனையானது வடமராட்சிக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்குமே பெருமை சேர்த்த ஒரு சாதனையாகும். குறிப்பாக நம் இனம் தலைநிமிர்ந்து நின்ற நன்னாள் அன்றாகும். இத்தகைய சாதனையாளர் இன்று நம்மோடு இல்லையாயினும் அவரது ஞாபகார்த்தமாக 25.03.2015 தொண்டைமானாறு மண்ணில் நடைபெற்ற அவரது உருவச்சிலை நிறுவும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் சன்னிதி வேல்வனின் அருள் கிடைக்கவேண்டும் என்னும் பிரார்த்தனையோடு நிறைவு செய்கின்றோம்.

## ஆறுதல்கள் தரும் ஆறுமுகன்

ஆற்றுகை ஆற்றுப்படுத்தல் எண்ணங்களின்
வடிகால் வடிவாக நீங்களும் எழுதலாம் ஞானச்சுடரில்
ஆறுதல் தருவான் ஆறுமுகன், வீணான பொழுது
போக்கு பழக்கவழக்கங்கள் நீங்கும், நீங்களும்
ஆற்றங்கரையானைப் பாடியும் போற்றியும்
முடிந்தவைகளைக் கூறியும் மகிழலாம்
ஏற்று முருகன் மோகனதாஸ் சுவாமி மூலம்
உங்களைப் பாராட்டியும் கௌரவிப்பான்

-ஜெயகேமலதா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! வழியில் நின்று ஆசீர்வதித்து அனுப்பிய அண்ணனின் அரிய நினைவுகளை ஏந்திய வண்ணம் வாகனத்தில் உள்ளோர் தங்கள் தங்கள் மனநிலைகளுக்கேற்ற வண்ணம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு பயணம் தொடர்கிறது. அதேவேளை அந்நாட்களில் மலையகம் எங்கும் மழை பெய்து கொண்டிருந்தது. இதனால் முன்னைய பட்டறிவு உள்ள பலர் மாணிக்க கங்கையில் நீர் உக்கிரமாகப் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும், தண்ணீரும் படு குளிராக இருக்கும் என்று தம் கற்பனையில் உதித்ததையும் உதிர்த்த வண்ணம் வந்தார்கள். அடியார்களே மாசிமாதப் பனிக் குளிரையே தாங்காத உடம்புக்காரன் நான். அக்காலங்களில் அதிகாலையில் பல்லோடு பல்லடித்து குலைப்பனில் மூழ்கி வருந்தும் உடல்வாகு எளியேனுக்கு. இச்சந்தர்ப்பத்தில் மாணிக்க கங்கையில் முழுகத்தான் வேண்டுமா? சும்மா ஓர் (Dry Wash) அதாவது கால் முகங் கழுவி பூசையைப் பார்க்கலாந்தானே என்று ஓர் முடிவுடனே நான் தயாராகிக் கொண்டிருந்தேன்.

ஆனால் அங்கு சென்றோம். கண்டோம் காட்சி இதோ அது. இவர்கள் பிரஸ்தாபித்தது போல பெரிதாக நீர் ஓடவும் இல்லை. பெரு வெள்ளமும் இல்லை. கடும் குளிரும் இல்லை. வழமையிலும் பார்க்க சிறிது கூடுதலாக சிலு சிலுப்புடன் ஆறு ஓடுகிறது. களைந்தோம் உடுப்புகளை. குளிக்கும் உடுப்புக்களுடன் இறங்கினோம். கவனமாக அப்புனித கங்கையில். என்னே அற்புதம்! நீர் மிகவும் ஜில்லென்று உடலுக்கு இதமாக இருந்தது. அப்பொழுதுதான் முதன்முறையாக வந்திருந்த அடியவரும் அற்புதம், அற்புதம் பாருங்கள் பெரு வெள்ளமும் இல்லை, பெருங் குளிரும் இல்லை எமக்காகவே வேலன் எல்லாவற்றையும் அமைத்து எதிர்பாராத விதமாக அழைத்து ஆனந்திக்க வைத்துள்ளான் என்று பக்திப் பரவசமுற்றவண்ணம் நீராடிக் கொண்டிருந்தார். மிகவும் தெய்வீகமான அந்நீராடலை முடித்தபின் விநாயக வணக்கத்திற்காகச் சென்றோம். சிலர் அர்ச்சனைப் பொருட்களை வாங்கி அர்ச்சனையில் ஈடுபட்டனர். சிலர் வேண்டுதலுக்காக நெய்த்தீபமேற்றி விநாயகனைச் சுற்றி வலம்வந்து வேண்டுதலை நிறைவேற்றினர். பிற்பாடு மதிய உணவிற்காக தெய்வானை அம்மன் மடத்திற்குச் சென்றோம். அவர்களும் எங்களுக்காகவே காத்திருந்தனர். அங்கே பாரிய புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்றவண்ணமிருந்தது. நாம் சென்ற முறை வந்தபொழுது காணப்பட்ட திருமடம் இன்றில்லை. அது இடிக்கப்பட்டு அந்த இடத்தில் மாடி மடங்களுக்காக அத்திவார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தவண்ணம் இருந்தது. ஆனாலும் மிகவும் கச்சிதமாக அடக்கமாக நவீன பாணியில் மேசை கதிரையில் இருந்து சாப்பிடக் கூடியதாக ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. ஏறக்குறைய 4.00-4.30 மணியளவில் எமது மதியச் சாப்பாடு. அன்பான உபசரிப்பு. வயிறார உண்டோம். பூசைகள் 7.00 மணிக்குத்தான் என்று தெரிவித்தனர். எனவே சிலர் யாத்திரிகர் மடத்திற்குச் சென்று ஓய்வெடுக்க முற்பட்டனர். நானும் ஒரு சிலரும் தெற்குப் புற நீளமான விறாந்தைபோல நீண்டிருந்த அப்பகுதியில் அமர்ந்து இங்கே இளைப்பாற முடிவெடுத்தோம். மற்றவர்கள் யாத்திரிகர் மடத்திற்குச் சென்று விட்டனர். இங்கே நாம் இருந்த கூட்டத்தில் முதன்முறையாக கதிர்காமத்தானின் மண்ணில் கால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்க வந்திருந்த அடியவரும் வந்திருந்தார். அவர் தாம் செவிவழியாகக் கேட்ட செய்தி களையும் ஏனையோர் தாம் கண்டு ரசித்துச் சுவைத்த செய்திகளையும் கந்தனின் கருணை யினையும் ஒருவர் சொல்ல மற்றவர் கேட்டு ரசித்து பக்தியில் திளைத்துக் கொண்டிருக்க இந்தப் புதியவரையே நோக்கி வந்ததுபோல ஓர் அடியவர் தட்டு நிறைந்த அர்ச்சனைப் பிரசாதத்தைக் கொண்டுவந்து நீட்டி எல்லோ ரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று கொடுத்து தட்டிற்காகக் காத்து நின்றார். பொங்கல் உட்பட அப்பிள், வெட்டிய அன்னாசி, கெக் கரிக் கீறல்கள், வாழைப்பழ இனங்கள் அத்தனையும் அமிர்தமென நாம் அனைவரும் வாங்கிப் பகிர்ந்து உண்டோம். சிலர் வீடு களிற்கும் கொண்டுசெல்ல பத்திரப்படுத்தினர். உண்மையில் அவர் அடைந்த ஆனந்தப் பரவசநிலையை எப்படி எழுதுவது. என்னே முருகனின் கருணை. அவன் அருளின் அழகு, என்னையே தேடிவந்து அடியவருடாக தந் தானே என் முருகன் என்று திரும்பத் திரும்பச் சொல்லி மகிழ்ந்தார் அவர். அவர்கள் வரநேர மிருக்கு எனவே மாஸ்ரர் எங்களுக்குப் பஜனை சொல்லித் தாருங்கள். நாங்களும் படித்துப் பழக வாய்ப்பாகவும் இருக்கும். பொழுதும் அவப்பொழுதாகாது தவப்பொழுதாக இருக் கும் என்று பாடுவதற்கு எல்லோரும் தயாராகி னர். அடியேனும் நல்லூரான், கதிர்காமத்தான், சன்னிதியான் எல்லோரையும் ஒருசேர அழைத் ததுடன் அன்னை நயினை நாகபூசணியை அங்கு அழைத்து மிக ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருக்கிறோம். நேரம் போனதே தெரியவில்லை. யாத்திரிகர் விடுதிக்குச் சென்றவர்கள் வந்துவிட்டனர். பூசைக்கும் நேர மாகிவிட்டது. வழமையாக கண்டோம் கதிர் காமத்தில் கூறிய அந்த ஆரம்பத்தில் குறிப் பிட்டபடி அதி அற்புதப் பூசையில் அனை வரும் பங்குபற்றிப் பக்தியில் திளைத்து பிரசாதமும் பெற்று பூசையை நிறைவு செய்து யாழ் நோக்கிய எமது பயணம் தொடர்ந்தது. மறுநாட்காலை எட்டுமணியளவில் அனை வரும் இனிதாக எம் சன்னிதியானின் சந்நிதியை வந்தடைந்தோம். இம்முறை நாம் மலை ஏற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அடியார்களே எனது முதற் பயணத் தொடரையே "கண்டோம் கதிர்காமம்" என எழுத வைத்த அழகன் இப்போ இத்தலைப் பிலேயே மீண்டும் ஒருமுறை அழைத்து என்னையும்வேறு சிலரையும் தன்னைக் காண வைத்த பெருந்திறத்துடன் இத்தொடரூடாய் மலையகத்திலும் ஏன் கிழக்கு மாகாணத் திலும் தான் உடனிருந்து அருளாடல் புரியும் அறப்பணி நிலையமாம் இச்சந்நிதியான் ஆச்சிரமம் ஊடாக தன் உறவுகளான அடிய வர்களின் கல்விப் பசிக்கு பெருந்தீனியாக விளங்குகின்ற காட்சிகளையும் இங்கே காட்டு கிறான் வாருங்கள் தொடர்ந்து காண்போம்.

சுவாமிகள் அன்று அந்த மலையக சேவையின்பொழுது வாக்களித்தபடி மாதத் தின் ஒருமுறை இரு நாட்களிற்கு எமது சேவையினை மலையகத்திற்கும், கிழக்கிற் கும் வழங்கவிருக்கிறோம் என்பதற்கிணங்க 16.01.2015 வெள்ளி இரவு 9.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் தலைமை யில் சைவ மகா சபை உறுப்பினர்களுடன் இம்முறை கிழக்கு மாகாணத்தினூடாகச் செல்வதற்கு ஆயத்தமாகினோம். இம்முறை மிகவும் அவசர தேவை கருதி சமனப்பிட்டி அன்னை ஸ்ரீ சாரதா அறநெறிப் பாடசாலை யினர் ஒரு கோரிக்கையை முன் வைத்திருந் தனர். அவர்களையும் அம்பாறை கோமாரி அறநெறிப் பாடசாலைகள் தம்பிலுவில் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடக் கும் சிவதீட்சை வைபவம் என்பவற்றை மைய மாகக் கொண்டு எமது பயணம் ஆரம்ப மாகியது.

வழமைபோன்று வவுனியா கோயிற் குளம் சிவன் கோவில் வளாக மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு தங்கி அதிகாலை ஐந்து மணியளவில் பொலநறுவை மன்னம்பிட்டி, சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களைக் கண்டு அவர்களுக்குரிய கல்விச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்கும் பொருட்டு செல்கிறோம். சரியாக 10.00 மணிக்கு சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலையை அடைந்தோம். அவர்களின் சில பிரதிநிதிகள் சமனப்பிட்டி பிரதான சந்தியில் வந்து நின்று எம்மை அழைத்துச் சென்றனர். பொலநறுவை மட்டக் களப்பு பிரதான சாலையிலிருந்து ஏறக் குறைய 7-8 km தூரத்தில் ஓர் கிராமத்தில் இவர்களது இருப்பிடம் அமைந்துள்ளது. அற நெறிப் பாடசாலை ஒன்றிற்குச் செல்கிறோம் என்றவுடனே எம்போன்ற கல்விச் சேவையில் ஈடுபட்டவர்கள் மதிப்பீட்டில் ஏதாவது ஒரு சிறு மண்டபத்திலாவது இப்பள்ளி அமைந் திருக்கும் என்று நினைப்பது வழமையே.

வரவேற்றார்கள் பார்த்தோம் பாருங் கள் 150-200 சிறார்கள் மஞ்சள் நிறச் சீருடைச் சிட்டுக்களாக சிறுமிகள். நஷனல் முழுக்கை நீளக் காற்சட்டையுடன் (பட்டு) மிகமிக அருமையான நேர்த்தியான சீருடையில் சிறுவர்கள். என்னே அற்புத ஒழுங்கமைப்பு. பாடசாலை அதிபர் மிகமிகத் தகுதியான வராகவும் உதவி ஆசிரியைகள் எமது ஆசிரிய கலாசாலை பயிற்சி ஆசிரியர்களை யும் விஞ்சும்வண்ணம் நடை உடை பாவனை உபசரிப்பு கற்பித்தல் அளவளாவல் என்ப வற்றில் சிறந்து காணப்பட்டமையை ஓர் சிறு மணிநேர உற்றுநோக்கலில் உணர முடிந் தது. இத்தனைக்கும் என்னே கொடுமை இவர்கள் அமர்ந்து படிக்க எதுவித கதிரை மேசையோ எதுவித கட்டிட வசதியோ இருக்கவில்லை. மேலே ஆகாயமே கூரை. கீழே பூமியே இருக்கை. ஆக இவர்கள் செய்த புண்ணியம் என்னவெனில் பச்சைப் பசேலென்ற பரந்து விரிந்து பெருங் கூடாரம் போல தம் குஞ்சுகளிற்கு நிழல் வழங்கிய அப்பெரு ஆலமரம். அதுகூட அங்கே அரை யும் குறையுமாக அமைக்கப்பட்டுக் கொண் டிருக்கும் அன்னை முத்துமாரி அம்பாளின் தலவிருட்சம் என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அன்னை நிழல் கொடுத்த அன்புக் குழந்தைகள் தரையில் அமர்ந்து அவர்கள் சாதித்த சாதனைகளை அவர்கள் பட்டியலிட் டார்கள் பார்த்தோம். அதிசயித்தோம். பெரு மண்டபங்கள், இருக்கைகள் மின்சாரம் இல்லை. ஆனால் இங்குள்ள அறநெறிப் பாட சாலைகள் மாணவர்களோ.... இல்லை. ஒழுங்காக வருவதில்லை, ஒழுங்காக நடாத்த எம்மவர்கள் இங்கே படும்பாட்டை நன்கு அறிந்தவன் இவன். அதோடு ஒப்பிடுகையில் இவ் ஏழைப் பிள்ளைகளின் சாதனைகளை யும் அவர்கள் எத்தகு சூழலில் வேதனை களை அனுபவித்து கற்கிறார்கள் என்பதை யும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அந்த மரமும் அந்த ஆலயச் சூழலும் அங்கே பிள்ளைகள் நாங்கள் அமர்ந்திருக்கும் காட்சி 205ஆவது ஞானச்சுடர் பக்கம் 36-37 மிகத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. ஏன் 35ஆம் பக்கத்திற்கூட அச்சிறார்கள் அவர் களுக்கேயுரிய ஓர் தனித்துவமான அறநெறிக் கீதத்தை ஓதிக்கொண்டிருப்பதையும் காண முடியும். இந்த ஆலமரந்தரும் நிழற்பரப்பு ஏறக்குறைய 1- 2 பரப்பு காணிக்குச் சமனாக இருந்தது. இம்மர நிழற்குடையின் கீழ் மரங்கள் விரிந்து பெற்றோர் உற்றோர் பிள்ளைகள் உடனிருந்து எம்மைச் சேகரித்த (பெற்ற தற்காலிக) கதிரைகளில் அமர்த்தி அருட் திருமுறை பாடசாலைக் கீதங்களுடன் கூட்டத்தை ஆரம்பித்து அதன் அதிபர் திரு சுதாகரன் (கல்வியியற் கல்லூரி பயிற்சி ஆசிரிய மாணவன்) அளித்த தலைமையுரை யின் தரம் சமர்ப்பித்த விதம் எங்கள் அனை வரினது மனத்தையும் தொட்டதுடன் நெகிழ வைத்தது. தரம் 2 தொடக்கம் A/L வரை யான 190 மாணவர்கள் வந்து இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் மொத்தம் 210 மாணவர்கள் கற்கிறார்கள். இவர்களிற்கு பிரத்தியேக வகுப்புகள் எதுவும் இல்லையாம். முழுக்க முழுக்க பாடசாலைக் கல்வியை (யாழ்ப்பாணத்து மாணவர்கள் 1950-60களில் இருந்த நிலையில்) நம்பியிருக்கிறார்கள். நகரத்திற்குச் செல்ல 7-8km செல்ல வேண்டும். அதுவும் பெரும்பான்மைச் சகோதரர்களின் சூழல். இவை இவர்களது வறுமைக் கல்வி நிலையைக் காட்டப்போதும் என்று நினைக்கிறேன். அது மட்டுமல்ல இவர்கள் சுவாமிகளிடம் ஞானச்சுடரினை வாசித்ததன்மூலம் தங்கள் நிலையை விபரித்த கடிதம் ஒன்று இங்கு எம்மைப் போக வைத்தது.

அங்கே ஒரு பிள்ளை சொல்கிறாள் மிகவும் சுத்தமான செந்தமிழ்ச் சொற்களில் கண்டோம் கதிர்காமத் தொடரைத் தான் தொடர்ந்து வாசிப்பதாகவும் அத்தொடர் தம்மை ஒருநாளும் அங்கு செல்லாத நிலையிலும் நேரடியாகத் தரிசிக்க வைப்பதுபோன்ற வசன நடைகள் இருந்ததாகவும் நெக்குருகிப் பேசினார். அதனை எழுதிய இப்பேயனும் உடன் இருந்து இத்தொடர் வாசகர் மத்தியில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியது ஏற்படுத்துகிறது வாடா பாரடா கேளடா என்று அந்தக் கந்தன் காட்டிய காட்சிகள் இவை. என் மனநிலை எப்படி இருந்திருக்கும். உடனிருந்தவர்கள் உணர்ந்தனர். உடனே அப்பிள்ளையைப் பாராட்டி ஆசீரவதித்து அவளை மென்மேலும் வளரச் செய்யடா ஆற்றங்கரையா என அழுது வேண்டிய அக்கணங்கள் நிகழ்காலத்திருவருளின் கண்கண்ட சாட்சியமாகும். அதுமட்டுமல்ல அவர்கள் பாடிய கீதத்தில் மாணவரே காது கொடுத்துக் கேளுங்கள். வீணவாவை கொஞ்சம் தள்ளி வையுங்கள் என்ற பல்லவியோடு மது ஒழிப்பு, கலாசார விழுமியங்கள், சமூக விழுமியங்கள், பெற்றோர் ஆசிரியரை மதித்து ஒழுகுதல் என்பவை அடங்கிய ஓர் அரும் இசைக் கொத்தாக இருப்பதை உங்களுக்கு இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

அவர்கள் 110 கூரைத் தகடுகள் (சீற்) தங்கள் உடனடித் தேவையாக இருப்பதை சுவாமிகளிடம் சுட்டிக்காட்டினார்கள். தொடர்ந்து சபையோர் தமது கருத்துக்களைப் பகிர்ந்து பிள்ளைகளை ஆசீர்வதித்தவேளை ஆச்சிரம சுவாமிகள்...

(காட்சி தொடரும்...

## பசுவின் பால்

உயிர்களைக் கொல்வது பெரும் பாவம். கொன்று அதனால் வருவது இறைச்சி, அதை உண்பது மாபெரும்பாவம். கொல்லாமை, புலால் உண்ணாமை என்னும் இரு அதிகாரங்களை வள்ளுவப் பெருமான் இதன் கொடுமையை விபரித்துள்ளார்.

கறக்கிற பாலைப் பருகுவது குற்றமில்லை. அது அசைவ உணவு ஆகாது. பால் கறக்கவில்லையானால் பசுவிற்கு துன்பம், கன்றுக்கு இரு மடிகளை விட்டு மற்ற இரு மடிகளில் இருந்து பால் கறக்க வேண்டும்.

பசுவின் பால் புனிதமானது. சத்துவ குணத்தை தரவல்லது. "பாலுந் தெளிதேனும், பாகும் பருப்புமிவை நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்"

என்று ஔவைப் பிராட்டியார் விநாயகரைக் குறித்துப் பாடிய பாடலில் அறிக.

-ஆர்.வீ. கந்தசாமி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பரும் ஆளுடைய பிள்ளையாரும்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

பூவும் நீரும் கொண்டு சிவன் கழல் பேணும் நெறி சைவம் எனப்படும். சைவம் சிவசம்பந்தமுடையது. சைவ சமயத்தை வளர்த்தவர்களும் பாதுகாத்தவர்களும் சமய குரவர்களாவர். இவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என நால்வர். முதல் மூவரும் தேவார முதலிகள். திருவாசகமும் திருக்கோவையும் அருளியவர் மாணிக்கவாசகர். இவை எட்டுத் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர்களுள் அப்பர் என்றழைக்கப்படும் திருநாவுக்கரசு நாயனாரொடு ஆளுடைய பிள்ளையார் எனும் திருஞானசம்பந்த நாயனார் ஏற்படுத்திய தொடர்பு பற்றி அலசுதலே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணத்தின் திருநின்ற சுருக்கத்தில்

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன்!

என்று திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர் தில்லை வாழ் அந்தணர் கூட்டத்துக் அடிமையான வரலாற்றின்மூலம் வெளிப்படுத்துகின்றார். அப்பர் என்றழைக்கப்படும் திருநாவுக்கரசரின் பிள்ளைத் திருநாமம் மருநீக்கியார் என்பதாகும். புற இருளை நீக்கவரும் கதிரவன் போன்று அகத்திருள் நீக்குபவர் என்னும் பொருளுடைத்தாம்.

சமய நல்ல வழி கண்டுணர்வதற்கு நம்பரான சிவபெருமான் அருளாமையால் பாடலி புரமேகிச் சமணப்பள்ளியில் சேர்ந்து சமண நூல்களைக் கற்றுத் தருமசேனர் எனும் உயரிய விருது பெற்றார். அவநெறிப் புகுந்த தம்பி பற்றிக் கவலை கொண்ட தவநெறியம்மையாய திலகவதியார் கவலையை நீக்குவதற்காய் இறைவனிடம் முறையிட்டார். அதன்படி தருமசேனரை சிவசமயத்துள் திருப்பும் நோக்கில் சூலை நோயைப் புகுத்தியருளினார்.

சமணரால் கைவிடப்பட்ட நிலையில் முன்னூழ் முடிவுற வீரட்டானம் விரைந்து வந்து சகோதரியின் பாதம் தொழலும் அவர் தந்த திருவெண்ணீறு பூசி ஆலயம் அடைந்து "கூற்றாயினவாறு..." எனத் தொடங்கும் பதிகம் பாடி நோய் நீங்கப்பெற்றதுவும் அதன்மூலம் சமணரால் பட்ட துன்பங்களும் யாவரும் அறிந்தவையே. ஆனால் தேவாரங்கள் முழுமைக்கும் முதன்மையான பதிகம் "கூற்றாயினவாறு"தான் என்பது பலருக்குத் தெரியாதிருக்கலாம். அப்பர் பெருமான் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த காலம் 81 அகவைகளாகும். கோவில் தோறும் தேவாரம் பாடுதலும் உளவாரத் தொண்டு புரிதலும் செய்தவர். திருத்தாண்டகம் பாடியதன்மூலம் தாண்டக வேந்தர் எனப் போற்றப்படுபவர். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கியவர். பெண்ணாசையற்ற தன்மையை உணர்த்த விரும்பிய இறைவனால் ஏவப்பெற்ற தேவமாதரிடம் நீங்கள் வீணே அலையாதீர்; நான் திருவாரூர் அம்மானுக்காளானேன் எனலும் தேவமாதர் அகன்றனர். இறைவனுக்கன்றி வேறெவர்க்கும் பணியாதவர்.

ஆளுடைய பிள்ளையார் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர் மண்ணுலகில் 16 ஆண்டுகள் மட்டும் வாழ்ந்தவர். பாலறா வாயர், ஞானசம்பந்தர் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையராய சிவபாத இருதயருடன் சேர்ந்து செல்கிறார். குளத்தருகு இருத்திவிட்டு நீருள் மூழ்கியவரை நெடுநேரம் காணாமையால் முன்னை வினைப் பயன் மிகுந்தெழ

"கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்களாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனி வாய்மணி அதரம்பு டைதுடிப்ப
எண்ணில் மறைஒலி பெருக எவ்வுயிரும் குதூகலிக்கப்
புணியக்கன்றனையவர் தாம் பொருமிறு முதருளினார்"

திருஞானசம்பந்த புராணம்- 42

"வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

என்று சேக்கிழார் நாயனார் சம்பந்தரது செயற்கரும் செயல்களைப் பெரியபுராணத்தில் விபரிக்கிறார். அவரது வாய் புனிதவாய். அது மலர்ந்தமையால் சைவசமயம் மலர்ந்து வாடா மலராகி நிலைத்தது. சமணமும் புத்தமும் மறைந்தன. புனிதவாய் மலர்ந்து அழுத அழுகை சைவ உலகு உய்ய வந்த அழுகை.

அப்பரும் சம்பந்தரும் தனித்தனியே தலயாத்திரை செய்து வரும்போது இணைந்து கொண்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இருவரும் சேர்ந்து 52 தலங்களிலும், சம்பந்தர் 110 கோவில்களிலும், அப்பர் 28 ஆலயங்களிலும் பதிகங்கள் பாடியுள்ளதாக அறியமுடிகிறது.

வேதாரணியம் எனப்படும் திருமறைக் காட்டிலே வேதங்களால் பூட்டப்பட்டிருந்த கதவு திறக்கப்பட்டு உள்ளே சென்று வழிபடும் நோக்கில் "பண்ணினேர் மொழியாள்..." என்ற பாடலைத் தொடர்ந்து பத்துப் பதிகங்கள் பாடியும் கதவு திறவாமை கண்டு வருந்திய நாவரசர் "எண்ணீர் இரக்கம் ஒன்றிலீர்..." எனப் பாடியதும் கதவு திறந்தது. மகிழ்ந்த இருவரும் உள்ளே சென்று வழிபட்டு வெளியே வந்தனர். கதவு மூடுமாறு ஞானசம்பந்தர் "சதுரம் மறைதான்" எனும் பதிகத்தைப் பாட முதல் பாடலிலேயே கதவு மூடியபோதிலும் பதிகம் முழுவதையும் பாடி முடித்தார். அன்று முதல் கதவு திறக்கவும் மூடவும் அருள் பாலித்தது. ஆயினும் தாம் பத்துப் பாடியும் கதவு திறவாதிருந்தமை நாவரசரை வேதனைப் படுத்தியது. அது அப்பர் பாடலின் இனிமையில் இறைவர் மூழ்கியிருந்தமையே காரணமாயது. சம்பந்தர் சிவிகையில் வரும்போது அதனைத் தாங்கும் பேறு பெற்றவர் அப்பராவர்.

பிறவி ஒரு நோய். அந்நோயை நீத்தவரே இறைவன் அடி சேர்வர். இதனையே திருவள்ளுவரும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேரா தார்" என்றார்.

குறள் எண் 10

இதையே,

"காயமும் மனமும் மாசு கழுவுதல் செய்யார் செய்யும்
மாயமும் இந்த நோயை வளர்ப்பதே வளர் வெண்டிங்கள்
மேயவேணியர் பால் ஞானம் பெற்றவர் விரும்பினோம்பில்
தீய இப்பிணியே யன்றிப் பிறவியும் தீருமென்றார்"

இதுவே உண்மை. இதன் மெய்ப் பொருளாகத் திகழ்ந்தவர்களே அப்பரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தருமாவர். அவர்கள் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று வாழ்ந்து காட்டியவர்கள். சிவனடியே சிந்திக்கும் அருள் பெருக்கும் சிவஞானம் கைவரப் பெற்றவர்கள். தவசீலர்களது பெருமைகளை நால்வர் நான்மணி பாடிய சிவப்பிரகாச முனிவர் தமது நூலில் மிக அழகாக விதந்தோதுகிறார்.

சம்பந்தர் சமணரை வாதில் வெல்லுதற்காகப் பாண்டி நாட்டுக்குப் புறப்படும்போது அவர்களின் சூழ்ச்சியினையும் கொடுமைகளையும் நன்கறிந்திருந்த அப்பர் "நீவிர் சிறுபிள்ளை; சமணரோ கொடிய வஞ்சகர். தற்போது கிரகங்களும் பகைக்கின்றன. எனவே செல்ல வேண்டாம்" என்று தடுத்தார். அதற்குச் சம்பந்தர் கோளறு பதிகம் பாடி மனதைத் தேற்றிப் பாண்டி நாடேகி அனல்வாது புனல் வாதுகள் செய்தும் வெப்புநோய் நீக்கித் திருநீற்றின் மகிமையை வெளிப்படுத்தியும் மன்னவனையும் மக்களோடு சமணரையும் சைவராக்கிய பெருமைகளை அறிவோம். இதன்மூலம் மங்கையர்க்கரசியாரின் தூய சைவப் பண்பை வெளிப்படுத்தித் திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெற வைத்தார். "குரவர்" என்ற சொல்லுக்குப் பாதுகாவலர் என்பது பொருள். சைவ சமயத்தைப் பாதுகாத்தமையால் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் சைவசமய குரவர் எனப் போற்றப்படுகிறார்கள்.

இறையருள் கொண்டு நால்வரும் நிகழ்த்தியுள்ள அற்புதங்கள் நாம் அறிந்தவையே. இவை பற்றிய பழம் பாடல்களும் உள்ளன.

ஞானசம்பந்தருடைய சமூகப் பணிகளுள் பிரதானமானது அவர் தொண்டர் குலமே தொழுகுலமென்பதற்கமைய அனைத்துச் சிவனடியார்களிடமும் அன்பு கொண்டு ஒழுகியமையே ஆகும். அவ்வாறே அப்பர் சுவாமிகளும் திருவிருத்தம் திருத்தாண்டகம் ஆகிய பாடல்களைப் பாடி உளவாரத் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்தவர். இவர் சைவ சமய வளர்ச்சிக்காகச் சமூகப்பணியாற்றிய அவரது வரலாற்றின்மூலம் அறியமுடியும். இவரது குருபூசைத் தினம் சித்திரைச் சதயமும் ஞானசம்பந்தரின் குருபூசை வைகாசி மூலமுமாகும்.

"பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல் போற்றி
ஆழி மிசை கல்மிதப்பில்
அமர்ந்த பிரான் அடிபோற்றி"

உலகத்திலே நீ இரு. ஆனால் உலகம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது. குடும்பத்தில் நீ இரு. ஆனால் குடும்பம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது. உலகமும் குடும்பமும் உள்ளத்தில் புகுந்தால் நீ அழிந்து விடுவாய். மனிதனாகிய உன்னில் உறையும் உத்தமனை அடைய நீ வந்தாய். அதை மற்றவருக்கு ஓர் உணர்ச்சி பெறும் பொருட்டே இறைவன் நரையைத் தந்தார். நீ இறைவனுடைய கருணையைப் பெற வேண்டுமானால் அதற்கு வழி உண்டு. அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று. துன்பமுற்றுத் துடிக்கின்ற உயிர்களிடம் நீ கருணை செய். அவற்றின் துன்பத்தை நீக்கு. நீ பிற உயிர்களிடம் கருணை செய்தால் கடவுள் உன்னிடம் கருணை செய்வார். கருணையால் கருணையைப் பெறலாம். இதனை ஒருபொழுதும் மறவாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பாலாஜி கோவில் (லண்டன்)

– வல்வையூர் அப்பாண்ணா –

லண்டன் பர்மிங்ஹாம் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில், பர்மிங்ஹாம் City Centreஇல் இருந்து 5மைல் தூரத்தில், மேற்கு Midlands பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீ பாலாஜி கோவில். ஸ்ரீ நாராயணன் கோவில்களில் ஐரோப்பாவிலேயே மிகப் பெரியது இது. லண்டனில், எம்மவர்கள் கூடுதலாக வாழும் Tooting, Mitcham போன்ற இடங்களிலிருந்து M25, M40 வழியாக 145 மைல் தூரத்தில் உள்ளது ஸ்ரீ பாலாஜி கோவில். வேல்லப் கந்தவேல் ஆலயத்திலிருந்து வருபவர்கள் மூன்றரை மணி நேரத்தில் 177 மைல் கடந்தும் ஸ்ரீ பாலாஜியைத் தரிசிக்கலாம்.

இரண்டு ஏக்கர் வரை நிலப்பரப்புள்ள பரந்த பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது கோவில். கோவிலைச் சுற்றி பசுமையான புற்றரை. அடுத்து கோவிலைச் சுற்றிவர அகன்ற தார்வீதி. அதற்கும் வெளியே மீண்டும் புற்றரைப்பகுதி. கிழக்குப் பார்த்த கோவிலின் வலதுபுறம் சீமெந்து மேடையினாலான வாகனத் தரிப்பிடம். அந்த தரிப்பிடம்கூட அடையாளமிடப்பட்டு ஒரு ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. கோவில் பகுதி- வாகன தரிப்பிடம் தவிர்ந்த ஏனைய புற்றரைப் பகுதி முழுவதும் இடையிடையே நிழல் மரங்களை (பெரு விருட்சங்கள் அல்ல) ஒரு ஒழுங்கில் - நேர்த்தியாக நாட்டியுள்ளார்கள். மரங்கள் குடைபோன்று வளர்ந்து நிழல் பரப்பி நிற்கின்றன.

கோவில் வாசலுக்கு நேராக உள்ள நடைபாதை 5 அடுக்கு கொண்ட ஒரு கோபுரத்தை ஒத்ததான அழகான முகப்பு வாசலில் முடிகிறது. "முகப்பு வாசல்" என்பது நமது தூரத்துப் பார்வை. அதனை அண்மித்த பின்னர்தான் "முகப்பு வாசல்" என்பது ஒரு "குருக்கள் குடியிருப்பு என்பதைக் கண்டுகொள்ள முடிந்தது. வெளிப்புறப் பார்வைக்கு ஒரு முழுமையான கோபுரம் போன்ற தோற்றப்பாட்டைக் கொடுத்தாலும், தண்ணீர் இணைப்பு - மின் இணைப்பு- படி வரிசை ஆகியன கொண்ட இந்தக் குடியிருப்பில் பல குருக்கள் குடும்பங்கள் குடியிருக்கின்றனர்.

முகப்பு வாசல் தாண்டி நடைபாதையால் உள்ளே போனால் பரந்த அந்தப் பகுதியின் நடுவே (பல படிகள் மேலே) கம்பீரமாக உயர்ந்து நிற்கும் கோபுரத்தையும் கோவிலையும் பார்த்து பிரமித்து நிற்கிறோம். நமது இடது கைப்புறமாக, சுத்தமான நீர்கொண்டு நிரப்பப்பட்டுள்ள நீர்த்தடாகத்தின் நடுவே பாலாஜியின் சயன நிலையில் உள்ள சொரூபம் ஒரு பீடத்தின்மீது நீர் மட்டத்தில் உள்ளது. "நாணயம் உட்பட எதனையும் நீருள்ளே வீச வேண்டாம்" என்கிற அறிவிப்புப் பலகை அருகே இருந்தும்கூட தடாகத்து நீரினுள் வீசப்பட்டிருக்கும் நாணயக் குற்றிகள் தெளிந்த அந்நீரிற் துலாம்பரமாகத் தெரிகிறது. அருகே சற்றே தூரத்தில், தென்னிந்திய பாணியிலான "திருமண மண்டபம்" அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

நீர்த்தடாகத்தை அடுத்து உள்ளே கோவிலின் வலது பக்கமும் இடது பக்கமுமாக் தனித் தனிக் கோவில்கள் (சிறிய சந்நிதானங்களல்ல) கிழக்கு நோக்கியபடி உள்ளன. வலதுபுற கோவிலுக்கு சரி முன்பாக எட்டடி உயரம் வரையிலுள்ள கொடிமரம் சுத்தமாகச் செப்புக் கவசமிடப்பட்டு பளிச்சௌனக் காணப்படுகிறது. பரந்த மண்டபத்தினுள்ளே வலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாக ஸ்ரீ ஐயப்பனும் அடுத்து ஸ்ரீ துர்க்கையும் உள்ளனர். மண்டபத்தின் நீண்ட பகுதியையும், பின்புறமாகவுள்ள சிறிய பகுதியையும் பெரிய நீல நிறமான திரைச்சீலை பிரிக்கிறது. சில நிமிட நேர காத்திருப்பின் பின் சரியாக ஆறு மணிக்குத் திரை விலக, உள்ளே பெரிய லிங்க வடிவில் பரம்பொருள் காட்சி தருகிறார். அழகான மரவேலைப்பாடமைந்த தனிச் சந்நிதானத்தின் மையத்தில் லிங்கம் உள்ளது. லிங்கத்தின் பிரம்ம பாகம் சதுர வடிவிலும், மேலே ஆவுடையார் பாகம் வட்ட வடிவிலும், அதன் மேலே லிங்க பாகம் சற்று வித்தியாசமாகவும் காணப்பட்டது. வழமைபோன்று உருண்டையான - வழுவழுப்பான - அழுத்தமாக இல்லாமல் மேடுபள்ளமாகவும் ஒழுங்கான அமைப்பில்லாமலும் லிங்கபாகம் வித்தியாசமாக இருந்தது. அளவான அலங்காரமும், அமைதியான சூழலும் மனம் லயித்துக் கைகூப்பித் தொழ வைத்தது. மனம் ஒன்றித் தொழுகின்றோம்.

லிங்கத்தை வணங்கிக்கொண்டு விசாலமான சந்நிதானத்தைச் சுற்றிவர, அதனோடு இணைந்தபடி வடபுறமாக நாலடி உயர பீடத்தில் ஒரு சிறிய லிங்கம் காணப்படுகிறது. சிறிய சிவலிங்கம் அருகே, மிக மெலிந்த ஒரு தண்ணீர்க் குழாயும், ஒரு சிறிய செம்பும் காணப்படுகிறது. சிறிய பாத்திரங்களில் கொண்டுவரும் பாலை சிவலிங்கத்திற்கு அபிஷேகித்த பின்னர் அந்தச் சிறிய தண்ணீர் குழாயிலிருந்து தாங்கள் கொண்டுவந்த பாத்திரத்தில் நீரேந்தி இரண்டு மூன்று தடவைகள் அபிஷேகம் செய்கிறார்கள். நாமும் எமது கைகளால் அந்தக் கைங்கரியத்தை நிறைவு செய்து கொண்டோம்.

லிங்கம் உள்ள வலதுபுறக் கோவிலுக்குச் சமாந்தரமாக இடதுபுறமாக சீரடி பாபா சந்நிதி உள்ளது. இந்தச் சந்நிதிக்கு அருகே உள்ள கட்டிடம் "யாக மண்டபம்" எனப்படுகிறது. மண்டபத்தின் நாற்புறமும் திறந்தபடியுள்ள பெரிய வாசல்களும், மையத்தில் பெரிய யாக குண்டமும், சுற்றிவர சிறிய யாக குண்டங்களும் காணப்படுகின்றன. கோவிலில் அடிக்கடி நடைபெறுகின்ற பெரிய - சிறிய யாகங்கள் அனைத்தும் இந்த யாக மண்டபத்திலேயே நடைபெறுவதை அறிய முடிந்தது.

இப்போது நாம் வலமும் இடமுமாயுள்ள கோவில்களுக்கு நடுவேயுள்ள அகன்ற 10 படிக்கட்டுகளில் மேலேறி கோவில் முகப்பினை அண்மிக்கிறோம். வலது புறம், கணபதியின் சந்நிதானமும், இடது புறமாக வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானின் சந்நிதானமும் மிகத் தூய்மையாக அழகாக உள்ளது. இந்த இருபக்க சந்நிதானங்களின் பின்புறமாகக் கீழிறங்கும் படிக்கட்டுகள் அலுவலகத்திற்கும், மடைப்பள்ளிக்கும் வழிகாட்டுகின்றன. இந்த மடைப்பள்ளியிலேதான் ஸ்ரீ பாலாஜி கோவிலின் பிரபல்யமான லட்டு தயாராகிறது. இப்போது நாம் இன்னமும் பத்து படிகள் மேலேறிச் சென்று ஐந்து நிலைக் கோபுர வாசலுக்கு வருகிறோம். நாம் மேலே விபரித்த அமைப்பின்படி கீழ்த்தளத்தில் அலுவலகமும் - மடைப்பள்ளியும், மேற்தளத்தில் கோவிலும் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

அந்த ஐந்து நிலைக் கோபுரத்தில் பெருமளவு சிற்ப வேலைப்பாடுகள் காணப்படவில்லை. ஆயினும் கோபுரத்தின் நடுவேயுள்ள தடித்த மரத்தினாலான கதவுகள் இரண்டிலும் ஸ்ரீமத் நாராயண மூர்த்தியின் தசாவதாரக் காட்சிகள் அனைத்தும் அழகுறச் செதுக்கியுள்ளனர். கோபுர வாசல் கீழ் மட்டத்தில் உள்ள வெள்ளித் தகடு காலைநேர சூரிய ஒளியில் தகதகவென ஜொலிக்கிறது. லக்குமியும் - இருமருங்கும் யானைகளும் - செடி கொடிகளுமாக வெள்ளித்தகடு மின்னுகிறது. அதேபோல உட்புற மேல் முகப்பில் திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலின் சயனக் காட்சியினை அழகுற வெள்ளித்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தகட்டில் வடிவமைத்துள்ளார்கள். உயர்ந்த நடு மண்டபப் பகுதியினை நடுவேயுள்ள நான்கு உயர்ந்த தூண்களும், நான்கு சற்று உயரம் குறைந்த தூண்களும் தாங்கி நிற்கின்றன. இந்த எட்டுத் தூண்களும் அறுகோண அமைப்பில் செய்யப்பட்டு, அதற்கு மேலாக அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள மரப்பட்டங்களில் ஸ்ரீ நாராயணர், ஸ்ரீ ஆஞ்சநேயர், லக்குமி ஆகியோரின் பல்வேறு தோற்றங்கள் உள்ளன. கலைப் பொக்கிஷமாகவுள்ள ஒவ்வொரு தூணின் அழகையும் கண்கொட்டாமல் பார்த்து மெய்மறந்து ரசித்தோம்.

கருவறையின் வாசலில் இருபுறமும் உள்ள வாயில் காப்போர் ஸ்ரீ நாராயணரின் ரூபத்திலேயே உள்ளனர். உள்ளே கருவறையில் சுமார் ஆறடிவரை உயரம்கொண்ட ஸ்ரீ பாலாஜி அருள் பாலிக்கிறார். உயரத்திற்கேற்றபடியான நிறைந்த அலங்காரமும், வரிசைக் கிரமமாக நடைபெற்ற தீபாராதனைகளும் கண்டு மெய்மறந்து நிற்கிறோம். மனம் லயித்துக் கைகூப்பித் தொழுத பின்னர் அர்ச்சனையை நிறைவு செய்துகொண்டு பிரகாரத்தினை வலம் வருகிறோம். பிரகாரத்தின் தென்புற ஆரம்பத்திலேயே ஒரு தட்டத்தில் வைக்கப்பட்டிருந்த கற்கண்டினை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள அருகே நின்றிருந்த அந்தணர் துளசித் தீர்த்தம் தருகிறார். இன்னொரு அர்ச்சகர் "சடாரி" வைக்கிறார். (விஷ்ணு கோவில்களில் உள்ள வழமையான நடைமுறை இது. தலைமீது வைத்து ஆசீர்வதிக்கப்படும் முடி போன்றதுவே "சடாரி" எனப்படுகிறது.

கிழக்குப் புறம் தவிர்ந்த ஏனைய மூன்று உட்புற சுவர்களிலும் மொத்தம் 12 இடங்களில் 10' நீளமும் - 5அடி உயரமும் கொண்ட மாடங்கள் காணப்படுகின்றன. உட்புறம் எதுவுமில்லாமல் வெற்றாகவே காணப்பட்ட இந்த மாடங்களின் விளிம்புகள் சுத்தமான தேக்கு மரங்களின் கடைச்சல் வேலைப்பாடுகளுடன் நேர்த்தியாகக் காணப்பட்டன. விசேடமான திருவிழாக் காலங்களில், வெண்பளிங்கு ரூபத்தினாலான ஸ்ரீமத் நாராயண மூர்த்தியின் பல்வேறு அவதாரங்களை முழுமையான அலங்காரத்துடன் (இந்த மாடங்களில்) வணக்கத்திற்காக வைக்கப்படுமென அர்ச்சகர்கள் கூறினார்கள்.

ஸ்ரீ லக்சுமியின் சந்நிதானம் தனிக் கோவிலாக தென்மேற்கு மூலையில் காணப்படுகிறது. நிறைவான அலங்கரிப்புடன் நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீ லக்சுமி அருள் பாலிக்கிறார். சந்நிதியைச் சுற்றிய வெளிச்சுவர் மாடங்களில் ஸ்ரீ லக்சுமியின் பல்வேறு தோற்றங்கள் காணப்படுகின்றது. வடமேற்கு மூலையில் தனிச்சந்நிதியில் ஸ்ரீ ஆஞ்சநேயர் உள்ளார். சுவர் மாடங்கள் மூன்றிலும் ஸ்ரீ ஆஞ்சநேயரின் மூவகைத் தோற்றம் காணப்படுகிறது.

வழமையான யாகசாலை மூலையில் ஸ்ரீ சத்திய நாராயண பகவானும், கோபுர வாசலின் மறுபக்கம் (தென் கிழக்கு மூலையில்) ஸ்ரீ பாலாஜி, ஸ்ரீதேவி - பூதேவி சமேதராகவும் வீற்றிருக்கின்றனர். வெண் பளிங்கினால் ஆக்கப்பட்டுள்ள இந்தச் சொரூபங்கள் மணிகளும் - முத்துக்களும் கொண்ட பட்டாடைகளின் அலங்கரிப்பில் ஜொலிக்கின்றன.

வட இந்தியர்களின் பூரணமான நிர்வாகத்தில் உள்ள ஸ்ரீ பாலாஜி கோவிலை தரிசிப்பதற்கும் வட இந்தியாவிலிருந்தே கூடுதலான பக்தர்கள் வருகின்றார்கள். இந்தக் கோவிலின் அழகும்- நேர்த்தியும் நம்மவர்களையும் பெருமளவில் கவர்ந்திழுப்பதால் புலம்பெயர் தமிழ் மக்கள் பலரும் வேல்ஸ் முருகனைத் தரிசிக்கச் செல்லும் வேளை ஸ்ரீ பாலாஜியின் தரிசனம் கண்டே திரும்புகிறார்கள். அற்புதமான ஒரு கோவிலைப் பார்த்த மகிழ்வோடும், ஸ்ரீ பாலாஜியின் தரிசனமும் கிடைக்கப்பெற்ற மனநிறைவோடும் நாமும் வீடு திரும்புகிறோம்.

வெற்றிக்கு திறமையைவிட ஊக்கமே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

**03.04.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "குறள் காட்டும் நெறி"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

**10.04.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "திருப்புகழ் அமிர்தகானம்"

வழங்குபவர் :- திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

**17.04.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**24.04.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு Dr. V. பாலகிருஷ்ணன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளை. அதிபர்]

208ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org